கலியாணசுந்தரம்

— அல்லது —

வேலியே பயிரை மேய்ந்த விந்தை !

UNIVERSITY LIBR
1957
MADRAS

வடுவூர்

கே. துரைசாமி ஐயங்கார் B.A.

MADURAI

எம். எஸ். ராமுலு கம்பெனி
286, எஸ்பிளனேட் — சென்னை-1.

சகல உரிமைகளும் பதிப்பாளருக்கே.

இரண்டாம் பதிப்பு: 1954

விலை ரூ. 2—0—0

1324

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

LIBRARY

கலியாணசுந்தரம்

அல்லது

வேலியே பயிரை மேய்ந்த விந்தை

1

ஓட்டைப் பானையும் ஒருகைப் பூனையும்!

தமிழ் நாட்டில் உள்ள பட்டணங்களில் பழமையானதும், பெருமை பெற்றிருந்ததும் எதுவென்றால், சுயமரணபுரம் என்ற பெயரையே பெரும்பாலோர் குறிப்பர். அது ஜில்லா கலெக்டர், ஜில்லா ஜட்ஜ் முதலிய ஏராளமான தற்கால உத்தியோகஸ்தர்களின் தலைமையிருப்பிடம். அந்தப் பட்டணத்திற்கு இருதயம் போன்ற ஜீவாதாரமான பகுதியைச் சுற்றிலும் சமசதுரமான நான்கு இராஜவீதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீதியும் சுமார் முக்கால் மைல் நீளமிருக்கலாமாயினும், அது இரண்டு பக்கங்களிலும் பெரும்பாலும் இரண்டு மூன்று உப்பரிகைகளைக் கொண்ட அழுத்தமான உயர்ந்த மாளிகைகளே அடரப் பெற்றதாய் நிரம்பவும் கம்பீரமான தோற்றமுடையதா யிருக்கிறது.

அந்த சுயமரணபுரத்தில் உள்ள வக்கீல்களில் பெரிய வாயாடி வம்பர் யாரென்றால், நாராயண ஐயர் என்று சிறிய குழந்தைகள் கூடச் சொல்லும். ஆனால், அவர் அவ்வாறு வாயாடியா யிருந்ததிலிருந்து, கச்சேரிகளில் வழக்குகளை நடத்துவதில் அவர் அபார சாமர்த்தி

யம் வாய்ந்தவரென்றோ, அவர் மற்ற எல்லோரையும் விட அதிகப் பிரபலமடைந்தவரென்றோ, அவர் ஏராள மாகப் பொருளைத் திரட்டிவிட்ட தனிகரென்றோ எவ ரும் எண்ணுதல் தவறு. அவர் மிக அபூர்வமான சுபா வம் வாய்ந்தவர். கச்சேரிக்கு வெளியில், தமது வீட்டி லும், வேறு எந்த இடத்திலும் இருந்தபோது, அவர் ஓயாமல் சளசளவென்று ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி சம்பந்தா சம்பந்த மில்லாமல் பேசி, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டு, எவரையே னும் புரளி பண்ணிக் கொண்டே யிருப்பார். கூத்தில் கட்டியக்காரன் சொல்லைக் கேட்டு எல்லோரும் மகிழ்ச்சி கொண்டு சிரிப்பதுபோல அவருடைய அகம்பாவித யூகங்களையும், விபரீதப் புரளிகளையும் கேட்டு எல்லோ ரும் ஆநந்தமாக நகைப்பர். அதிலிருந்து அவர் கச்சேரிக் குள்ளும் அப்படியே மூச்சுவிடாமல் பேசி, நீதிபதியைத் தமது வசப்படுத்தி விடுவாரென்று எவரேனும் சம் சயித்து கச்சேரிக்குப் போய்ப் பார்த்தால், அவர் இருக் குமிடத்தை 'சர்ச்லைட்' போட்டுத் தேடிப் பார்த்தே கண்டுபிடிக்க வேண்டியதாகும். அவரை நம்பி, எவரும் தமது வழக்கை அவரிடம் ஒப்படைப்பதுமில்லை; தப்பித் தவறி மாசிக்கொன்று மகாமகத்திற் கொன்றாய், அவர் ஏதேனும் ஒரு விண்ணப்பம் போட்டு, பேச வாயைத் திறந்தால், நீதிபதியும், எதிர்க்கட்சி வக்கீலும் உடனுக் குடன் வழிமறித்து, வழக்கிற்கு சம்பந்தமில்லாமல் அவர் பேசுகிறாரென்று கூறி, அவர் வாயைத் திறக்காதபடி செய்துவிடுவர். அவர் கொடுத்த மனு, அவர் பேசிய தற்கு முன்னரே தள்ளப்பட்டுப் போயிருக்கும்.

ஆகவே, வக்கில் உத்தியோகத்தில் அவருக்கு வரு மானம் பெரும்பாலும் பூஜ்யமென்றே நாம் சொல்ல வேண்டுமானாலும், அவருக்குப் பூர்வீகமா யிருந்துவந்த நிலங்களிலிருந்து அவருடைய குடும்பத்திற்குத் தேவை யான சாப்பாட்டு தானியதவசங்கள் வந்துகொண்டிருந் தன; அவர் மனைவியை இழந்த விதுரர். அவருக்குத்

தம்பி யொருவர் இருந்தார். பின்னவர் ஒரு ஜவுளிக் கடையில் குமாஸ்தா வேலை பார்த்து, மாதம் முப்பது ரூபாய் சம்பாதித்து வந்தாராதலால், அதுவே வக்கீலின் வீட்டு இதர செலவுகளுக்கு உபயோகப்பட்டது. இளைய வர் விவாகமாகாத யௌவனப் பருவத்தினர். இருவருக் கும் சமையல் செய்து போடவும், இதர குற்றேவல் களைச் செய்யவும் ஒரு வேலைக்காரன் எப்போதும் வீட் டோடு இருந்தான்.

இவ்வாறு பூர்விக நிலத்தின் மூலமும், தம்பியின் மூலமும் தவறாமல் வந்துகொண்டிருந்த மொத்த வரு மானம், அவருடைய தேவைகளுக்குப் போதுமானதா யிருந்தமையால், அது அவருடைய மனத்தில் ஒருவித அசட்டுத் துணிவையும், துடுக்கான இயல்பையும் உண் டாக்கி விட்டதாகையால், அவர், மற்ற வக்கீல்கள் காக்கை பிடித்துக் கரடக தமனக நடலம் நடித்து நற் பெயரும், பொருளும் சம்பாதித்ததற்கு மாறாக, ஐயர் போக்கிரி, நம்பிக்கைக்கு அருகர் மற்றவர் என்பன போன்ற அரிய கீர்த்தியை மிக சுலபத்தில் தேடிக் கொண்டார். அவர் ஜில்லா ஜட்ஜ் முதலிய எவரையும் இலட்சியம் செய்யாமல், தாறுமாறாகப் புரளிகளை யெல் லாம் ஜோடித்து பகிரங்கமாய் வெளியிடுவாராதலால் மற்ற வக்கீல்கள் அதையே ஓர் ஆதாரமாய் உபயோ கித்து, அதை ஷை நியாயாதிபதிகளிடம் தந்திரமாகத் தெரிவித்துக் கோள் மூட்டிக் கலக நெருப்பைப் பற்ற வைத்தபடி இருந்தனராதலால், எல்லோருடைய மனதி லும், நாராயண ஐயர் மீது பெரும் அருவருப்பும், கெட்ட அபிப்பிராயமும், கோபமும் பெருகிக்கொண்டே வந்திருந்தன வாதலால், அவர் எப்போதாவது உண் மையிலேயே ஒழுங்கான வழக்கைக் கொண்டுபோனால் கூட, நீதிபதிகளிடமிருந்து பொறுமையான பரிசீலனை யும், ஒழுங்கான நீதியும் அவருக்குக் கிடைப்பதில்லை.

ஆயினும் ஐயர் அதே நிலைமையில் இருந்திருந்து பழகிப்போய்விட்டா ராதலால், அவர் எதைப்பற்றியும்,

எவரைப்பற்றியும் இலட்சியமே செய்யாமல், எப்போதும் குதூகலமாகவே இருக்கப் பழகிக்கொண்டிருந்தார்.

அவருக்கு சுமார் நாற்பது வயதிருக்கலாம். அவர் நடுத்தரமான உயரமும், இரட்டை நாடியான பருமனும், மாநிறமான தோற்றமும் உடையவர். அவர் எப்போதும் விலை உயர்வான ஆடைகளையே பகட்டாயணிவாராதலால், அவரைக் காண்போர் அவரிடம் பெரிதும் மதிப்பு வைத்து அவர் பெரிய மனிதர் என்ற அபிப்பிராயத்தைக் கொள்வர். அவருடைய கைவிரல்களில் எப்போதும் இரண்டு மூன்று மோதிரங்கள் மின்னிக்கொண்டேயிருந்தன. இடது கையின் மணிக்கட்டில் தங்கச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட ஒரு சிறிய கடிகாரம் காணப்பட்டது. அவர் எங்கேயாகிலும் வெளியில் சென்றால், மினுமினுப்பாய், குண்டாய், வெள்ளிப்பூண் கட்டப்பெற்றிருந்த ஒரு சோட்டாத்தடியை ஊன்றிக்கொண்டு நிமிர்ந்து கம்பீரமாகச் செல்வாராதலால், அது பெரிய அதிகாரத் தோற்றமாயும், தாம் எவருக்கும் அஞ்சுகிறவரும், எவரையும் இலட்சியம் செய்கிறவரும் அன்று என்னும் அபிப்பிராயத்தை உண்டாக்கக் கூடிய தோற்றமாயுமிருக்கும்.

அவருடைய வீட்டில் முன்புறத்தில் இருந்த ஒரு பெரிய அறையில் அவர் எப்போதும் ஒரு சாய்மான நாற்காலியில் படுத்து, தமது கையிலுள்ள ஏதேனும் ஒரு பத்திரிகையை, அல்லது, புஸ்தகத்தைப் படிப்பதும், இடையிடையில் எவருடைய வருகையையோ எதிர்பார்ப்பவர் போல, ஜன்னல் வழியாய் ஆவலோடு தமது பார்வையை வீதிப்பக்கம் செலுத்துவதுமாகவே இருந்து பொழுதைப் போக்குவார். தப்பித் தவறி புதிய கட்சிக்காரர் எவர்களேனும் தமது வீட்டிற்கு வரமாட்டார்களா வென்று அவர் எதிர்பார்த்தபடியே இருப்பார். கட்சிக்காரர் எவரும் வரமாட்டார்களானாலும் வேறு பல திறப்பட்ட மனிதர் எவரேனும் அடிக்கடி வந்துபோனபடியே இருப்பர்

சுயமரணபுரத்தில் ஊர்வம்பு வளர்த்துப் பேசுவதில், வக்கீல் நாராயண ஐயரை விட ஒரு படி மீறியவர் இன்னொருவர் இருந்தார். அவர் அந்த வீட்டில் தபால்கள் பட்டுவாடாச் செய்த தபால்காரரான மஸ்தான் ஸாயப்பு. வக்கீலுக்கு தபால் கடிதங்கள் மிக அரிதாகவே வருவது வழக்கம். ஆனால் எப்போதாவது, சிலர் தமக்குப் பணம் முதலியவை கொடுக்க வேண்டியவர்களுக்கு நாயுடுவின் மூலம் நோட்டீஸ் அனுப்புவார்கள். ஒவ்வொரு நோட்டீஸுக்கும் மற்ற வக்கீல்கள் 2 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் பெற்றுக்கொண்டால், ஐயர் நோட்டீஸ் ஒன்றுக்கு அரை ரூபாய் பெற்றுக்கொள்வார். அந்த ஆதாயத்தைக் கருதி சிலர் அந்த விஷயத்தில் ஐயரின் உதவியை நாடினர்.

அவ்வாறு நோட்டீஸ் அனுப்பினால், எதிராளி அதைப் பெற்றுக்கொண்டதாகக் கையெழுத்துச் செய்யப்பெற்ற ரசீது திரும்பி வக்கீலுக்கு வரும், சில சந்தர்ப்பங்களில், ஷை நோட்டீஸுக்கு மறுமொழியும் ரிஜிஸ்டர் கடிதமூலம் அவருக்கு வரும். இவ்வாறு வருபவை சில தினங்களுக் கொன்றாகவே வருமானாலும், தபால்கார மஸ்தான் ஸாயப்பு தினம் அவசியம் அவரிடம் வராமல் போகமாட்டார். இங்கிலீஷில் மேல்விலாசமுள்ள கடிதம் எதையேனும் ஒன்றை எடுத்துக்கொண்டு புன்னகை செய்தபடி, "ஸலாம் ஸார்; என்ன போங்கோ, இங்கிலீஷ் தெரியாத முட்டாளுங்கள்ளாம் இங்கிலீஸ்லே மேவிலாஷம் எழுதிப்புட்றுங்கொ, அதைப் படிக்கறதுக்குள்ளற, நம்ம தாவு தீந்துபோவுதுங்கொ. இதெப் பாருங்கோ. இதிலே என்னச்சும் தலேகாலு புரியாதா?" என்று கூறி அதை அவரிடம் காட்டுவர்.

வக்கீலுக்கு அந்த தபால்காரரிடம் நிரம்பவும் விசுவாசமுண்டாதலால், அவர் எவ்வளவுதான் அகாரணமாய் வந்தாலும், பேசினாலும், வம்பு வளர்த்தாலும், வக்கிலுக்கு அவரிடம் கோபம் உண்டாகாது; தாமும் அவருக்குத் தக்கபடியே சிரித்துப் புரளி செய்தபடி அவ

ருடன் பேசுவார். தபால்காரர் உடனே இராஜீயம் முதலிய ஊர் வர்த்தமானங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விடுவார். "என்னுங்கொ ஸார், ஒரு சங்கதி பேசிக்கறுங்களே, அது நெசமா யிருக்குமா?" என்று பரம ரகசியமாக ஸாயப்பு கூறுவார்.

வக்கீல்:—என்ன சங்கதி?

தபால்காரர்:— அன்னிபெஸண்டு தொரைஸாணி அம்மாள் மூளைக்குள்ளற என்னதான் இருக்குதுன்னு பாக்கணும்னு, ஒரு ஜெர்மனிக்காரன், மண்டை ஓட்டுலெ நோவில்லாமெ ஆபரேஷன் பண்ணி, எலும்பையெல்லாம் பிரிச்சுப்புட்டு மூளையை போட்டோ எடுத்து, திரியும் மண்டை ஓட்டெவச்சு சரிப்படுத்தி, அவருக்குக் கொஞ்சங்கூடத் தொந்தரவு இல்லாமெ, அந்த மாதிரி செய்யறத்துக்கு லச்சம் ரூபா கொடுக்கறேன்ட்ருனும். அந்த அம்மா ஒப்புக்கமாட்டேங்க ருங்களாமே? இது நெஸமா இருக்குமா ஸார்?—என்பார்.

அதைக் கேட்டு வக்கீல், "இதெல்லாம் அவுட்டா, ஸாயப்பு. இந்த அம்மாளெச் சேர்ந்தவன் எவனுவது இப்படி. யெல்லாம் புருடை விட்டிருப்பான்" என்பார்.

இவ்வாறு அவர்கள் இருவரும் சுமார் இரண்டுமணி காலம் பேசுவார்கள். ஸாயப்புக்குப் பேச்சு அகப்பட்டால், அவர் பொழுது போவதையே கவனிக்க மாட்டார்; அதற்காகத் தமக்குப் போஸ்ட் மாஸ்டார் அபராதம் போடுவதா யிருந்தால்கூட அதையும் பொருட்படுத்த மாட்டார். அதிலும், தமக்கு சரிமட்டத்திலிருந்து சம்பாஷிக்கக் கூடிய வக்கீல் நாராயண ஐயருடன் பேசுவதென்றுல், அதனுல் தம் உத்தியோகமே போய்விடுவதானுல் கூட, 'அது போனுப் போவுது பிஸாத்' என்று துணிந்து சொல்லக் கூடியவர் மஸ்தான் ஸாயப்பு என்னும் சம்பாஷணை ரஸிகர்.

அவ்வாறு சுவாரஸ்யமாக வக்கீலிடம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் ஸாயப்பு, அவருக்கு வந்திருக்கும்

நோட்டீஸ் முதலியவைகளைக் கொடுக்க மறந்து, அவ்விடத்தை விட்டுப் பல வீதிகளுக்கப்பால் போய், திடீரென்று நினைத்துக்கொண்டு மறுபடி ஓடிவந்து, அவைகளைக் கொடுத்துவிட்டுப் போவதும் சர்வ சாதாரணமாய் நடந்துவந்த காரியம்.

அந்த ஊரில் முக்கியமான ஒரு சம்பவம் நிகழ்ந்த காலத்தில், அவர் அதேபோலச் செய்து வக்கீலுடன் வெகுநேரம் சம்பாஷித்திருந்துவிட்டு, சுமார் ஒரு மைல் தூரத்திற்கு அப்பாலிருந்த போஸ்டாபீஸுக்குப் போன சமயத்தில் வக்கீலுக்கு ஒரு கடிதம் வந்திருந்ததைக் கொடுக்காமல் வந்து விட்டதை யறிந்து, உடனே ஓட்டமும் நடையுமாக திரும்பி வந்து கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அன்றையதினம் அவர்களிருவருடைய மனதையும், கவனத்தையும் அவ்வளவு சுவாரஸ்யமாகக் கவர்ந்த விஷயம் உண்மையிலேயே எவரையும் திடுக்கிடச் செய்யத் தக்கதே.

அன்றையதினம் காலையில் தபால் ஆபீஸை விட்டுப் புறப்பட்டது முதல் மஸ்தான ஸாயப்பு தமக்குப் பழக்கமான மனிதர் எவரையும் சந்தித்தாலும், அவரை அங்கங்கு நிறுத்திவைத்து ஷை சம்பவத்தைப் பற்றிப் பேசி மண்டகப்படி நடத்திக்கொண்டே வந்தாராதலால், அவர் வக்கீல் வீட்டை யடைந்தபோதே, வழக்கத்தை விட, இரண்டு மணி காலம் கழிந்து போய்விட்டது.

அவருடைய வருகையை நிரம்பவும், ஆவலோடு எதிர் பார்த்திருந்த வக்கீல், "என்ன ஸாயப்பு, இன்னைக்கி இவ்வளவு லேட்?" என்றார்.

ஸாயப்பு:—நம்ப ஊர்லெ சாஸ்திரியாரு ஒருத்தரு அன்னிபெஸன்ட் சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறாரே. அதுலெ முந்தாநா ராவுலெ நடந்த சங்கதி ஒங்களுக்குத் தெரியுமா?

வக்கீல்:—(வியப்போடு) என்ன நடந்தது? ஏதாவது கொலை கிலை நடந்து போச்சா? அல்லது சாஸ்திரி யாருக்கே ஏதாவது அபாயம் வந்துட்டுதா?

ஸாயப்பு:—இல்லீங்கொ, இல்லீங்கொ. குருபீடத் துக்கே அபாயம் வந்துடிச்சுங்கொ. போன வாரத்துலே, அன்னிபெஸன்ட் அம்மாளோடே செலை பண்ணி வச் சாங்களா! அதெ ஆரோ கொண்டு, போயிட்டானுங்கொ! அந்த சங்கதி ஒங்களுக்குத் தெரியாதா! நேத்து பகல்லே ருந்து ஊரெல்லாம் அதே பேஸாத்தான் பேஸராங்கொ. நம்பிளுக்கு நேரமாச்சுன்னு வந்தாக்கூட கையெப் புடிச்சு நிக்கவச்சு அதே பேஸாப் பேஸுறுங்கொ. அதனாலேதான் நாம்ப வர்றத்துக்கு இம்பிட்டுத் தாம ஸங்கொ.

வக்கீல்:—என்ன, என்ன, திருட்டுப்போனது அன்னிபெஸன்டின் செலையா, சேலையா?

ஸாயப்பு:—(சிரித்துக் கொண்டு) அன்னிபெஸன்ட் அம்மாளுக்கு சேலை ஏதுங்கொ ஸார்! அவுங்க ஆம்புள்ளை மாதிரி ஜோரா ஜரிகை அங்கவஸ்திரம் போட்டுக்கிற தாச்சே.

வக்கீல்:—ஆமா ஸாயப்பு, அதை நான் சுத்தமா மறந்துட்டேன். அப்படியானா அந்த அம்மாளோடே செலையா போயிட்டுது? சாஸ்திரியார் ஆயிர ரூபாகுடுத்து வாங்கி வச்சு இன்னம் ஒரு மாதங்கூட ஆகவில்லையே! அது என்ன சலவைக்கல் செலையா?

ஸாயப்பு:—இல்லீங்கொ ஸார். அதை ஒரு மாதிரி மொழுக்கிலைலே செஞ்சிருந்தாங்களாம். நெஜமா அந் தம்மா என்னமா இருந்தாங்களோ, எம்பிட்டு ஒசரம், பருமன் இருந்தாங்களோ, என்ன நிறத்துலே ஒடம்பு, உடுப்பு எல்லாம் இருந்திச்சோ அப்படியே அவுங்க நிக்கி ருராப்பலேயே இருந்துதுங்கொ ஸார். அதுக்குள்ளற எத்தினி வெசை வச்சிருந்தது தெரியுமா? அவுங்கோ

ஆயிசு காலத்துலெ, பல எடங்கள்ளே பெரஸங்கம் பண்ணத்தே யெல்லாம் கிராமபோன்லே புடிச்சு, அதுக்குள்ளற வச்சிருந்தாங்கொ. ஒரு வெசையை முடிக்கிவிட்டா, அந்த அம்மா உசிரேடே நின்னு, ஒடெம்பெ இப்படி அப்பிடித் திருப்பி, கை காலெயெல்லாம் ஆட்டிப் பேசறாப்புலேயே அது செய்யும். கண்ணு, எமையெல்லாம் தொறந்து தொறந்து மூடும். வாயிலே யிருந்து பெரஸங்கம் வரும், அப்ப வாயும் தொறந்து தொறந்து மூடும். அது செலேன்னு தெரிஞ்சுக்காதவங்க புச்சாப் பாத்தா, நெஜம்மா அந்தம்மாதான் நின்னு பேசறுங்கோன்னு எண்ணிக்குவாங்கொ. அந்தச் செலெ ஆயிரம் ரூபாய்க்கி மலிவுதானுங்கொ. இந்த ஒலகத்துலேயே அந்த மாதிரி ஆரும் பண்ணதே யில்லீங்களாம் ஸார்!

வக்கீல்:—அப்பிடித்தான் சொல்லிண்டாங்க. அதை இந்த ஊருமராட்டிய சித்திரர்க்காரரு ஒருத்தருதான் செஞ்சாராம்.

ஸாயப்பு:—ஆமாங்கொ. ஆனாலும் இந்த ஊருமராட்டியரு இருக்கிறுங்களே அவுங்களுக்கு, கண் கண்டத்தைக் கையி செஞ்சுடுதுங்க ஸார். ரொம்ப புத்திசாலிங்கொ!

வக்கீல்:—அப்பிடி யில்லாமெயா அவுங்க ராஜாவா ஒலகத்தைக் கட்டி யாண்டாங்கொ.

ஸாயப்பு:—இந்த செல வேலெ ஒண்ணே அவுங்கொ சாமார்த்தியத்தைக் காட்டுதுங்களே. இதெ ஆரு லவட்டிக்கினு போயிருப்பாங்கொ. கொண்டு போனவங்கொ தகிரியமா அதை வெளியே வைக்க முடியுமா அதெ வச்சுக்கினு என்னு ஸெய்யறதுங்கொ. அதல்ல நம்பிளுக்கு விளங்கல்லீங்கொ. மெழூகெ உருக்கினு, இன்னக்கெல்லாம் பத்து ரூபா மொளுகு தேறுங்களா? அந்த கிராமபோன் பிளேட்டை வெளியே காட்ட முடியுமா?

வக்கீல்:—அப்பிடி யெல்லாம் இருக்காது ஸாயப்பு. அதைக் கொண்டுபோயிப் பிரிச்சுப் பார்த்து, அதை எப்

பிடி செஞ்சிருக்கான்னு கத்துண்டு, தாங்களும் அதே மாதிரி செலே பண்ணி வித்தா, ஆயிரம் பதினாயிரம் அடிச்சுடலாம்னு, எவனாச்சும் தொழிலாளிதான் அதைக் கொண்டு போயிருக்கனும். நம்ப ஊருலேதான் ஒவ்வொரு போலீஸ்காரனும் ஒவ்வொரு புலி. அவுங்க என்ன செய்யப்போறாங்கன்னு தெரியல்லெ.

ஸாயப்பு:—என்னாங்கொ ஸார், நம்ப போலீஸ் அஸிஸ்டென்ட் சூப்பிரண்ட் சுந்தரம் இருக்காருங்களே, அவுங்கொ, தந்திரத்துலெ நரிங்கொ. ஒரு சணத்துலெ ஆளெக் கண்டு புடிச்சுடுவாருங்கொ.

வக்கீல்:—எல்லாரும் உப்பில்லாமெக் கலக் கஞ்சியெக் குடிக்கிறவங்கதான். ஆளு வசமா ஆப்டா, கப்பினு புடிச்சுடுவாங்க—என்றார்.

அப்போது, மற்ற தெருவுகளில் இருக்கும் வர்த்தகர் பலர், அவ்வளவு அகாலமாகியும் தபால்காரர் வராததைக் கண்டு, தங்கள் ஆள்களை அனுப்ப, அவர்கள் தபால்காரரைத் தேடிக்கொண்டே வந்து, அவர் வக்கீலுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கக் கண்டு, அவரை அழைக்கவே, ஸாயப்பு கடிகாரத்தைப் பார்த்து, தாம் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டதை அப்போதே உணர்ந்து, ஓட்டமாக வெளியில் ஓடிவந்து, இதற்குமேல் கடிதங்களை மற்ற இடங்களில் பட்டுவாடா செய்துகொண்டே ஆபீஸ் போய்ச் சேர்ந்தார்.

அப்போதே, தாம் வக்கீலின் கடிதங்களைக் கொடுக்க மறந்து வந்து விட்டதாகக் கண்டு, நாம் மேலே குறிப்பிட்டபடி ஓட்டமும் நடையுமாக திரும்பி வந்து வக்கீலின் வீட்டை யடைந்து, ஒரு கடிதத்தையும், ஒரு ரசீதையும் கொடுத்து அவருக்கு சமாதானம் சொல்லி விட்டுப் போய்ச் சேர்ந்தார்.

வக்கீல் நாராயண ஐயர் ரசீதை அலட்சியமாகப் போட்டு விட்டு, கடிதத்தை எடுத்து அதன் உறையைக்

கிழித்து, கடிதத்தை வெளியே இழுத்துப் பிரித்து, படிக்கவாரம்பித்தார். அது அடியில் வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

ஸ்ரீ, நாராயண ஐயர், B. A., B. L.,
வக்கீல், தெற்கு ராஜ வீதி, சுயமரணபுரம்.

ஐயா, மிக அவசரமும் அவசியமுமான ஒரு விஷயம் சம்பந்தமாக நான் உங்களோடு பேச விரும்புகிறேன். நீங்கள் தக்க கனவானுதலால், உங்களுக்கு சட்டப்படி சம்மன் அனுப்ப நாங்கள் விரும்ப வில்லை. நாளைய தினம் 26-ம் தேதி பகல் 2-மணிக்கு நீங்கள் தவருமல் நமது காரியாலயத்திற்கு வந்து சந்திக்கக் கோருகிறேன்.

சுந்தரம்
போலீஸ் அஸி. சூபரின்டென்டென்ட்.

என்று எழுதப் பட்டிருந்த கடிதத்தைப் படித்து வக்கீலின் திருஷ்டி எதிரில் இருந்த தேதிப் பெட்டியில் சென்றது. அன்றைய தினம் தேதி 26-என்பது தெரிந்தது. அப்போது மணி பன்னிரண்டு ஆகும் சமயம். தான் இன்னும் இரண்டு மணி காலத்தில் போலீஸ் சூபரின்டென்டினுடைய காரியாலத்தில் போயிருக்க வேண்டுமென்று அவர் உணர்ந்தார். அந்தக காரியாலயம் ஊருக்கு வெளியில் இருந்தது. அவருடைய வீட்டிற்கும் அதற்கும் சுமார் இரண்டு மைல் தூரம் இருக்கலாம்.

தாம் உடனே எழுந்து தமது ஸ்நானம் போஜனம் முதலிய காரியங்களை முடித்துக் கொள்ள வேண்டுமென்று அவர் கருதினுராதலால், அவருடைய சரீரம் தானுகவே இயங்கி, ஆகவேண்டிய காரியங்களைச் செய்து கொண்டே போயிற்று. ஆனல் அவருடைய மனது பெருத்த சஞ்சலத்தில் ஆழ்ந்து, பலவிதமான சம்சயங்களையும் யூகங்களையும் செய்து தவித்திருந்தது.

அவர் அரை மணியில் தமது காரியங்களையெல்லாம் முடித்துக்கொண்டு, தாம் சரியாக ஒன்றேகால் மணிக்குப் புறப்பட்டுக் குதிரை வண்டியில் போக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு, இடையில் இருந்த முக்கால் மணி காலம் தாம் சாய்மான நாற்காலியில் சாய்ந்து இளைப்பாறலாமென்று நினைத்து, அப்படியே உட்கார்ந்து கண்களை மூடி உடம்பின் அங்கங்களைத் தளர விட்டார்.

அப்போது, "ஸார், ஸார், வக்கீல் ஐயா," என்று மிகமிருதுவாக எவரோ கதவருகில் நின்று தம்மை அழைத்ததை உணர்ந்த நாராயண ஐயர் கண்களைத் திறந்து கொண்டு திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து, "யார் அது? இப்படி வரலாமே" என்றார்.

உடனே "நான்தான் பக்கத்து வீட்டுக்காரன்" என்று மிக விநயமாக மறுமொழி கூறியபடி ஒரு மனிதர் அடுத்த விநாடியில் அங்கே பிரஸன்னமானார். அவர் சுமார் முப்பத்தைந்து வயது நிரம்பப் பெற்றவராய், ஒற்றை நாடிப் பருமனும், உயர்ந்த சரீரமும், மாநிறமும் வாய்ந்தவராய்க் காணப் பட்டார். அவர் நெற்றியில் வெள்ளி இரண்டணாவட்டத்திற்குசந்தன பொட்டணிந்திருந்தார். அதுவன்றி இடையில்பஞ்சகச்சமணிந்து, அதற்கு மேல்சட்டைபோட்டு, தலைப்பாகைவைத்திருந்தார். ஆனால் அவருடையதோற்றத்தில்ஒருவேடிக்கை இருந்தது. அவருடைய சட்டையின் வலதுகை தேர்ச்சீலை தொங்குவது போலக் காலியாகத் தொங்கிக் காற்றில் இலேசாய் ஆடும்படி இருந்தது. அவருடைய இடது புஜத்தைவிட வலது புஜம் உள்ளடங்கி யிருந்தது. இவற்றிலிருந்து அவருக்கு வலதுகையே இல்லையென்று எவரும் சுலபத்தில் அநுமானித்துக்கொண்டனர்.

அவர் சுமார் ஒருமாத காலமாய் அண்டை வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் குடியிருந்து வந்தாராதலால், அவர் அடிக்கடி வக்கீலைப் பார்த்து அவருடன்

பேசி பரிச்சயம் செய்து கொண்டிருந்தார். தாம் இரா ணுவ இலாகாவில் பெரிய உத்தியோகம் வகித்திருந்த போது சென்ற யுத்தத்தில் தமது வலது கையை ஒரு குண்டு கொண்டுபோய் விட்டதென்று அவர் வக்கீலுக் குத் தமது வரலாற்றைத் தெரிவித்திருந்தார்.

அவரைக் கண்டவுடன் வக்கீல், "ஓ மிஸ்டர் கலியா ணமா! வாருங்கள். இப்படி நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று அன்பாகக் கூறி உபசரிக்க, மிஸ்டர் ஒற்றைக் கையார் புன்னகை தவழ்ந்த முகத் தோடு நாற்காலியில் அமர்ந்தபடி, "நீங்கள் ஏதேனும் காரியத்தை கவனித்துக்கொண்டிருக்கலாம். அதற்கு இடைஞ்சலாக நான் வந்துவிட்டேனே என்னவோ" என்று தேனும் பாகுமாய் உபசாரமொழி கூறினார்.

உடனே வக்கீல் சந்தோஷ முகமலர்ச்சியோடு, "நான் எந்தக் காரியத்தையும் கவனிக்கவில்லை. இன்று கச்சேரியில்கூட வேலையில்லை. ஒரு மணிக்குமேல் தான், நான் ஓரிடத்திற்குப் போகவேண்டும். அது வரையில் ஒழிவு தான்" என்றார்.

கலியாணம்:—சரி, சந்தோஷம்.

வக்கீல்:—ஐந்தாறு தினங்களாய் உங்களை நான் பார்க்கவில்லையே! நீங்கள் எங்கேயாவது ஊருக்குப் போயிருக்கலாமென்று எனக்குள் வியாக்கியானம் செய்துகொண் டிருக்கிறேன்.

கலியாணம்:—(புன்னகையோடு)நீங்கள் வியாக்கியா னம் செய்தால் அது ஒரு நாளும் தவறாது. உண்மை யில் நான் ஊருக்குத்தான் போயிருந்தேன். ரயில்வண்டி யில் ஏறிய பிறகு, 'அடாடா, வக்கீல் ஐயாவிடம் சொல் லிக் கொள்ளாமல் வந்துவிட்டோமே! என்ற நினைவுண் டாயிற்று.

வக்கீல்:—அதனாலென்ன? சரி, உங்களுக்கு போ ஜனம் ஆய்விட்டதா? எங்கே இப்படி வந்தீர்கள்? என்

னல் ஏதாவது காரியம் ஆகவேண்டுமா, அல்லது சும்மாவே வந்தீர்களா?

கலியாணம் :—போஜனம் ஆய்விட்டது. உங்களைப் பார்த்து ஐந்தாறு தினங்க ளாயிற்றல்லவா. பார்க்கலா மென்றும் வந்தேன்; ஊருக்கு ஒரு கடிதம் எழுதவேண் டும். உங்களுக்கு சௌகரியப்படும் பட்சத்தில் இரண்டு வரி எழுதி வாங்கிக்கொண்டு போகவும் எண்ணினேன். உங்களுக்கு இரண்டு விதங்களில் பிரயாசை கொடுக்கி றேன்.

வக்கீல் :—(சந்தோஷ மலர்ச்சி காட்டி) எனக்கு இரட்டிப்பு சந்தோஷம் உண்டாக்க வந்தீர்கள் என்று சொல்வதே பொருத்தமானது. உங்களுக்குக் கடிதம் எழுதவேண்டுமா? எனக்கு இன்னம் அரைமணி அவகாச மிருக்கிறது. அதற்குள் முடியக்கூடியதா யிருந்தால் சொல்லுங்கள். எழுதித் தருகிறேன். இல்லாவிட்டால், நான் போய்வந்து மாலையில் எழுதித் தருகிறேன்.

கலியாணம் :—ஐந்து நிமிஷம்கூடப் பிடிக்காது.

வக்கீல் :—அப்படியானல் இப்போதே எழுதிக் கொடுக்கிறேன். (காகிதத்தையும் பேனவையும் எடுத்து ஆயத்தமாக வைத்துக்கொள்ளுகிறார்.)

கலியாணம் :—விஷயம் அதிகம் இல்லை. எங்கள் ஊரில் ஒரு போவன்னுப் பேர்வழி இருக்கிறான். அவன் சும்மாவே இருப்பதில்லை. எப்போதும் என் குடும்ப விஷயங்களில் தலையிட்டு கலகத் தீ மூட்டிக்கொண்டே இருக்கிறான். எனக்கு வலது கை போகாமலிருந்த காலத் தில் ஒரு தரம் அவன் அப்படிதான் ஏதோ போக்கிரித் தனம் பண்ணினன். நான் என்ன செய்தேன் தெரியுமா. என் காலில் இருந்த தடித்த செருப்பைக் கழற்றி வைத்துக்கொண்டு, பட்பட்டென்று ஐந்தாறு கொடுத்து விட்டேன். அதற்குப் பிறகு கொஞ்சகாலம் அவன் என் ஜோலிக்கே வராமலிருந்தான். இப்போது நான்

உதவியற்றவ னாய்விட்டேன் என்பதைக் கண்டு மறுபடி கிருத்திருமம் செய்ய ஆரம்பித்திருக்கிறான். அவனைக் கொஞ்சம் வெறட்டி ஒரு கடிதம் எழுதவேண்டும். அவ்வளவே அதிகமில்லை. இதோ சொல்லுகிறேன், எழுதுங்கள்.

"ஐயா, நீ சில வருஷங்களுக்கு முன் என்னிடம் பெற்றுக்கொண்ட விருந்துச் சாப்பாட்டை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட்டது ஆச்சரியமே, பழைய கலியாணம் இறந்து போய்விட்டானென்று நீ கனவு கண்டு, துணிவுகொண்டு, என் குடும்ப விஷயங்களில் அநாவசியமாய்த் தலையிடுகிறாய். சண்டி புரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அதுபோல, பொறுமை முதலிய எதற்கும் ஒரு வரம்புண்டு. அதை மீறி அதிக்கிரமாகப் போனால் எப்பேர்ப்பட்டவரானாலும், அவர் தமது வாலைக் கொடுத்துவிட்டுத் திரும்ப நேருமென்பதை நான் உனக்கு எடுத்துக் காட்டுவது அநாவசியமென்று நினைக்கிறேன். நான் எங்கேயோ ஓர் ஊரில் இருக்கிறேனென்றும், நீ செய்யும் விஷயமெல்லாம் எனக்கு எப்படித் தெரியப்போகிறதென்றும் எண்ணி நீ பல தகாத காரியங்களைச் செய்திருக்கிறாய்; இன்னம் நீ செய்துகொண்டு மிருக்கிறாய். இதைப் படித்த பிறகாவது, நீ அதையெல்லாம் விட்டு, உன்னைப்பற்றி எனக்கு எவ்வித புகாரும் எட்டாதபடி நடந்துகொள்.

இனி உன்னைப்பற்றி புகார் வருமானால், அப்போது உனக்கு என்னவிதமான பிராயச்சித்தம் நடக்குமென்பதை நான் இப்போது சொல்ல விரும்பவில்லை. உனக்கு இஷ்டமானல், அதை நீ அனுபவத்தில் ருசி பார்க்கலாம்."

இவ்வளவே போதுமானது. இப்படிக் கொடுங்கள். நான் இடது கையால் கையெழுத்துச் செய்து, தபாலில், போடுகிறேன்—என்றார்.

அவர் கூறியபடியே கடிதத்தை எழுதிய வக்கீல், அதை அவரிடம் கொடுத்தார்.

அவர் அதைத் தமது இடது கரத்தால் பெற்று ஒற்றைக் கையால் மடிக்கமாட்டாமல், அப்படியே அதைத் தமது சட்டைப் பையில் திணித்துக்கொண்டு, இன்னொரு பையிலிருந்து அரை ரூபாயை எடுத்து வக்கீலிடம் நீட்ட, அவர் அபாரமான மகிழ்ச்சி யடைந்தவராய் அதைவாங்கி மேஜைமீது ஒரு பக்கமாக வைத்துவிட்டு கடிகாரத்தைப் பார்த்தார். தாம் புறப்பட இன்னம் கால்மணி காலம் அவகாசம் இருக்கக் கண்டு, "ஆமா, பக்கத்து வீடு மிகப் பெரிய வீடாயிற்றே, அந்த வீட்டை எடுத்துக்கொண்டு நீங்கள் எப்படி ஏகாங்கியா யிருக்கிறீர்கள். உங்களுக்குப் பொழுது போவது கஷ்டமா யிருக்குமே" என்றார்.

கலியாணம் :-எனக்கு வீடு தேவையாயிருந்த சமயத்தில் இது ஒன்றுதான் காலியாயிருந்தது. இதை எடுத்துக் கொண்டேன். நான் எப்போதுமா ஏகாங்கியா யிருப்பேன். ஏதாவது வியாபாரம் நடத்தலாமென்று நான் நினைத்துக்கொண் டிருக்கிறேன். அப்போது இவ்வளவு பெரிய இடம் எனக்குத் தேவையாகவே இருக்கும். சரி, உங்களுக்கு நேரமாகிறது. நீங்கள் புறப்பட்டுப் போவதற்கு ஆயத்தமாகவேண்டும். நான் உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறேன், மறுபடி வந்து பார்க்கிறேன்—என்று கூறியபடி தமது ஆசனத்தைவிட்டு எழுந்திருக்க, வக்கீல் அவருக்கு அனுமதி கொடுத்தபடி தாமும் எழுந்தார்.

எழுந்தவர் உள்ளே சென்று, தமது உத்தியோக உடையான நான்கு கைக் கருப்புச் சட்டை முதலியவற்றை யணிந்து, சனிபகவான் வேஷத்தில் வெளிப்பட்டு வீதியில் நின்று, ஏதேனும் குதிரைவண்டி கிடைக்குமோ வென்று தமது பார்வையை அப்புறம் இப்புறம் திருப்பி உற்று நோக்கினர்.

அப்போது எதிர்த்த வீட்டுத் திண்ணையில் சாய்ந்து, அவருடைய வீட்டை ஒரு மனிதன் சவனித்துக்கொண்

டிருந்ததை அவர் பார்த்தார். சற்று நேரத்திற்கு முன்னர் அவர் அடுத்த வீட்டுக் கலியாணத்தோடு முன்னறையில் சமபாஷித்திருந்த காலத்திலும், அந்த மனிதன் அங்கே நின்று தமது வீட்டையே கவனித்துக்கொண்டிருந்ததைக் கண்டாராதலால், அவன் நீடித்து நின்று கொண்டு இருந்தது, அவருடைய மனதில் பெரிய சம்சயத்தை உண்டுபண்ணியது அவன் வாட்டசாட்டமாய் செக்குலக்கைபோ விருந்தது, அவன் இரகசியப் போலீஸ் இலாகாவை சேர்ந்த ஒற்றன் என்னும் எண்ணம் வக்கீலின் மனதில் உதிக்க வாரம்பித்தது.

அன்றைய தபாலில் போலீஸ் அதிகாரியிடத்திலிருந்து கடிதம் பெற்றது முதல் அவருடைய மனதில் ஏற்பட்டிருந்த கலவரம் இன்னம் பன்மடங்கு அதிகரிக்கலாயிற்று. இரகசிய போலீஸ்காரன் என்ன காரணத்தினுல் தம்மைக் கவனித்துக்கொண் டிருக்கிறுன் என்பதை நிச்சயிக்க மாட்டாமல், வக்கீல் பெரிதும் திகிலும், குழப்பமும் கொண்டு தத்தளிக்கலானுர். அவர் வீதியையடைந்து பார்த்த காலத்தில், அவன் உடனே சரேலென்று தனது பார்வையை வேறு பக்கத்தில் திருப்பியது அவருடைய சம்சயத்தை உறுதிப்படுத்தியதேயன்றி, அவனுக்கும் தமக்கும் சம்பந்தமில்லையென்ற எண்ணத்தை உண்டாக்கவில்லை.

தம்மீது போலீஸாருக்கு ஏதேனும் சம்சயம் ஏற்பட்டிருக்குமோவென்றும், அதற்காகவே அவர்கள் அவ்வித நடவடிக்கைகளை எடுத்துக்கொண் டிருக்கிறுர்களோ வென்றும் அவர் சந்தேகித்தபடி வீதியோடு நடக்கலானுர். தெற்குவீதியும் கிழக்கு வீதியும் ஒன்றுய்ச் சேருமிடத்தில், சில குதிரை வண்டிகள் நின்றனவாதலால், தாம் அதுவரையில் நடந்தே செல்லவேண்டுமென்று கருதி அந்த திக்கில் நடக்கலானுர்.

அப்படி நடந்தவர் சுமார் அரை பர்லாங்கு தூரம் சென்றபின் திரும்பிப் பார்த்தார். இரகசியப் போலீஸ்

ஆசாமி சுவரில் சாத்தப்பட்டிருந்த தனது சைகில் வண்டியில் ஏறி மெதுவாக வந்துகொண் டிருந்தது தெரிந்தது. அவர் திடுக்கிட்டுப் போனுர். அவருடைய ஆச்சரியம் அளவிட இயலாததாய்ப் பெருகியது. தாம் அடிக்கடி இராஜீய விஷயமாய்ப் பேசி அபிப்பிராயங் களை வெளியிட்டுக்கொண் டிருப்பதைக் கருதி போலீ ஸார் தம்மைப்பற்றி சம்சயிக்கிருர்களோ வென்று நினைத்த வக்கீல் தளர் நடையாக நடந்து குதிரை வண்டி கள் இருந்த திக்கில் சென்று சில நிமிஷ காலத்தில் ஒரு குதிரை வண்டியை அமர்த்தி அதில் ஏறிக்கொண்டு பின்புறம் பார்க்க, அப்போதும் போலீஸ்காரன் சைக ளின் விசையை அடக்கி மெதுவாக வந்தது அவருக்கு பிரத்யக்ஷமாகத் தெரியவே, போலீஸ் அதிகாரியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டபடி தாம் வருகிருரா என் பதை கவனிக்கும்படி அவன் ஒருகால் அனுப்பப்பட் டிருப்பானே வென்றும் வக்கீல் சந்தேகித்தபடி வண்டி யில் சென்றுர்.

அவ்வாறு சென்றவர் அரைமணி காலத்தில் போலீஸ் தலைமை ஆபீசை அடைந்து, கீழே இறங்கி, வண்டியை அனுப்பிவிட்டு, உட்புறத்திலிருந்த கட்டி டத்தை யடைந்த காலத்தில், அந்தப் போலீஸ்காரன் தனது சைகிலை நிரம்பவும்விசையாக விடுத்துக்கொண்டு வந்து அவருக்குப் பின்னுல் தொப்பென்று பாய்ந்து கீழே இறங்கி நின்று, "ஏன் தயங்கி நிற்கிறீர்கள்? உள்ளே போங்கள். டிப்டி கமிஷனர் உங்களுக்காக காத்திருக்கிருர்" என்ருன்.

வக்கில் திடுக்கிட்டு திரும்பி முறைப்பாக அவனைப் பார்த்து, "அது உனக்கெப்படித் தெரியும்? நீ என் வீட் டிற்கு எதிரிலிருந்தல்லவா வருகிருய்" என்ருர்.

போலீஸ்காரன் :—ஆம், அங்கிருந்துதான் வருகி றேன். நீங்கள் இன்று வருகிறீர்களா வென்பதை கவ

ணிக்கும்படி டிப்டி கமிஷனர் என்னை அனுப்பினார். அதற்காகவந்து எதிர்த்தவீட்டில் இருந்து கவனித்தேன்.

வக்கீல்:—(கோபத்தோடு) ஓகோ! நானென்ன உங்கள் கைதியென்று நினைத்துக் கொண்டீர்களா? ஓர் உத்தியோகஸ்தர் கடிதம் அனுப்பினால், நான் வராமலிருந்து விடுவேனா! சம்சயப்பட்ட கேடியை ஒளிந்து கவனிப்பதுபோல தூர இருந்து கவனித்து, பின்னால் தொடர்ந்து வருகிறாயே. உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால், நேரில் வந்து கேட்டால், அந்த சந்தேகம் நீங்கிப் போகிறது. அதை விட்டு, இந்த மாதிரி எலி பிடிக்கப் போகும் பூனைபோல் பதுங்கி வந்தால், பார்க்கிறவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள். இதுதான் போலீஸாருடைய ஒழுங்குபோ லிருக்கிறது. நான் இதைப் பற்றி கமிஷனரிடத்திலேயே கேட்கிறேன்.

போலீஸ்காரன்:—அதுதான் சரியான வேலை. அப்படியே செய்யுங்கள்—என்றான்.

வக்கீல் முறைப்பாகவே உள்புறம் சென்றார். அந்தப் போலீஸ்காரனும் அவருக்குப் பின்னாகவே போனான். அசிஸ்டென்ட் சூபரின்டென்டின் அறைக்கு முன்னால் இருந்த ஒரு கூடத்தில் சில குமாஸ்தாக்களும், மூன்று ஸப்-இன்ஸ்பெக்டர்களும் உட்கார்ந்திருந்தனர். வக்கீலைக் கண்டவுடன் ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர், "யார் நீங்கள்? என்ன வேண்டும்" என்றார்.

உடனே வக்கீல், "நான் வக்கீல் நாராயண ஐயர். அசிஸ்டென்ட் சூபரின்டென்ட் தம்மைப் பார்க்கும்படி எனக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார். அதற்காக வந்தேன். அவர் இருக்கிறாரா?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—எத்தனை மணிக்குப் பார்க்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்?

வக்கீல்:—இரண்டு மணிக்கு.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— சரி; அப்படி பெஞ்சியில் உட்காருங்கள். இன்னம் மணியாகவில்லை. சரியாக இரண்டு மணிக்கு அவர் கூப்பிடுவார்—என்று அலட்சியமாகப் பேசிவிட்டுக் கீழே குனிந்து தமது சொந்த வேலையைக் கவனிக்கலானார். அவரோடு சைகலில் வந்த ஜெவான் வேறு வழியாக எங்கேயோ போய், அந்தர்த்தானமாகிவிட்டான்.

ஸப்-இன்ஸ்பெக்டரால் காட்டப்பட்ட பெஞ்சியின் மேல் வக்கீல் உட்கார்ந்து கொண்டார். அவருடைய மனம் பெரிதும் குழப்பமடைந்து, இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவித பயத்தை உண்டாக்கிக்கொண்டிருந்தது. அவ்வித நிலைமையில் அவர் இருக்க, சுமார் ஐந்து நிமிஷகாலம் கழிந்தது. உடுப்பில்லாத இன்னொரு போலீஸ்காரன் வேறொரு மனிதரை அங்கே அனுப்பினான். முன்னர் வக்கீலை வரவேற்ற ஸப்-இன்ஸ்பெக்டர் அவரையும், யாரென்று கேட்க, இரண்டு மணிக்கு தம்மைப் பார்க்கும்படி அசிஸ்டென்ட் சூபரின்டென்ட் தமக்கு உத்தரவு அனுப்பி இருப்பதாக அந்த மனிதரும் மறுமொழி கொடுக்க, அவரும் பெஞ்சியின்மேல் உட்காரவைக்கப் பெற்றார். அதேபோல அதன் பிறகு ஒருவர்பின் ஒருவராக, பதினன்கு மனிதர்கள் அதே காரணத்திற்காக வந்து சேர்ந்து, எல்லோரும் உட்கார வைக்கப் பெற்றனர்.

அவர்களையும், அவர்கள் கொடுத்த மறுமொழிகளையும் கவனித்தபடி இருந்த வக்கீல் அபாரமான வியப்பும் பிரமிப்புமடைந்து, தம்மோடு மற்றும் பதினன்கு மனிதர்களை இரண்டு மணிக்கு போலீஸ் அதிகாரி எதற்காகப் பார்க்க விரும்புகிறார் என்பதை நிச்சயிக்க மாட்டாதவராய் நெருப்புத் தணல்களின்மேல் இருந்தவர் போல், இருக்கை கொள்ளாமல், ஆவலே வடிவாக நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

மணி இரண்டடிக்க ஐந்து நிமிஷம் இருந்தபோது பக்கத்து அறையிலிருந்த அசிஸ்டென்ட் சூபரின்டென்

டென்ட், "கோவிந்த ராவ், பதினைந்து பேரும் வந்து விட்டார்களா?" என்றார்.

வக்கீலை வரவேற்ற ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே துடியாக நிமிர்ந்து, "வந்து விட்டார்கள். எல்லோரும் சாதாரண உடையில் வந்திருக்கிறார்கள். வக்கீல் மாத்திரம் அவருடைய கவுன் முதலியவைகளோடு வந்திருக்கிறார்" என்றார்.

அஸிஸ்டென்ட் சூபரின்டென்ட், "சரி; எல்லோரும் இப்படி வரட்டும்" என்றார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் கோவிந்த ராவ் அங்கிருந்த பதினைந்து மனிதர்களையும் நோக்கி, "சரி; வாருங்கள்; உள்ளே போகலாம்" என்று கூறியபடி தாமும் எழுந்தார். அடுத்த விநாடியில் எல்லோரும் அசிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட் மிஸ்டர் சுந்தரத்தின் முன்னர் போய் நின்றனர். அவருக்கு சுமார் நாற்பது வயது இருக்கலாம், தடித்த சிவப்பான சரீரமும், கடுவன் பூனைபோல் குண்டா யிருந்த முகமும், நிரம்பவும் சுறுசுறுப்பான சுபாவமும் உடையவராய்க் காணப்பட்ட அந்த உதவி அதிகாரி எல்லோரையும் மாறி மாறி ஏற இறங்கப் பார்த்து, "ஒரு முக்கியமான கேஸ் சம்பந்தமாக உங்களை வரவழைத்து இருக்கிறேன். ஒரே காலத்தில் இத்தனை பேர்களையும் நான் வரவழைத்தது எதற்காக வென்று நீங்கள் யோசனை செய்யலாம். ஒரு பெரிய கேஸில் நாங்கள் குற்றவாளியைக் கண்டு பிடிக்க வேண்டும். உங்களில் ஒருவர் குற்றவாளி யென்று எங்களுக்கு நம்பிக்கையான தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்த ஊரில் உள்ள லக்ஷக்கணக்கான ஜனங்களில் நீங்கள் பதினைந்து பேர்களும் கிட்டத்தட்ட ஒரே வித முகச்சாய லுடையவர்களா யிருக்கிறீர்கள். நாங்கள் ஆத்திரப்பட்டு, நிரபராதியைப் பிடித்து உபத்திரவிக்க விரும்ப வில்லை. ஆகையால், உங்கள் எல்லோரையும் ஒன்றாக நிறுத்தி, பொருளுக்கு சம்பந்தமான சிலரை

விட்டு குற்றவாளியைக் கண்டு பிடிக்கும்படி செய்ய உத்தேசிக்கிறேன். பின்னால் ஒரு தாழ்வாரம் இருக்கிறது. எல்லோரும் அங்கே போய் நில்லுங்கள்" என்று கூறினார்.

அவ்வாறு அவர் பேசியபோது, அவர் எவருடைய முகத்தையும் பாராமல் கீழே குனிந்தபடி பேசினார். அவர் கூறியதைக் கேட்ட வக்கீல், "இப்போது நீங்கள் சொன்னதில் நானும் சேர்ந்தவனா?" என்றார்.

உடனே அந்த உதவி அதிகாரி கீழே குனிந்த படியே, "என்ன கோவிந்தராவ், இதில் தவறான ஆசாமிகள் யாரும் சேர்க்கப்பட வில்லையே?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "இல்லை. வக்கீலை அவருடைய உத்தியோக ஆடையோடா நிற்க வைக்கிறது?" என்றார்.

உதவி அதிகாரி, "என்ன கேள்வி இது? அவருடைய உத்தியோக ஆடைகளைக் கழற்றி வைக்கச் செய்து, பந்தோபஸ்தாக மறுபடி அவரிடம் ஒப்புவியுங்கள்" என்றார்.

உடனே கோவிந்த ராவ் வக்கீலை மாத்திரம் பக்கத்து அறைக்குள் அழைத்துப் போய், அவருடைய கவுன், தலைப்பாகை முதலியவற்றைக் கழற்றி வைக்கச் செய்து, அவரைத் தாழ்வாரத்தில் கொண்டுபோய் நிற்க வைத்து விட்டு, மற்ற பதினன்கு ஆசாமிகளையும் அங்கே அழைத்துக் கொண்டு போய் நிறுத்தினர்.

அப்போது உதவி அதிகாரியும், மற்றும் சிலரும் அங்கே வந்தனர். அங்கு நிறுத்தப்பட்டிருந்த பதினைந்து மனிதர்களோடு உடுப்பில்லாத ஐந்து போலீஸ் ஜெவான்களையும் நடு நடுவில் கலந்து நிற்க வைக்கும்படி உதவி அதிகாரி உத்தரவிட, கோவிந்தராவ் அந்த உத்தரவையும் உடனே நிறைவேற்றி வைத்தார்.

அவ்வாறு ஒன்று சேர்ந்த இருபது நபர்களும், பத்துப் பத்துப் பேர்களாக இரண்டு வரிசைகளாய் நிறுத்

தப் பட்டனர். உதவி அதிகாரியும், வேறுசில சிப்பந்தி களும் எல்லோருக்கும் எதிரில் நின்றனர். அப்போது உதவி அதிகாரி மிஸ்டர் சுந்தரம் கோவிந்தராவை நோக்கி, "அடையாளங் கண்டு பிடிக்கப் போகிறவர்கள் நால்வரையும் தூரத்தில் மறைவாக நிற்க வைத்திருக் கிறீரா?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "ஆம்" என்றார்.

உதவி அதிகாரி அந்நால்வரில் ஒருவரை அழைத்து வரச் சொல்லி அவர் வந்ததும் அவரை நோக்கி, "நீர் யார்?" என்றார்.

அவர், "நான் அன்னிபெஸன்ட் சங்கத்தின் ஸ்தா பகர் ராமசாமி சாஸ்திரி" என்றார்.

உதவி அதிகாரி, "சரி; நீர் யாருடனும் பேசாமல், இங்கே நிறுத்தப்பட் டிருக்கும் மனிதரை ஒவ்வொருவ ராய் நன்றாகப் பார்த்து, நீங்கள் குறிப்பிட்ட அடையா ளங்கள் உடைய மனிதர் இருந்தால் காட்டும்" என்றார்.

அதைக் கேட்ட சாஸ்திரியார் இரண்டு வரிசையாக நிறுத்தப்பட் டிருந்த மனிதர்கள் ஒவ்வொருவருக் கெதி ரிலும் போய் நின்று, முகம், உடம்பு முதலிய அங்கங் களை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே நிதானமாகச் சென்றார். முதல் வரிசை மனிதர்களை அவர் அவ்வாறு ஆராய்ந்த பின், தாம் தேடும் மனிதர் அதில் இல்லை யென்று உணர்ந்து, இரண்டாவது வரிசையி லிருந்த மனிதர்களை ஆராயத் தொடங்கினர்.

அப்போது அங்கு நிச்சப்தம் குடிகொண் டிருந்தது. அங்கு நிற்க வைக்கப்பட் டிருந்தவர்களில் ஐந்து போலீ ஸாரைத் தவிர மற்ற பதினைந்து மனிதர்களுடைய நாடி களும் தடதடவென அடித்துக் கொண்டன. அன்னி பெஸன்டின் சிலைத் திருட்டு சம்பந்தமாக தாம் வர வழைக்கப்பட் டிருக்கிறோ மென்பதை அப்போதே அவர்கள் ஒவ்வொருவரும் அறிந்தன ராதலால், அவர்

களது மனம் பெரிதும் திகிலும், கலக்கமும் கொண்டு தவிக்கத் தொடங்கியது. அவர்களை மீறி அவர்களுடைய விழிகள் பயங்கரமாக மாறித் தோன்றின. தம்மைத் திருடரென்று சாஸ்திரி அடையாளம் காட்டி விடுவாரோ என்ற பீதியினால், ஒவ்வொருவருடைய நெஞ்சமும் திடுக்கு திடுக்கென்று அடித்துக் கொண்டது. அச்சம் உடம்பை நடுக்குவித்துத் தூக்கித் தூக்கி போட்டது. அந்த நிலைமையில் சாஸ்திரி முதலாவது வரிசையை விட்டு இரண்டாவது வரிசைக்குப் போகவே, முதல் பத்தியி லிருந்தவர்களுக்கு மூச்சு ஒழுங்காக வரத் தொடங்கியது. அவர்களுடைய நிலைமையும் சமாளித் துக்கொள்ளத் தக்கதாயிற்று. ஆனால் இரண்டாவது பத்தி மனிதர்களுடைய நிலைமை பரம சங்கடமானதாய் முடிந்தது. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு தரம் எமன் வாயில் புகுந்து புறப்பட்டது போலவே தோன்றியது. அபாரமான கலக்கத்தினால் அவர்களுடைய சர்வாங்கமும் வியர்த்து, வெலவெலத்துக் கலகலத்துப் போயிற்று.

இரண்டாவது பத்தியை ஆராய்ந்து கொண்டே சென்ற சாஸ்திரி இடையில் நின்ற ஒருவருடைய முகத்தை இரண்டு மூன்று தடவை உற்று நோக்கி, அவருடைய கையைப் பிடித்து, முன்னால் இழுத்து, "இவர்தான் ஆசாமி" என்றார்.

அவ்வாறு காட்டப்பட்ட மனிதனைப் பார்த்த உதவி அதிகாரி புன்னகை செய்து, "ரொம்ப சரி, நீர் போய் அதோ தெரியும் ஹாலில் இரும்" என்றார்.

சாஸ்திரி அப்படியே சென்று குமாஸ்தாக்க ளிருந்த இடத்தில் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார். சாஸ் திரியால் அடையாளம் காட்டப்பெற்ற மனிதர் அச்சமோ, கவலையோ, முகவாட்டமோ கொள்ளாமல், சந்தோஷப் புன்னகை செய்தபடி மறுபடியும் பின்னால்நகர்ந்து, முன் போல இரண்டாவது பத்தியில் சமமாக நின்றார்.

அதன் பிறகு இன்னும் மூவர் ஒருவருக்குப்பின் இன்னொருவராக வந்து ஆளைக் கண்டுபிடித்தனர். அவர்களையும் மிஸ்டர் சுந்தரம் குமாஸ்தாக்களுடைய அறைக்கு அனுப்பி வைத்தபின் புன்னகையோடு ஸப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "சரி; தனபால செட்டி தப்பினான். அவனை நாம் அனுப்பி விடலாம். அவனுக்கு இனி வேலை இல்லை" என்றார்.

உடனே கோவிந்தராவ், அவ்வரிசைகளில் ஒரு மூலையில் நிறுத்தப்பட்டிருந்த தனபால செட்டி என்ற பெயருடைய ஒரு கடைக்காரனைப் பார்த்து, " இப்படி வா; எஜமான் கூப்பிடுகிறார்" என்றார்.

உடனே அவன் உதவி அதிகாரிக்கு முன்னர் வந்து கைகளைக் கட்டிக்கொண்டு நின்றான். மிஸ்டர் சுந்தரம் மிக கம்பீரமான பார்வையாக அவனைப்பார்த்து, "என்னடா, செட்டி! வரும்போது ஏதாவது சொக்குப் பொடி கிக்குப்பொடி வாங்கிக்கொண்டு வந்தாயா? அடையாளம் காட்ட வந்தவர்களுடைய கண்களிலெல்லாம் பொடியைத் தூவி தப்பித்துக் கொண்டாயே! அன்றைதினம் இரவில் திருட்டுப் போன இடத்தில் நீ காணப்பட்டாயென்று உன்னைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். இப்போது வந்த நான்கு ஆசாமிகளுக்கும் இருளில் கண்பார்வை குறைவுபோ லிருக்கிறது. உன்னைக் காட்டவில்லை. சட்டப்படி பார்த்தால், உன்னை இங்கேயே அடைத்து வைத்திருந்து இன்னம் வேறே சாட்சிகள் கிடைக்கிறார்களா வென்று விசாரித்துப் பார்க்கவேண்டும். ஆனால் நீ வியாபாரியா யிருக்கிறாய். எங்கும் ஓடிப் போகக் கூடியவனல்ல. உன்னை ஜாமீனில் விட்டு வைக்கலாமென்று நினைக்கிறேன். ஆயிரம் ரூபாய்க்கு சொந்த ஜாமீன் கொடுக்கிறாயா?" என்றார்.

செட்டி—நான் ஏழை எஜமானே. என் சொத்துகளை யெல்லாம் ஏலம்போட்டால், 100 ரூபாய் கூடத் தேறாது. நான் எங்கிருந்து ஆயிரம் ரூபாய்க்கு ஜாமீன்

கொடுப்பேன். ஒரு பாவத்தையு மறியாத என்னைப் பிடித்து லாக்கப்பில் இந்த இரண்டு தினங்களாய் அடைத்து வைத்ததில் எனக்கு ஐந்து ரூபாய்க்கு வரையில் நஷ்டமாகிவிட்டது. என் வீட்டில் எல்லோரும் பட்டினி கிடப்பார்கள். இந்த ஊராருக்கெதிரில் என் மானமும் போய்விட்டது. அரைக் காசுக்குப் போன மானம் ஆயிரம் காசு கொடுத்தாலும் வராது என்பார்கள். அதுபோல, என்னை அக்கிரமமாக மானபங்கப் படுத்திவிட்டார்கள்" என்று கூறி மேலும் ஏதோ முறையிட்டுக்கொள்ள முயல, போலீஸ் உதவி அதிகாரி, "சரி, கொஞ்சம் இடம் கொடுத்தால், மடத்தைப் பிடுங்குவான் என்று பழமொழி சொல்லுவார்கள், அதுபோலிருக்கிறது நீ பேசுவது. போய் 100 ரூபாய்க்கு சொந்த ஜாமீன் கொத்துவிட்டுப் போ. நீ ஏழை என்ற தயாளம் என் மனதில் போராடுகிறது. உன் வீட்டில் ஜனங்கள் பட்டினி கிடப்பார்கள் என்றதால், நீ போய் இனி சம்பாதிக்கிற வரையில் அவர்கள் பட்டினி கிடக்க முடியாதாகையால், நான் என் சொந்தப் பணத்தில் உனக்கு ஐந்து ரூபாய் கொடுக்கிறேன்; எடுத்துக்கொண்டு போ" என்று கூறித் தமது சட்டைப் பையிலிருந்த மணிபர்ஸிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவனுக்கெதிரில் வீசி யெறிந்தார்.

செட்டி நோட்டை எடுத்துக்கொள்ளாமல், "என்ன ஸார், என்னை அவமானப்படுத்தி, என்மேல் ஜனங்களுக்கிருந்த வர்த்தக நம்பிக்கையைக் கெடுத்து என்னை அழித்ததற்கு, நான் இந்த ஐந்து ரூபாயை எடுத்துக்கொண்டு போகிறதா, இது எஜமானரிடமே இருக்கட்டும். என்னை அக்கிரமமாய் யார் பிடித்துக்கொண்டு வந்தார்களோ அவர்மேல், நான் ஆயிரம ரூபாய்க்கு மான நஷ்ட தாவாபோடப் போகிறேன்" என்றார்.

உதவி அதிகாரி, வியப்போடு, "என்னடா செட்டி, ஓட ஓடத் துரத்துகிறாய்! நீ ஏழையாயிற்றே என்று தயாளம் காட்டினால், தலையில் மிளகாய் அறைக்கப் பார்க்

கிறாயே! நீ ஜாமீன் கொடுக்கவேண்டியதில்லை, போகலாம்" என்றார்.

மறுபடியும் செட்டி பிணங்கத் தொடங்கி, "என்ன ஸார், அந்த அக்கிரமம் அடுக்குமா ஸார்; என்னை அநியாயமாய் ஜெயிலில் அடைத்தவர்களைக் கேட்கிறதில்லையா? எனக்கு அவர்களிடம் மான நஷ்ட ஈடு வாங்கிக் கொடுக்கிறதில்லையா ஸார்" என்றான்.

அதற்குமேல் அவனுடன் பேச விரும்பாத உதவி அதிகாரி, ஸப்-இன்ஸ்பெக்டர் கோவிந்தராவின் முகத்தைப் பார்க்க, அவர் தமக்கருகிலிருந்த ஒரு ஜெவானை நோக்கி. "அடேய் 647, இந்த செட்டியை அழைத்துக் கொண்டுபோய் வெளியில் அனுப்பிவிட்டு வா. இந்த நோட்டையும் எடுத்துக்கொண்டு போ" என்றார்.

உடனே ஜெவான் சரேலென்று பாய்ந்து கீழே கிடந்த நோட்டை எடுத்துக் கொண்டு செட்டியண்டை சென்று, அவனுடைய கையை இரும்புப் பிடியாகப் பிடித்து, "வா, செட்டியாரே, வெளியே போகலாம். எஜமானருக்கு இங்கே இன்னம் அதிக ஜோலி இருக்கிறது. அப்புறம் பேசிக்கலாம், வா" என்று கூறியபடி பரபரவென்று அவனை இழுத்துக்கொண்டு வெளியில் சென்று ரஸ்தாவை யடைந்தான்.

தனபால் செட்டி, தனக்கு நேரிட்ட அவமானத்தை மிக நுட்பமாய் உணர்ந்தானாதலால், ஊரிலுள்ள ஜனங்களின் முகத்தில் விழிக்க அவனுக்கு விருப்பமில்லாதது பற்றி, தனக்கு சரியான பரிகாரம் தேடிக்கொள்ளாமல் அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியில் போகவே அவன் விரும்பவில்லை. தன்னை அக்கிரமாகப் பிடித்து லாக்காப்பில் அடைத்து அவமானப்படுத்திய போலீஸார் அந்த ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் சென்று, "தனபால் செட்டி யோக்கியன்; அவனை நாங்கள் தப்பாகப் பிடித்து அடைத்து வைத்தோம்" என்று கூறி, அவர்களுடைய

கெட்ட அபிப்பிராயத்தை மாற்றி, தன்னைத் தன் பழைய நிலைமையில் அமர்த்துவார்களென்று அவன் மூடத்தனமாக எதிர்பார்த்தானதலால், அவ்விடத்தை விட்டுப் போகவே அவனுக்குக் கால் எழவில்லை. அவனுடைய நிலைமையில் வேறு எவரேனும் இருந்தால், போலீஸார் எப்போது தம்மை விடுவார்கள்; எப்போது தாம் அந்தப் புலிக்குகையிலிருந்து தப்புவோம்என்று ஆவலோடு காத்திருப்பார்கள். ஆனல் கோமுட்டி செட்டியான தனபாலனுடைய மனப்போக்கு வேறுமாதிரியா யிருந்தது.

ரஸ்தாவை யடைந்த தனபால் செட்டி மேலே நடக்காமல் தயங்கித்தயங்கிநின்றதைக்கண்ட போலீஸ்காரன் அவனைப் பார்த்துப் புரளியாகப் புன்னகை செய்து, "வாப்பா போவோம். ஏன் இப்படி சொணக்கமா நிக்கிறே. சர்க்காரு சாப்பாட்டெ உட்டுப் போவ மனசு வல்லியா! எனக்கு நேரமாவுதப்பா, நட" என்றான்.

தனபால் செட்டி, "என்னய்யா, போலீஸாருன்னு இப்படி யெல்லாம் அக்கிரம்மா நடத்துவாங்களா. ஆளைக் கருக்காப் புடிச்சாந்த மாதிரி, நாணயத்துக்குப் பளுதில்லாமெக் கொண்டுபோயி வுடவாணுமய்யா. என்னமோ ஆட்டே மாட்டெ அடிச்சு ஓட்டறாப்புலெ இருக்கிகுதே ஒங்க வேலே" என்று நிரம்பவும் நிஷ்டூரமாகக் கூறினன்.

போலீஸ்காரன் சந்தோஷத்தோடு நகைத்து, "என்னப்பா, போ, இந்த மேலதிகாரிகளுக்குத் தனபால் செட்டி யாரோடெ அந்திஸ்து, ராங்கியெல்லாம் தெரியுதா. என்னடா, பெரிய தகத்துலெ இருந்த செட்டியாரெக் கொண்டாந்தமே, அவுரை நாலு குருதெ ஸாரட்டுலே குந்தவச்சு, மோளதாளத்தோடெ ஊரைக் கோலி, அவுரோடெ ஊட்டுலெ கொண்டுபோயி எறக்கி, ஊராரைக் கூட்டி, செட்டியாரு ரோக்கியமான மனிசருன்னு சொல்லி, திருஷ்டி சுத்தி, நலுங்கு ஊஞ்சல் நடத்தி, ஆலாத்தி எடுத்து, டும் டும்னு உள்ளே அனுப்பிச்சு, எல்

லாரையும் திருப்திபண்ணி அனுப்பணுங்கற எண்ண மில்லாமப் போச்சே! அவுங்க என்னமனுசரு. இருக்கட் டும்; செட்டியாரே, நீ வா. இங்கே நின்னு அளுதா, அவுங்க பாக்கவா போறாங்க. நானச்சும் ஒங்கூட்டுலெ கொண்டாந்து உட்டுட்டு வாறேம்பா. போவலாம் வா. கண்ணைத் தொடைச்சுக்கோ; அளுவாதே'' என்று கூறிப் புறளி செய்தான்.

அவன் தன்னைப் புரளி செய்கிறான் என்று கண்டு கொண்டசெட்டி, "சரிதாம்பா, நீதான் வெளியே கொண் டாந்து வுட்டுட்டியே; ஒஞ் சோலியேப் பாத்துக்கிட்டுப் போ. இன்னம் என்னெ எங்கிட்டுக் கொண்டுபோவப் பாக்கறே! அந்த ஐயா குடுத்த நோட்டே இப்பிடிக்குடு. நல்ல வேளையிலெ நீ போயிட்டு வா'' என்றான்.

ஜெவான் அசட்டுப் புன்னகை செய்து 'என்ன செட்டி, நீ கெட்டி ஆசாமியா இருக்கிறீயே; ஒங்கிட்டக் குடுத்த நோட்டெ நீ எடுத்துக்காமெ சொம்மா வந்துட் டியே. கீளே கெடந்தத்தை நான் எடுத்தாந்தேன், இதை எசமாங்கிட்டக் கொண்டுபோய்ச் சேர்க்காமெப் போனா, எனக்கு உத்தியோகம் பூடுமே. கீளே கெடந்த நோட்டெ எடுத்து ஒங்கிட்டக் குடுக்கச்சொல்லி எனக்கு ஆராச்சும் காய்தாப் பண்ணாங்களா. நல்லாச்சொல்றியே ஒருபேச்சு போனாலும் போவுதுன்னு'' என்றான்.

தனபால் செட்டி திடுக்கிட்டு வியப்படைந்து, "அப் பிடியானா நானு திரியும் அந்தஐயாக்கிட்டப் போயிநோட் டெக் கேக்கிறேன். நீயும் என்னோடெ வா'' என்றான்.

ஜெவான், "அடெப் பைத்தியக்கார மனிசா. அவுரு எம்பிட்டுப் பெரிய உத்தியோகம் பாக்கறவரு. அவுரை நீ நெனைச்சபடி பார்க்க முடியுமா. நீ இப்ப அவரைப் பாக்க முடியாது. ஒன்னெக் கொண்டுபோயி ஊட்டுலெ உட உத்தரவு பண்ணிருக்காரு; நானு ஒன்னெ இப்ப ஆபீ ஸுக்குள்ளற உடமுடியாது. இன்னம் எப்பவாச்சும்

அவுரோடெ பேசிக்கிவே! வா ஒங்கூட்டுக்குப்போவோம். காத்தாலெ மொத வவுத்துலெ ஒண்ணும் உள்ளே; வவுறு காயுது. நீயும் என்னோடெ வா. ஓட்டலுக்குப் போயி நாஷ்தா பண்ணிப்புட்டுப் போவலாம்" என்று கூறித் தன் விளையாட்டுத் தோழனை அழைத்துப் பிடித்திழுப்பதுபோல் செட்டியைப் பிடித்திழுக்க, அவன் அதற்குமேல் திமிரமாட்டாமல், அதிருப்தியினுலும், ஏமாற்றத்தினுலும் சூம்பித்தொங்கிப்போன முகத்தோடு ஆட்டுக்குட்டிபோல ஜெவானுக்குப்பின் நடக்கலானன்.

ஆனல் அவனுக்குள் ஓர் எண்ண முண்டாயிற்று. போலீஸ் அதிகாரியால் தனக்குக் கொடுக்கப்பட்ட நோட்டை ஜெவான் எடுத்துக்கொள்ள துணியமாட்டானென்றும், அவன் தன்னைத் தனது வீட்டில் கொண்டு போய் விட்டவுடன் அதைக் கொடுக்க உத்தேசிக்கிருனென்றும் நினைத்துக் கொண்டான்.

ஆகவே, ஐந்து ரூபாய்க்குமேல் அதிகப்படியாகத் தனக்கு சிற்றுண்டி கிடைப்பதைத் தான் வேண்டாமென்று மறுப்பது மூடத்தனமென்று நினைத்து, அரை மனதோடு அதற்கு இணங்கிப் போகிறவன்போல ஜெவானுடன் கூட ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்தான்.

எவ்வித ஆக்ஷேபனையும் சொல்லாமல் செட்டி ஓட்டலுக்கு வந்ததைப்பற்றி மகிழ்ச்சி கொண்டவன் போலக் காணப்பட்ட போலீஸ் ஜெவான் அவனைத் தனக்குப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, அவனுக்கு உப்புமா, காப்பி முதலிய சொற்ப வஸ்துக்களை வரவழைத்துக் கொடுத்துவிட்டு, கடையில் என்னென்ன வகையான பக்ஷணங்களிருந்தனவோ அத்தனையிலும் ஒவ்வொருதட்டு வரவழைத்து சுமார் ஒரு நாழிகைகாலம் அங்கிருந்து ப்காசூர யுத்தம் நடத்த, அதைக் கண்ட செட்டிக்கு சம்சயம் தோன்ற வாரம்பித்து விட்டது. சொற்ப சம்பளக்காரனை அந்த ஜெவான் சுமார் ஒன்றரை ரூபாய் வரையில் பெறும் தின்பண்டங்களை வர

வழைத்துத் தின்பதென்றால் ஒருகால் அவன் தனது ஐந்து ரூபாயில்தான் விருந்து நடத்திக் கொள்கிறானோ என்ற சந்தேகம் தோன்ற வாரம்பித்து விட்டது. ஆயி னும், அவன் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் இருக்க, சிறிது நேரத்தில் ஜெவான் தனது போஜன யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு எழுந்தான். இருவருக்கும் இரண்டு சீட்டுகள் கொடுக்கப் பட்டன. செட்டியின் செலவு நாலணா, போலீஸ்காரன் செலவு ரூபாய் ஒன்றரை. உடனே ஜெவான் இரண்டு சீட்டுக் களையும் சேர்த்து ஓட்டலின் சொந்தக்காரரிடம் கொடுத் துத் தன் கையிலிருந்த ஐந்துரூபாய் நோட்டை எடுத்துப் போட்டு மூன்றே கால் ரூபாய் பெற்றுக் கொண்டதைக் காணவே, செட்டிக்கு மனக்கலக்கமும், வயிற்றுவலியும் ஆரம்பமாகின.

மிகுதிப் பணத்தையும் வாங்கித் தனது சட்டைப் பையில் போட்டுக்கொண்ட போலீஸ் ஜெவான், புன்ன கையோடு செட்டியைப் பார்த்து, "என்னப்பா செட்டி, டிப்பன் என்னமா யிருந்தது! எனக்கு எழுந்து நடக்க முடியல்லேப்பா! மேலே வெத்திலே போட்டு ஸிகரேட் டுப் புடிச்சாத்தான் ஜாமானெல்லாம் கீளே அமுங்கும் போலிருக்குது. ஒந்தயவுலெ நல்லா திருத்தியா இன் னைக்கி நல்ல வேட்டை அம்பிட்டுதப்பா" என்று வேடிக் கையாகப் பேசியபடி அவனை அழைத்துக்கொண்டு பக் கத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடைக்குப்போகமுயல, அதோடு விழித்துக்கொண்ட செட்டி, "எனக்கு நேர மாவுதய்யா, நானு வூட்டுக்குப் போறேன். என் பணத் தெக் குடுப்பா; நானு நாளைக்காச்சும் போயி போலீஸ் எஜமானைப் பார்த்து பணத்தைக் காட்டி இன்னம் என் னுச்சும் சேத்துக் கேக்கணும்" என்று தந்திரமாகக் கூறினான்.

உடனே ஜெவான் புரளியாக நகைத்து, "அடே வாய்யா, ஆயிரம் ரூபாய்க்கி குருதெ வாங்கி, அரையணா வுக்கு சாட்டைக் குச்சி வாங்காமெ செட்டுப்புடிக்கிற சங்,

கதியா இருக்குதேப்பா நீ அவசரப்படுத்துறது. ஒண்ணே முக்கா ரூபாய்க்கி விருந்து நடத்தின நீ அரையணவுக்கு வெத்திலே வாங்க யோசிக்கிறியே; அடெ வாப்பா. சொம்மா தருமத்துலே வந்த துட்டுத்தானே. என்னு ஒங் கப்பன் பாட்டன் பாடுபட்டுத் தேடினது கெட்டுப்போவுது" என்று கூறியபடி வெற்றிலே பாக்குக் கடையில் 50-முதல்தர ஸிகரேட்டுகளடங்கிய ஒரு டப்பா ரூ. 1-8. விலை பேசி அதை வாங்கி சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான். செட்டி தனக்கு வெற்றிலே பாக்கு தேவை யில்லை யென்று சொல்லிவிட்டா னதலால், ஜெவான் தனக்குத் தேவையான வெற்றிலே பாக்கு, வாசனைப் புகையிலைப் பொட்டலங்கள், பீடிகள் முதலியவைகளை நான்கணவுக்கு வாங்கிப் பையில் நிரப்பிக் கொண்டான். கடைக்காரனுக்குக் கொடுத்தது போக மிகுதி எவ்வளவு இருந்ததென்று ஜெவான் செட்டிக்கெதிரில் எண்ண, ஐந்து ரூபாய் நோட்டில், ஒன்றரை ரூபாயே மிச்ச மிருந்ததென்று தெரிந்து கொண்டான்.

உடனே ஜெவான், "இந்தாப்பா, நீ வூட்டுக்குப் போவ அவசரப்பட்றே. நீ போப்பா. ஒன்னை வெறுங் கையோடே அனுப்பப் படாது; இந்த ரெண்டணவைக் கொண்டுபோ" என்று கூறி இரண்டண நாணய மொன்றை எடுத்து செட்டியிடம் நீட்ட, அதைக் கண்ட செட்டி பெரிதும் ஏமாற்றமும், விசனமும், கோபாவேச மும் கொண்டவனய், "என்ன ரெண்டணு குடுக்கறியே. அந்த ஐயா கொடுத்த அஞ்சு ரூபா நோட்டெக் குடெப்பா. சொம்மா வெளையாடாதே. எனக்குப் பொளுதாவுது" என்று வற்புறுத்தலாகக் கேட்டான்.

உடனே ஜெவான் கோபச் சிரிப்போடு, "பாத்தியா செட்டிப் புத்தியெக் காட்டுறியே. எசமானரு அஞ்சு ரூவா குடுத்தத்தெ எடுக்காமெ வந்துட்டே. ஸப்-இன்ஸ்பெக்டர் ஐயா என்னை எடுத்துக்கச் சொன்னரு. அதைச் செலவளிச்சு ஒனக்கு நல்ல திண்டியா வாங்கிக் குடுத்தா, பணத்தைக் கொண்டாங்கிறியா! நீ எங்கிட்

டப் பணம் குடுத்தியா ? இல்லாமெப்போனு கிளே கெடந் தத்தை எடுத்து ஒங்கிட்டக் குடுன்னு ஆராச்சும் எங்கிட் டச் சொன்னுங்களா? நீ எங்கிட்டப் பணம் கேக்கறத் துக்கு ஒனக்கு வாயேதுடா! போடா அறுதலி மவனே. அந்த ரெண்டனுவும் கெடையாதுடா; விசுவாசங்கெட்ட நாய்க்கு நானு திண்டிவாங்கிக் குடுத்தேனே; எம்புத்தியெ செருப்பாலெ அடிச்சுக்கணும்'' என்று கூறியபடி செட் டியை விட்டு நடக்கலானுன்.

அதைக் கண்ட செட்டிக்கு பலமாக அழுகையும், விசனமும் பொங்கி யெழுந்தனவானுலும், அவன் அவை களை அடக்கிக்கொண்டு, ஜெவானைத் தொடர்ந்து வந்த படி, சரி; நீ குடுக்கவாணும் நானு அந்த ஐயாக்கிட்டயே போயி நீ பண்ணத்தெ யெல்லாம் சொல்லறேன். அவுரு என்ன செய்யறுரோ செய்யட்டும்'' என்று கூறினுன்.

உடனே ஜெவான் நரசிம்மாவதாரமாக மாறி ஆவே சத்தோடு திரும்பி, "என்னு சொன்னே ? ஊட்டுக்குப் போடான்னு மரியாதை பண்ணி அனுப்பிச்சா, கொள ந்தை மாதிரி வெளியாட்டா பன்றே. போ, ஓடு நாயே, நிக்காதே. ஆபீஸ் பக்கம் வந்தியோ, ரெண்டு காலையும் வாலைத் தண்டை ஒடிக்கருப்புலே ஒடிச்சுப் போட்டிடு வேன்'' என்று பயங்கரமாக அதட்டி செட்டியின் கன் னத்தில் பளீர் பளீரென்று பேய் அறைவது போல இரண்டு அறைகள் கொடுக்க, செட்டி, "ஐயோ, யப்பா, நயினு'' என்று கூச்சலிட்டபடி அவ்விடத்தை விட்டு ஒரே ஓட்டமாக ஓடத் தொடங்கவே, ஜெவான் அவனை மறுபடியும் அடிக்கத் துரத்துகிறவன் போல் பாசாங்கு செய்து சிறிது தூரம் ஓடிக் காட்டிவிட்டு நின்று விட் டான். ஜெவான் தன்னைத் துரத்திக்கொண்டு வருவ தாக நினைத்து செட்டி திரும்பிக்கூடப் பார்க்காமல் கால் பர்லாங்கு தூரம் வரையில் ஓடி பக்கத்தில் இருந்த ஒரு சந்தில் நுழைந்து மறைந்து போய் விட்டான்.

தனபால் செட்டியின் விஷயம் இவ்வாறு நடை பெற, போலீஸ் தலைமை ஆபீஸ் கச்சேரியில் அடையாளம் காட்டும் சடங்கில், வேறு எவருக்கு சநியன் பிடித்த தென்பதை நாம் சற்று கவனிப்போம். இரட்டைப் பத்திகளாய் நிறுத்தப் பட்ட இருபது மனிதர்களுள் குற்றவாளி இன்னுன் என்பதைக் கண்டு பிடிக்க நால்வர் ஒருவர்பின் ஒருவராய் வர வழைக்கப் பட்டன ரல்லவா. அவர்கள் இருவர் இரண்டு வெவ்வேறு மனிதர்களை சுட்டிக் காட்டினர். மற்றும் இருவர் ஒரே மனிதரைக் காட்டினர். அதாவது, நான்கு மனிதர்கள் மூன்று குற்றவாளிகளைக் காட்டினர். போலீஸாரால் சம்சயத்தின் மேல் கைதியாக்கப் பெற்ற தனபால் செட்டி அம் மூவருள் ஒருவனான் றுதலால், நாம் ஏற்கனவே கூறியபடி, அவன் உடனே விடுதலை யடைந்து வெளியில் அனுப்பப் பட்டான்.

அன்னிபெஸன்ட் சங்க ஸ்தாபகரான சாஸ்திரியும், இன்னொருவரும் முறையே அடையாளம் காட்டிய இருவர், உடுப்பில்லாத போலீஸாராதலால், அவ்வாறு தப்பாகக் காட்டிய இருவரையும் போலீஸ் உதவியதிகாரி புரளி செய்து, அவர்களுடைய தவறை, விளக்கி, அவர்களை அனுப்பி வைத்தார். மற்ற இருவரால் சுட்டிக் காட்டப் பட்டவர் நமது வக்கீலான நாராயண ஐயராதலால், அவர் நிறுத்திக் கொள்ளப் பட்டார். எனவே அவர் ஒருவரைத் தவிர, மற்றவர் அனைவரும் போகும் படி அனுப்பப் பட்டனர்.

அவ்வாறு அந்த அடையாளம் காட்டும் சடங்கு முடியவே, உதவி அதிகாரி தமது உத்தியோக ஆசனத்திற்குப் போய் அமர்ந்து கொள்ள, ஸப்-இன்ஸ்பெக்டரும், நான்கு போலீஸ் சிப்பந்திகளும் நாராயண ஐயரை அழைத்துக் கொணர்ந்து ஷை உதவி அதிகாரிக்கு முன்னர் நிறுத்தினர்.

உதவி அதிகாரி தமது முகத்தை நிமிர்த்தாமலும், வக்கீலைப் பார்க்காமலும், கீழே குனிந்திருந்தபடி பேசத் தொடங்கி, "நீர் யாரையா ?" என்றார்.

வக்கீல் பெரிதும் திகிலும், கலக்கமும், நடுக்கமும் அடைந்து பிரமித்து வெலவெலத்து மௌனமாக நின்றார்.

அப்போது பக்கத்தில் நின்ற ஸப்-இன்ஸ்பெக்டர் தமது கையில் இருந்த பென்ஸிலால் வக்கீலின் விலாவில் குத்தி, "உம்மைதான் ஐயா கேட்கிறது. பேசாமல் நிற்கிறீரே! கேட்பதற்கு மறுமொழி சொல்லும்" என்றார்.

அவ்வாறு ஸப்-இன்ஸ்பெக்டர் அநாகரிகமாய்த் தம்மைக் குத்தியதைப் பற்றி வக்கீல் பெரிதும் கோபாவேசமடைந்தாராலும், அதைக் காட்டிக்கொள்ளாமல், "ஓ! இப்போது மிஸ்டர் சுந்தரம் கேட்டது என்னையா! கீழே குனிந்தபடி பேசினீரே, மேஜையோடு பேசுகிறார் என்றல்லவா நினைத்தேன். அவருக்குக் கழுத்து நிமிருவதில்லை யென்றும், அவருடைய முகம் செய்ய வேண்டிய வேலையை உங்கள் பென்ஸிலாகிய ஆயுதமே செய்ய வேண்டு மென்றும் இப்போதே தெரிந்து கொண்டேன். அதுவுமில்லாமல் எனக்குக் கடிதம் எழுதி என் வீட்டண்டை ஓர் ஆளைப் பாராப் போட்ட நீங்கள், நான் யார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமையில் இருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன், ஆகையால் இந்தக் கேள்விக்கே அர்த்தமில்லையே" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நீங்கள் வக்கிலா யிருந்தும், இந்த அற்ப விஷயத்தை ஒழுங்காய் கிரகிக்காமல் பேசுவது ஆச்சரியமா யிருக்கிறது. உங்களுக்குக் கடிதம் அனுப்பியது முதலிய காரியங்களைச் செய்ததெல்லாம் ஆபீஸிலிருக்கும் குமாஸ்தாக்கள், அதெல்லாம் மேலதிகாரிக்குத் தெரியாமல் நடக்கும் காரியம். மேலதிகாரி எதிலும் சம்பந்தப்படாமல்; பட்சபாதமின்றி எல்லாவற்

றிற்கும் விலக்காய் அலாக்கா யிருப்பவர். இங்கே வரும் ஒவ்வொருவரும் இன்னின்னர் என்று மேலதிகாரி தெரிந்து கொண்டிருக்க வேண்டுமென்று நீங்கள் எதிர் பார்ப்பது பொருத்த மற்றது. அதுவுமன்றி, போலீஸ் தலைமை அதிகாரி விசாரணை நடத்தும் இடம் சட்டப்படி கூடும் நியாய ஸ்தலம் என்பதும் உங்களுக்குத் தெரிந் திருக்க வேண்டும். ஆகையால், இவர்களுக்குக் கழுத்து நிமிர வில்லை என்பது போன்ற துடுக்கான சொற்களை உபயோகிப்பது நியாயாதிபதியை இழிவு படுத்திய குற் றம் (Contempt of Court) ஆகும். ஆகையால் இவ்விஷ யங்களில் நான் உங்களுக்கு மறுபடி எச்சரிக்கை செய்ய இடம் கொடுக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இப் போது கேள்விக்கு உரிய மறுமொழியைக் கொடுங்கள்.

வக்கீல்:—எனக்கு அனுப்பிய கடிதத்தின் அடியில் இவர்கள் அதைப் படிக்காமலேயே கையெழுத்துச் செய் தார்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர்.—மறுபடியும் நீங்கள் குதர்க்கம் பண்ணுகிறீர்கள்; காகிதத்தில் கையெழுத்துச் செய்பவர் கள் படிக்காமல் செய்வார்களா? உங்களுக்கு மாத்திரம் கடிதம் அனுப்பப் பட்டதாக நீங்கள் நினைத்துப் பேசுகிறீர்கள். இந்த ஒரு வழக்கில் பதினைந்து பேர்க ளுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இங்ஙனம் மற்ற வழக்குகளில் எத்தனையோ பேர்களுக்கு அனுப்பப்பட் டன. நீங்கள் கடிதத்தைப் பெற்று வந்தவர்கள் என்பது மேலதிகாரிக்குத் தெரியுமானாலும், நீங்கள் இன்னார் என் பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

வக்கில்:—அப்படியானல், என்னை மிஸ்டர் சுந்தரம் இதுவரையில் பார்த்ததோ இன்னாரென்று தெரிந்து கொண்டதோ இல்லையா?

சப்-இன்ஸ்பெக்டர்:—உங்களுடைய அண்ணனே கோர்ட்டில் ஜட்ஜாக இருக்கிறார் என்று வைத்துக்

கொள்ளுவோம். நீங்கள் சாட்சியாகப் போனால், அவர் உங்கள் பெயர் என்ன என்பது போன்ற தகவல்களைக் கேட்டு காகிதத்தில் எழுதிக்கொள்ளுவா ரல்லவா. நீங்கள் வக்கீல் என்பது உங்களுக்கே மறதியாய்விட்டது போலிருக்கிறது. போதும் விதண்டவாதம். மறுமொழி கொடுங்கள்.

வக்கீல்:—சரி; இது உங்களுடைய ஆதீனம். நான் பேசவதில் பயன் இல்லை. ஐயா, அசிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட் துரைகளே, நான் நாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., வக்கீல், சுயமரணபுரம்.

உதவி அதிகாரி:—(வியப்போடு நிமிர்ந்து அவரை ஏற இறங்கப் பார்த்து) நீர் வக்கீலா! பி. ஏ., பி. எல். பரீட்சைகளில் தேறி இந்த ஊரில் தொழில் நடத்துகிறவரா?

வக்கீல்:—ஓகோ! முதலுக்கே மோசம் வந்துவிடும் போலிருக்கிறதே! நான் பி. ஏ., பி. எல். பரீட்சைகளில் தேறவில்லை யென்றும், இந்த ஊரில் நான் வக்கீல் அல்லவென்றும் சொல்லுகிறீர்களா?

உதவி அதிகாரி:—அதெல்லாம் நிஜமாயிருந்தால், நீங்கள் திருடர் என்று ஏன் இருவர் இப்போது அடையாளம் காட்டினார்கள்?

வக்கீல்:—என்னை யாரோ இருவர் சுட்டிக் காட்டினார்கள்; அதுவே எனக்குத் தெரிந்தது. என்னை திருடன் என்று அவர்கள் காட்டியதாக நீங்கள் இப்போது சொல்லத்தான், நான் தெரிந்து கொள்ளுகிறேன். அப்படியானால் எது உண்மை என்கிறீர்கள்? நான் பி. ஏ., பி. எல். பரீட்சைகளில் தேறி, இந்த ஊரில் வக்கீல் தொழில் செய்வது நிஜமென்கிறீர்களா? இல்லையானால், நான் திருட்டுத் தொழில் நடத்துவது நிஜமென்கிறீர்களா? எதை நீங்கள் நிஜமாக்க உத்தேசிக்கிறீர்கள்.

உதவி அதிகாரி:—இந்த இரண்டு யோக்கியதாம்சங்களும் ஒருவரிடத்தில் இருக்க முடியாது என்று நீங்கள் வாதிக்கிறீர்களா?

வக்கீல்:—அப்படியானல் அதை எந்தப் பதவியிலிருப்பவருக்கும் நாம் பிரயோகிக்கலாம். ஒருவர் போலீஸ் உதவி அதிகாரியாயும் இருக்கலாம்; அவர் திருடராயும் இருக்கலாம்.

உதவி அதிகாரி:—(புன்சிரிப்போடு) அதைத்தான் நான் பொதுப்படையாகச் சொன்னேன். நீங்கள் ஓர் அதிகாரியின் பதவியைக் குறிப்பிடுகிறீர்கள். அவ்வளவே வித்தியாசம். நாம் மனிதருடைய பொதுப்படையான மனப் போக்கைப் பற்றியும், உலக சுபாவத்தைப் பற்றியும் தத்துவங்கள் பேச இப்போது இங்கே இருக்கவில்லை. இந்த ஊரில் இரண்டு தினங்களுக்கு முன்னர் ஒரு பொருள் களவாடப் பட்டிருக்கிறது. நீங்கள்தான் அதைத் திருடியவர் என்று இருவர் இப்போது இத்தனை பேருக்கும் முன்னல் அடையாளம் காட்டினார்கள். ஆகையால் சட்டப்படி நாங்கள் உங்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கடமைப் பட்டவர்களா யிருக்கிறோம். நீங்கள் வக்கீல் உத்தியோகம் பார்ப்பவர் என்பது போன்ற உங்களுக்கு அனுகூலமான அம்சங்களை நீங்கள் நியாஸ்தலத்தில் எடுத்துச் சொல்லிக்கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு. நாங்களும் அதைக் குறித்துக்கொண்டோம். நான் கேட்கும் மற்ற தகவல்களை தயவுசெய்து நேராகச் சொல்லுங்கள்.

வக்கீல்:—ஏதோ திருட்டு நடந்ததென்று நீங்கள் பூடகமாகச் சொல்வது எனக்கு விளங்கவில்லை. இன்ன இடத்திலிருந்து இன்ன வஸ்து திருடப்பட்ட தென்பதைச் சொல்லுங்கள்.

உதவி அதிகாரி:— இந்த ஊரிலுள்ள அன்னி பெஸன்ட் சங்கத்திலிருந்த சிலை திருடப்பட்டுப் போயிருக்கிறது. அதில் உம்மை சம்பந்தப் படுத்துகிறார்கள்.

வக்கில்:—அந்தச் சிலையை நான் ஒருவனே திருடித் தூக்கிக்கொண்டு போனேன் என்கிறீர்களா?

உதவி அதிகாரி:—அது ஒரு மனிதரால் தூக்கக் கூடியதல்ல. பலர் சேர்ந்தே அதைத் தூக்கிக்கொண்டு போயிருக்க வேண்டும். இதில் சம்பந்தப்பட்டவர்களில் நீங்கள் ஒருவர் என்று அடையாளம் காட்டியிருக்கிறார்கள்.

வக்கீல்:—அந்தச் சிலை அதற்குப் பிறகு எங்கள் வீட்டில் இருக்கக் கண்டீர்களா?

உதவி அதிகாரி:—அது அவசியமில்லை. ஒரு வஸ்துவைத் திருடுகிறவர் அதை அவருடைய வீட்டிலும் வைக்கலாம்; வேறிடத்திலும் ஒளித்துவைக்கலாம். தம் வீட்டைப் போலீஸார் சோதனை போடுவார்களென்று எதிர் பார்த்து, அநேகமாய் எவரும் அதை வேறிடத்தில் வைப்பதே சகஜமாய் நடக்கக் கூடிய காரியம்.

வக்கில்:—அப்படியானல், அதை நான் வேறிடத்தில் ஒளித்து வைத்திருக்கிறேனென்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொண்டீர்களா? அது இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தீர்களா?

உதவி அதிகாரி:—அது இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கப்போகிறது? ஒளித்து வைத்திருப்பவர் அது இன்ன இடத்தில் இருக்கிறதென்பதைச் சொன்னல், அது உடனே எங்களுக்குத் தெரிந்து போகிறது.

வக்கீல்:—ஓகோ! அவ்வளவு அசகாய சூரர்களா! இந்த ஊர்ப் போலீஸ் அதிகாரிகள்! அப்படியானல் ஊர் வாழ்ந்து போய்விடும். திருட்டு ஸொத்து இருக்குமிடத்தை போலீஸாரே கண்டு பிடிக்கிறதில்லையா? எடுத்தவர் சொன்னல்தான் கண்டுபிடிக்கிறதோ?

உதவி அதிகாரி:—அப்படியல்ல. போலீஸார் முதலில் ஸொத்தைக் கண்டுபிடித்து, பிறகு திருடரைக்

கண்டு பிடிப்பதும் உண்டு; முதலில் திருடரைக் கண்டு பிடித்து அவருடைய உதவியாலோ, அல்லது சுதாவா கவோ பிறகு ஸொத்தைக் கண்டு பிடிப்பதுமுண்டு. இந்த வழக்கில் திருடர் முன்னால் அகப்பட்டுக் கொண் டிருக்கிறார். அவர் மனது வைத்து உதவி செய்தால், இதே க்ஷணத்தில் ஸொத்து கிடைத்துப்போகிறது.

வக்கீல்:—திருடர் அகப்பட்டுக்கொண்டால், கண் ணியமான பிரஜையான என்னை அழைத்து இப்படி அவமானப் படுத்த வேண்டியதென்ன?

உதவி அதிகாரி:—நீங்கள்தான் திருடர் என்று இப்போது இருவர் அடையாளம் காட்டினார்களே!

வக்கீல்:—என் உடம்பில் திருட்டு ஸொத்து ஒட்டிக் கொண்டிருக்கிறதா? நான்தான் திருடன் என்று அடை யாளம் காட்டுவதென்பதற்கு என்ன அர்த்தம் என்பது விளங்கவில்லை.

உதவி அதிகாரி:—திருட்டு ஸொத்தை மற்றவர் கொண்டுபோய் விட்டார்கள், அப்போது உள்ளே படுத் திருந்தவர்கள் விழித்துக் கொண்டார்கள்; விழித்து எழுந்து பார்க்கையில், கடைசியாக ஒரு திருடர் உள்ளே இருந்து ஓடினார். அப்போது அவருடைய அடையா ளத்தை எல்லோரும் கவனித்தார்கள். ஆனால் மற்றவர் கள் துரத்துவதற்குள் அவர் இருளில் எங்கேயோ ஓடி மறைந்து கொண்டார். அவர்கள் சொன்ன அடையாளங் களை வைத்துக்கொண்டு நாங்கள் சுமார் பதினைந்து மனி தர்களை வரவழைத்தோம். நீங்கள் தான் ஓடினவர் என்று இருவர் அடையாளம் கண்டுபிடித்துக் காட்டினார் கள்.

வக்கீல்:—நால்வரில் இருவர் போலீஸாரை யல்லவா காட்டினார்கள். ஏன் அந்தப் போலீஸாரும் இந்தத் திருட் டில் சம்பந்தப்பட் டிருக்கக்கூடாது. அந்த சங்கத்தின் ஸ்தாபகர்கூடப் போலீஸாரைத்தானே காட்டினார்.

உதவி அதிகாரி:—அவர்கள் இருவரும் தூர இருந்து பார்த்தவர்கள். உங்களை அடையாளம் காட்டிய இருவரும் திருடரைக் கிட்டத்தில் பார்த்தவர்கள். தூர இருந்தவர்களுக்குள் ஒற்றுமையில்லை; கிட்ட இருந்தவர் கள் ஒற்றுமையாய் ஒருவரையே காட்டியிருக்கிறார்கள். ஆகையால், உங்களைக் கைதியாக்கி யிருக்கிறோம். ஷை போலீஸ்காரர்களும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் என் பதற்கு நீங்கள் தக்க சாட்சியம் விடுவீர்களானால் அவர் களையும் கைதியாக்கத் தடையில்லை.

வக்கீல்:—என்னைப் பிடிப்பதற்கு மாத்திரம் சாட்சி தேவை யில்லையா?

உதவி அதிகாரி:—இப்போது இருவர் உங்களைத் தொட்டுக் காட்டினார்கள், அதைவிட இன்னம் வேறு சாட்சியம் எதற்காகத் தேவை?

வக்கீல்:—என்னைப்போல இந்த உலகத்தில் வேறு யாராவது இருக்கலாமல்லவா! அவர்கள் இரவில் பார்த் ததுதானே? ஆள் மாறாட்டமாக அவர்கள் என்னைக் காட்டியிருக்கலா மல்லவா?

உதவி அதிகாரி:—அதுவும் நடக்கக் கூடியதே. அதையெல்லாம் முடிவாக நிச்சயிக்க வேண்டியவர் நியாயாதிபதியே யன்றி, நாங்கள் அல்ல. எங்கள் முயற்சி யால் கிடைக்கும் சாட்சியத்தை நாங்கள் அப்படியே ஆஜர்படுத்தக் கடமைப்பட்டவர்கள்; தீர்ப்புச் சொல்லப் போகிறவர் நீதிபதி.

வக்கீல்:—அதுகூடவா ஒரு வக்கீலுக்குத் தெரி யாது.

உதவி அதிகாரி:—அப்படியானால், உங்களுக்குத் தெரிந்த விஷயத்தையே கேட்டு என்னைப் பரீட்சிக் கிறீர்களா? போதும் உங்கள் வாதம். எனக்கு வேறு வேலையிருக்கிறது. நான் இன்னொரு கேள்வி கேட்கி றேன். அதற்கு மறுமொழி கொடுங்கள். மூந்தாநாள்

இரவு 7-மணி முதல் 11-மணி வரையில் நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்? எங்கே இருந்தீர்கள்?

வக்கீல்:—மாலை ஆறு மணிக்குப் புறப்பட்டு ஆற்றங்கரைக்குப் போய் சுமார் ஒரு மணி காலம் மணலில் உட்கார்ந்திருந்துவிட்டு எட்டரை மணிக்கு வீட்டுக்குவந்தேன். ஒவ்வொரு தினமும் அப்போதுதான் கடிகாரத்திற்கு சாவி கொடுக்கிறது வழக்கமாதலால், மணி எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. அதற்குமேல் என் சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுப்பேன். நான் தூங்க ஆரம்பித்தபோது பத்து, அல்லது, பத்தரை இருக்கலாம். 11-மணிக்கு நான் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கலாம்.

உதவி அதிகாரி:—நீங்கள் இப்போது சொன்னது போலவே காரியங்கள் நடைபெற்றன என்பதற்கு நம்பிக்கையான சாட்சியம் இருக்கிறதா?

வக்கீல்:—நான் ஆற்றங்கரைக்குப் புறப்பட்டுப் போனது முதல் திரும்பி வந்ததுவரைக்கும், நான் யாரை சாட்சியாகக் கோருகிறது. அதற்கு சாட்சி இல்லை. வீட்டிற்கு வந்தபின் சாப்பிட்டுவிட்டுத் தூங்கியதற்கு என் தம்பியும் வேலைக்காரனும் சாட்சிகள்.

உதவி அதிகாரி:—கூடவே இருக்கும் மனிதர்கள் உங்களுக்கு விரோதமாக எப்போதாவது சாட்சியம் சொல்வதுண்டா? அவர்கள் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாகவே நினைத்துக் கொள்ளுகிறேன். அவர்களைத் தவிர, இன்னம் வேறே யாராவது சாட்சியுண்டா?

வக்கீல்:—போலீஸார் இப்படி அபாண்டமாய்க் குற்றம் சுமத்தப்போகிருர்களென்பது முன்னுகவே தெரிந்திருந்தால், யாரையாவது சிலரை அழைத்து வைத்துக்கொண்டிப்பேன்.

உதவி அதிகாரி:—அந்தக் காலத்தில் உங்களை அன்னி பெஸன்ட் சங்கக் கட்டிடத் தண்டை கண்ட

தாக இரண்டு பேர்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் வேறிடத்தி லிருந்தீர்கள் என்று வேறு தக்க மனிதர்கள் எவரேனும் சொன்னால், அவர்கள் பொய் சொல்வதாக எண்ணலாம். உங்களுக்கு சாட்சியம் இல்லாதபோது, அவர்கள் சொல்வது அபாண்டமான கட்டுப்பாடென்று நாம் தள்ளுவதெப்படி? இப்போது உங்களுடைய அடையாளத்தைக் காட்டினார்களே, இவர்களுக்கும் உங்களுக்கும் பழக்கமோ, பகைமையோ இல்லையே?

வக்கீல்:—அப்படியானால், என் தம்பியின் சாட்சியம் தக்க சாட்சியம் அன்றென்பது உங்கள் அபிப்பிராயமா?

உதவி அதிகாரி:—பிரத்தியக்ஷமாக உங்கள் விஷயத்தில் அபிமான முள்ளவர்களுடைய சாட்சியம் மாத்திரம் போதுமானதல்ல. அதோடு கூட இன்னம் அயலாருடைய சாட்சியம் அவசியம் தேவை.

வக்கீல்:—நீங்கள் ஒரு காரியம் செய்தால், இந்த ஊர் ஜனங்களுக்கு நன்மையாயிருக்கும். எந்த நிமிஷத்திலும் போலீஸார் எவர்மேலும் எந்தக் குற்றத்தை வேண்டுமானாலும் சுமத்தலாமாதலால், எவரும் வீட்டில் சாப்பிடும் போதும், படுத்திருக்கும்போதும், தூங்கும் போதும் தக்க சாட்சிகள் சிலரை வீட்டில் வைத்துக் கொண்டே எந்தக் காரியத்தையும் நடத்த வேண்டுமென்று தண்டோராப் போடுங்கள்.

உதவி அதிகாரி:—நீங்கள் எங்களுக்கு மேலதிகாரியா யிருந்து, இந்த மாதிரி உத்தரவு பிறப்பித்தால், இதை அவசியம் நிறைவேற்றியே இருப்போம்; துரதிஷ்டவசமாய், நீங்கள் எங்களுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாத நிலைமையில் இருக்கிறீர்கள். அதைப் பற்றித்தான் வருந்துகிறேன். உங்கள் கட்சிக்கு அனுகூலமாக நாங்கள் விசாரிக்கக்கூடிய சாட்சிகள் இல்லை யென்று எழுதிக் கொள்ளுகிறேன்.

வக்கீல்:—நீங்கள் எழுதிக் கொள்ளப்போகும் விஷயத்தை என்னிடம் எதற்காகச் சொல்லவேண்டும். என்னுடைய உத்தரவைப் பெற்று நீங்கள் ஒவ்வொன்றையும் எழுதிக்கொள்ளுகிறீர்கள். நான் போகிறேன்.

உதவி அதிகாரி:—நீங்கள் போகக்கூடாது.

வக்கீல்:—எனக்குக் கச்சேரியில் சில அவசர வேலைகள் இருக்கின்றனவே!

உதவி அதிகாரி:—அவைகளுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை.

வக்கீல்:—அப்படி என்னை நிறுத்தி என் வேலையைக் கெடுக்க உங்களுக்கு உரிமை யில்லையே!

உதவி அதிகாரி:—உங்களைத் திருட்டுக் குற்றத்திற்காக அரெஸ்ட் செய்திருக்கிறோம். இந்த வழக்கின் விசாரணை முடிகிறவரையில் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்.

வக்கீல்:—அதற்கு எத்தனை தினங்களாகுமோ; அதுவரையில் உங்களுக்கெதிரில் நான் இப்படியே நின்றுகொண்டிருக்கிறதா?

உதவி அதிகாரி:—(புன்னகை செய்து) நீங்கள் அப்படிச் செய்ய விரும்பினாலும், நான் இங்கேயே இருக்கத் தயாராயில்லை. விசாரணை முடிகிறவரையில் உங்களை விசாரணைக் கைதிகள் இருக்கும் சிறையில் வைத்திருப்போம். அங்கேயே இருக்கலாம்.

வக்கில்:—நான் ஜாமீன் கொடுக்கிறேன்; வெளியில் விடுங்கள்.

உதவி அதிகாரி:—உங்களை ஜாமீனில் விட நாங்கள் மறுக்கிறோம்; நீங்கள் அதைப்பற்றி நீதிபதிக்கு மனுச் செய்து கொள்ளுங்கள். (ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி,) சரி; எனக்கு வேறே அலுவல் இருக்கிறது; நான் போகி

றேன். இவரை நீதிபதியிடம் அழைத்துக் கொண்டு போய் பதினைந்து தினங்களுக்கு ரிமாண்டு பெற்று, தாவில் கொண்டுபோய்ச் சேரும்—என்று உத்தரவு பிறப்பித்துவிட்டு குபீரென்று எழுந்து, பின் பக்கத்தி லிருந்த ஒரு வாசற்படியின் வழியாக வெளியில் போய் விட்டார்.

அது வரையில் மறைவில் ஒளிந்திருந்தவனும், தன பால் செட்டியோடு திருவிளையாடல் நடத்தியவனுமான போலீஸ் ஜெவான் திடீரென்று ஸப்-இன்ஸ்பெக்டர் முன்னர் பிரஸன்னமாய் புன்னகை தவழ்ந்த வதனத் தோடு, ஸிகரெட்டு டப்பாவை எடுத்து அவரிடம் நீட்டி ஞன்.

ஜெவான்கள் அந்த மாதிரி பல வஸ்துக்களை சப்-இன்ஸ்பெக்டருக்கு அடிக்கடி சனமானிப்பதும், அவர் ஏது என்று கேட்காமல் பெற்றுக்கொள்வதும் வழக்கம். எக்கச்செக்கமாக அகப்பட்டுக் கொண்டவரிடம் அவர்கள் லஞ்சம் வாங்கி, அதில் தமக்கு ஒரு பகுதியை அந்த வடி வத்தில் சமர்பிக்கிருர்கள் என்றே அவர் எப்போதும் யூகித்துக் கொள்வார். அதுவன்றி, அப்போது பக்கத் தில் எவரேனும் மனிதர் இருந்தால் அவர் சம்சயப்படா திருக்கும்படி, ஷை சாமானைத் தாம் விலைக்கு வாங்கிவரச் சொன்னதாகப் பொருள் படும்படி ஏதேனும் மறுமொழி கூறுவார். அதேபோல வக்கீல் பக்கத்தில் இருந்தாராத லால், ஸிகரெட்டுப் பெட்டியைப் பெற்ற கோவிந்த ராவ், ஜெவானை நோக்கி, "இதற்கு எவ்வளவு கொடுத்தாய்" என்று கேட்டார்.

ஜெவான்:—ஒன்னரை ரூபாய்.

கோவிந்தராவ்:—இதிருக்கட்டும். அந்த தனபால் செட்டி நோட்டை எடுத்துக்கொண்டு போய்விட்டானு?

ஜெவான்:—யாருக்காகப் போகிறுன். நடக்கக்கூட இல்லை; ஓட்டமாக ஓடிப்போய்விட்டான். ரெண்டு கொடுத்தேன். அரைதான் மிச்சம்—என்றுன்.

அதைக் கேட்ட கோவிந்த ராவ், பக்கத்திலிருந்த வக்கீல் தப்பாக நினைத்துவிடப் போகிறாரே யென்று, "ஓகோ! நான் குடுத்த இரண்டு ரூபாயில், ஸிகரெட்டு டப்பா ஒன்னரை ரூபா போக, மிச்சம் எட்டணவா. சரி; அது உன்னிடமே இருக்கட்டும்" என்று கூறினர். ஜெவான் நோட்டை மாற்றி, செட்டிக்கு இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டு, தனக்கு ஒன்னரை ரூபாய்க்கு ஸிகரெட்டு டப்பா வாங்கியிருக்கிற னென்றும், ஒரு ரூபாயைத்தான் செலவு செய்திருக்கிறனென்றும், மிச்சமிருப்பது எட்டணவென்றும் கோவிந்த ராவ் அர்த்தம் செய்துகொண்டார்.

ஆனல் உண்மையில் ஜெவான், தான் செட்டிக்குப் பணமே கொடுக்கவில்லை யென்றும், தான் அவனுக்கு இரண்டு அறைகள் (அடிகள்) கொடுத்ததாகவும் அவனுக்குக் கிடைத்தது அறைதானென்றும் கூறினன். அது இரண்டு விதமான அர்த்தங்களைக் கொடுத்தது.

அவ்வளவோடு போலீஸ் தலைமை ஆபீஸ் நாடகக் காட்சி முடிய, சிறிது நேரத்திற்குப் பிறகு, நான்கு ஜெவான்கள் ரிமாண்டுக்காக நீதிபதிக்கு எழுதப்பட்ட குற்ற அறிக்கை யொன்றை எடுத்துக்கொண்டு வக்கீல் நாராயண ஐயரை அழைத்துக்கொண்டு, அவ்விடத்தை விட்டு நீதிபதியின் கச்சேரியை நோக்கிச் சென்றனர்.

2

குடியைக் கெடுத்த குட்டிச்சாத்தான்

அன்றையதினம் மாலை சுமார் ஏழு மணி யிருக்கும். சுயமரணபுரம் டவுன் போலீஸ் ஸ்டேஷனில் தனியான ஓர் அறையில் உதவி சூபரின்டென்டென்ட் மிஸ்டர் சுந்தரம் மிக விசனகரமான முகத்தோடு ஒரு நாற்காலி யில் வீற்றிருக்க, ஸப்-இன்ஸ்பெக்டர் கோவிந்த ராவ், மேஜைக்குப் பக்கத்தில் நிரம்பவும் அடக்க வொடுக்க மாக நின்றுகொண் டிருந்தார். சற்று தூரத்தில் சட்டைக் கார ஸார்ஜன்டொருவர் போலீஸ் கெஜட் அடுக்கை எடுத்துப் போட்டு நிரம்பவும் கவனமாக ஏதோ பழைய தகவலைத் தேடிக் கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண் டிருந்தார்.

அதற்குள் பல தடவைகள் கனைத்துத் தமது தொண் டையை சரிப்படுத்திக்கொண்ட மிஸ்டர் சுந்தரம், "இந்த மாஜிஸ்டிரேட் சுத்த அசட்டுக் கட்டுப்பெட்டி. கலெக்டர் கச்சேரியில் பல வருஷகாலம் இருக்கும் இருமுடங்களைத் தான் மாஜிஸ்டிரேட் வேலைக்கு நியமிக்கவேண்டு மென்று எந்தமுட்டாள் தான் ஏற்படுத்தினனே தெரிய வில்லை. **பாழ் ஊருக்கு நரி ராஜா** வென்று பழமொழி சொல்வதுண்டு. கலெக்டர் கச்சேரியில் இருந்து பொட்டை நெட்டுருப்போட்டு, இரண்டு பரீட்சைகளில் தேறிவிட்டால், அவன் மாஜிஸ்டிரேட் ஆகிவிடுகிறன். உலக அநுபவமா, வியவகார தந்திரமா, மனிதசுபாவமா என்ன தெரிகிறது! சுத்தப் பிச்சுத்தனமாய் வந்து உட் கார்ந்துகொண்டு, இப்போது தான் நேரில் ஆகாசத்தி லிருந்து குதித்த கடவுளின் பிரதிநிதிமாதிரி எண்ணிக் கொள்ளுகிறது. போலீஸ்காரர் என்றல், ஏதோ திருட் டுக் கூட்டத்தார், அல்லது, கொக்கலாடிக் கூட்டத்தார்

என்று நினைத்துக்கொள்ளுகிறது; ஏளனம் செய்கிறது; நாமொன்றைக் கேட்டால், தான் ஒருவிதமாக உத்தரவு பிறப்பிக்கிறது. இந்த இழவு சநியன்களோடு மாரடிக்கும்படி போலீஸாருடைய தலையில் எழுதிவிட்டானே ஈஸ்வரன்" என்றார்.

கோவிந்த ராவ்:—(மிகுந்த ஆவேசத்தோடு) இருந்தாலும், இந்த மாஜிஸ்டிரேட் அந்த வக்கீலை ஜாமீனில் விட்டது சுத்த முட்டாள் காரியம். இதுவரையில் இருந்தவர்கள் இப்படியா செய்தார்கள். எந்த விஷயத்திலும் நம்முடையே நோக்கத்தை அநுசரித்தே நடந்துகொண்டார்கள்; போலீஸாரிடம் மிக்க மதிப்பும் மரியாதையும் வைத்து நடத்தினார்கள். இந்த மனிதர் முதல் நம்பர் பிச்சுவாயிருக்கிறார். குதிரை கீழே தள்ளியது மில்லாமல் குழியும் தோண்டியது என்பதுபோல, வக்கீலை ஜாமீனில் விட்டதோடு மாத்திரம் நிற்காமல், போலீஸார் இந்த அன்னிபெஸெண்ட் சிலைத் திருட்டு விஷயத்தில் அவர்களுடைய கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை யென்பதை ஜில்லா மாஜிஸ்டிரேட் கவனிக்க வேண்டுமென்று எழுதிவிட்டாரே. எல்லோருக்கும் தலைக்கு கல் வரும்போ லிருக்கிறதே.

சுந்தரம்:—இந்த ஆஷாடபூதியும் அன்னிபெஸண்ட் சங்கத்தில் சேர்ந்தவன்போ லிருக்கிறது. அதனால் தான் அவனுக்கு அவ்வளவு தூரம் ரேங்கிப்போய் விட்டது. எப்பாடு பட்டாவது நாம் அந்தச் சிலையைக் கண்டு பிடித்து மீட்டுக்கொடுக்கா விட்டால்; நாம் எந்த வழக்கைக் கொண்டுபோனாலும், அவன் நம் காலை வாரி விட்டு விடுவது நிச்சயம். கொஞ்ச நேரத்திற்கு முன் வந்த நிஜாசப் புளுகன் பத்திரிகையில் இந்த வழக்கைப்பற்றி தலையங்கம் எழுதியிருக்கிறானே! அதைப் படித்தீரா? இவர்களெல்லாம் காகிதப் புலிகள். பந்தோபஸ்தான அறைக்குள் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து, மின்சார விசிறியின் கீழ் இருந்து, கட்டில வீட்டிற்குப் பணிக்குச் சொல்வதில் அசகாய சூரர்கள். வெளியுலகில் ஒரு

ரிக்ஷாக்காரனோடு பேசி சமாளித்துக்கொண்டு வருவதற்குக் கூட இவனால் ஆகாது. ரஸ்தாவில் நிற்கும் போலீஸ் ஜெவான் வந்து, இவனுக்கும் ரிக்ஷாக்காரனுக்கும் மத்தியஸ்தம் செய்து, ரிக்ஷாக்காரனால் அவன் அடி படாமல் அவனைக் காப்பாற்றி யனுப்ப வேண்டும். அவன் இந்த ஊர்ப் போலீஸார் சுத்த தவியற்றவர்கள் என்றும் இந்த வழக்கில் உண்மையைக் கண்டு பிடிக்கா விட்டால், எல்லோரையும் கூண்டோடு அந்தமான் தீவுக்கு அனுப்பிட்டு மறு வேலை பார்க்க வேண்டுமென்றும் எழுதி பேனா முனையால் பெரிய பயில்வான் வேலையைக் காட்டி யிருக்கிறான்.

கோவிந்த ராவ்:—ஒரு வேளை அவனும் அந்த லோகமாதாவினால் கடைத்தேற்றி விடப்பட்ட சிஷ்ய கோடிகளில் ஒருவனோ என்னவோ!

சுந்தரம்:—நீர் இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸொட்டுச் சொல்லிக் கொண்டே போகிறீரே யன்றி, சூரத்தனமாக வேலை செய்து திறமையைக் காட்டிக் கொள்ளுகிற தில்லை. உம்மைப் பார்த்தால் பங்கி உருண்டை தின்றவன்போல் இருக்கிறதே யொழிய, ஒரு ஸப்-இன்ஸ்பெக்டருக்கு இருக்க வேண்டிய ஊக்கமும், சுறுசுறுப்பும், கத்தி முனை போன்ற கருக்கான புத்தி சாதுர்யமும் இருப்பதாகத் தெரிய வில்லையே. பி. ஏ., பி. எல். பரீட்சைகளில் தேறிய கண்ணியமான ஒரு வக்கீலை யாரோ இருவர் அடையாளம் காட்டுகிறார்களென்று ஜெயிலில் அடைக்க வேண்டு மென்று ஒரு நீதிபதியிடம் கொண்டுபோய் நிறுத்தினால், எவனுக்குத்தான் கோபம் வராது. இன்னம் இதற்கு வேறு பல ஆதாரங்கள் இருக்க வேண்டும். முனைந்து பல துறைகளில் யுக்தி செய்து விஷயங்களைக் கண்டு பிடித்து ஆஜர்ப்படுத்த வேண்டும். இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற ஆதாரத்தை வைத்துக் கொண்டு, நாம் இந்த வக்கீலை தண்டனைக்குக் கொண்டுபோக முடியவே முடியாது. வழக்குக் கெட்டுப் போகும். நமக்கெல்லாம் பெரிய

அவகேடு வந்து நேருவது நிச்சயம். என் அபிப்பிராயத்தில், நீர் இந்த வழக்கிற்கு உபயோகப் படுவீர் என்று தோன்ற விலலை. ஸி. ஐ. டி. ஸப்-இன்ஸ்பெக்டர் எவனையாவது சென்னைப்பட்டணத்தி லிருந்து வரவழைத்து பிரத்தியேகமாய் இதற்கே ஸ்பெஷல் டியூடியில் நியமிக்கும்படி சூபரின்டென்டென்ட் துரையிடம் சொல்லலா மென்று எண்ணுகிறேன்.

கோவிந்த ராவ் :—நீங்களே இப்படி அபிப்பிராயப் பட்டால்; பிறகு என் உத்தியோகம் போனமாதிரிதான். சூபரின்டென்டென்ட் துரை எனக்கு உடனே சீட்டுக் கொடுத்து, வீட்டில் உட்கார வைத்து விடுவது நிச்சயம். இந்த இரண்டு தினங்களாய், எனக்கு தூக்க மென்பதே கிடையாது. சாப்பாட்டில் கூட கவனம் செல்ல வில்லை. நீங்கள் என்ன செய்யச் சொன்னாலும் அதை நான் செய்யத் தடை யில்லை. இதில் என் உயிருக்கே அபாயம் வருவதா யிருந்தால்கூட நான் பின் வாங்க மாட்டேன். பட்டணத்து ஸி.ஐ.டி. ஆசாமியும் நம்மைப்போல் மனிதன்தானே. உங்களுக்குத் தெரியாத அநுபவ தந்திரமும், யுக்தியும் அவனுக்குத் தெரியப் போகின்றனவா. நீங்கள் என்னை நடத்துங்கள். நான் அப்படியே காரியத்தை சாதிக்கிறேன்.

சுந்தரம் :—(சிறிது நேரம் சிந்தனையி லாழ்ந்திருந்து) சரி, இருக்கட்டும். நான் சூபரின்டென்டென்ட் துரையோடு கலந்து யோசித்து, ஆக வேண்டியதைச் சொல்லுகிறேன். எல்லாவற்றிற்கும் நீர் அந்த வக்கீலையும், தனபால் செட்டியையும், இன்னம் சந்தேகமான நபர்களையும் கவனிக்கும்படி உடுப்பில்லாத ஜெவான்களை அனுப்பி வையும்.

கோவிந்த ராவ் :—எல்லா இடங்களிலும் ஆள்களை நியமித்து அவசியமான ஏற்பாட்டை யெல்லாம் செய்து விட்டேன்.

சுந்தரம்:—அதெல்லாம் சரிதான். நாம் ஆள்களை பிடிப்பது மாத்திரம் போதாது. அந்தச் சிலை இருக்கு மிடத்தைக் கண்டு பிடிக்க முயற்சிக்க வேண்டும். அப் போதுதான் அதோடு ஆள்களை சம்பந்தப் படுத்துவது சுலபமாயும் திருப்திகரமாயும் இருக்கும்.

கோவிந்த ராவ்:—இதில் எனக்கு முக்கியமான ஒரு சந்தேகம் எழுந்து என் மனதைக் குழப்புகிறது. இந்தச் சிலையைக் கொண்டு போனவன் என்ன கருத் தோடு கொண்டு போயிருப்பான் என்பது நிச்சயப் பட் டால், நாம் தேடும் மார்க்கமும் தெளிவு படும் அன்னி பெஸன்டின் மேலோ, அவளுடைய கொள்கையின் மேலோ வெறுப்புடையவர்கள் வேண்டு மென்றே அவ மானப் படுத்த இதைச் செய்திருப்பார்களா?

சுந்தரம்:—அப்படி இருந்தால், அவர்கள் கீழ்ச் சாதித் திருடர்களா யிருக்க மாட்டார்கள். இந்த வக் கீலைப் போல படிப்பாளிகளா யிருப்பார்கள்.

கோவிந்த ராவ்:—அந்தச் சிலையை யாரும் அதே நிலைமையில் வைத்துக்கொள்ள விரும்ப மாட்டார்கள். அதிலுள்ள மெழுகை உருக்கினல், சுமார் 20, 30 ரூபாய் கூடக் கிடைக்காது. சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்று சொல்வதுபோல, இந்த சொற்பத் தொகைக்காக இவ்வளவு பருமனுள்ள சிலையைப் பலர் தூக்கிக் கொண்டு போவ தென்பது அசம்பாவிதமாகப் படுகிறது.

சுந்தரம்:—அந்த மாதிரி திருடரா யிருந்தால், அவர் கள் கீழ்ச் சாதியாராய்த்தா னிருக்க வேண்டும். இதில் வக்கீல் முதலியோரைச் சேர்க்க முடியாது.

கோவிந்த ராவ்:- இவ்விரண்டு வகுப்பாரைத் தவிர, இன்னொரு வகுப்பார் மேலும் நாம் சம்சயம் கொள்ள லாம். இது மிக அபூர்வமான விசைகள் வைக்கப் பெற் றிப்பதால், அவைகளின் மர்மத்தைக் கற்றுக்கொள்ள

வேண்டுமென்று எவரேனும் அபகரித்துக் கொண்டு போயிருக்கலாம். இந்த வகுப்பார் மீதுதான் எனக்கு பலமான சம்சயம் உதிக்கிறது.

சுந்தரம் :—அப்படியானால், நாம் கம்மாளர் முதலிய கைத்தொழிலாளிகள், இவ்வித சிலைகள் செய்யும் மராட்டிய சிற்பிகள் முதலியோருடைய வீடுகளை யெல்லாம் இரகஸியத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கோவிந்த ராவ்: —ஆம். இதைக் கண்டுபிடிப்பதற்கு நமக்கு சுமார் பதினைந்து தினங்களாவது வேண்டும். இதே வேலையாய் நானும் ஜெவான்களும் அலைய வேண்டும். இதை நான் செய்து முடித்து மிக சீக்கிரத்தில் திருட்டைக் கண்டு பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தினப்படிக் கடமைகளை வேறு யாராவது பதினைந்து தினங்களுக்கு கவனிக்கும்படி நீங்கள் ஏற்பாடு செய்தால், அது பெரிய உதவியாயிருக்கும். இன்னம் சொற்ப தினங்களுக்குள்ளாகவே இந்தத் திருட்டின் மர்மத்தைக் கண்டு பிடித்து எனக்கு இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்கு நீங்களே சிபார்சு செய்யும்படி நான் உங்களுக்கு சந்தோஷம உண்டாகும் விதமாய் வேலை செய்கிறேன்.

சுந்தரம்: —(சந்தோஷ முகமலர்ச்சியோடு) சரி; அப்படியே ஏற்பாடு செய்கிறேன். நீர் சிலையைக் கண்டு பிடியும். உமக்கு டிப்டி சூப்ரின்டென்ட் வேலையும் வாங்கித் தர பெரிய துரையிடம் சிபார்சு செய்கிறேன். இந்த ஆஷாடபூதி மாஜிஸ்டிரேட், தினசரிப் புளுகன் பிரகஸ்பதி ஆகியோருடைய இறுமாப்புக்கு அது கருடகர்வ பங்கம் போல் முடியும்—என்றார்.

அப்போது அங்கு ஒரு மூலையில் இருந்த டெலிபோன் மணி அடிக்க, சிறிது தூரத்திலிருந்த சார்ஜண்ட் அதனருகில் போய் பேசலானார். சிறிது நேரத்திற்குள் வியப்போடு திரும்பி மற்ற இருவர்களையும் பார்த்து, "501, வக்கீலை கவனிக்க ரஸ்தாவுலெ சக்கர்

அடிச்சுக்கினே இருந்தானும். வக்கீல் வூட்டுக்குப் பக்கத்துவூட்டுலெ, 'திருடன்'னு ஆரோ கூச்சப் போட்டாங்களாம். இவன் ஓடினனும், தெருக்கதவு தொறந்திருந்துதாம்; இவன் உள்ளே நொழெஞ்சானும். அப்ப மாடிப்படி வளியா அந்த வூட்டுக்காரரும் ஓடிவந்தாராம். அவுருக்கு வலதுகை இல்லியாம். இடதுகையிலே ஒரு தடி வச்சிருந்தாராம். அவன் அவருக்கிட்ட சங்கதியைக் கேட்டானும். சாஸ்திரி பண்ணிவச்ச செலெயைப் பார்த்து, அவுரும் அதே சிற்பிக்கிட்ட இன்னொரு செலெ பண்ணி அந்த வூட்டுலெவச்சுப் பத்து நாளாவுதாம. இன்னெக்கி மத்தியானம் எங்கேயோ அவசர வேலெயாப் போயி இப்பதான் வந்தாராம். வூட்டுக்குள்ளற ஆளுங்க பூந்து செலெயைக் கொண்டு போயிட்டானுங்களாம். அதே வூட்டுலெ டெலிபோனுலெ இருந்து 501, பேசுரான். ஒங்க ரெண்டு பேரையும் ஒடனே கூப்பிட்ருன்'' என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட உதவி அதிகாரி, மிஸ்டர் சுந்தரம், "இதோ வருகிறோம் என்று சொல்" என்று கூறியபடி சரேலென்று எழுந்தார். அவரும் கோவிந்த ராவும் திடுக்கிட்டு அபாரமான வியப்படைந்து ஒருவர் முகத்தை மற்றவர் ஆச்சரிய உணர்ச்சியோடு பார்த்துக் கொண்டனர்.

மிஸ்டர் சுந்தரம், "இதென்ன, இந்த அன்னிபெஸண்ட் சிலையை வைத்தாலும் வைத்தார்கள்; போலீஸாருக்குப் பைத்தியம்பிடிக்க மருந்தை உற்பத்திசெய்த மாதிரியிருக்கிறதே!" என்றார்.

கோவிந்த ராவ், "இது அதே வக்கிலின் வீட்டிற்கு அடுத்த வீடாமே! மறுபடியும் நம் சம்சயம் அந்த வக்கீலின்மேல் போகும்படியாகக் காரியம் நடந்திருக்கிறதே!" என்றார்.

உதவி அதிகாரி அசட்டுப் புன்னகையோடு, "**அவசரப்படேல்** என்று பெரியோர் சொல்வதுண்டு. அந்த

வக்கீல் ஜாமீனில் வந்துவிட்டதை அறிந்து, யாராவது விரோதி அவர்மேல் சம்சயம் ஏற்படும்படி இதைச் செய்தாலும் செய்திருக்கலாம். இன்று மத்தியானம் தானே அவரும் ஜாமீனில் விடுபட்டார்; வக்கீல்களைப் போல நாம் இதை லெக்கிலுக்கு சாதகமாயும் வியாக்யானம் செய்யலாம். வாரும்: நாம் இருவரும் உடனே போய்ப் பார்ப்போம. ஆள்களைக் கண்டுபிடிக்க ஏதாவது புலம் அகப்படாதா?'' என்று கூறியபடி துடியாக வெளியில் நடக்க, ஸப்-இன்ஸ்பெக்டர் அவரைப் பின்தொடர்ந்து ஓடினர்.

இருவரும் மிக அவசரமாக வெளிப்பட்டு, மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு ஐந்து நிமிஷத்திற்குள்ளாகவே, தெற்கு ராஜவீதிக்கு வந்து, மிஸ்டர் கலியாணத்தின் வீட்டை யடைந்தனர். அப்போது அந்த வீட்டின் முன்பக்கத்தில் ஏராளமான ஜனங்கள்கூடி பெரிய கும்பலாய் நின்றனர். போலீஸ் அதிகாரிகள் வந்ததைக் கண்டு ஜனங்கள் ஒதுக்கி வழி விட்டுவிட்டு, தூர இருந்தபடி வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றனர்.

வண்டியை விட்டிறங்கிய உதவி அதிகாரியும், ஸப்-இன்ஸ்பெக்டரும் வீட்டிற்குள் நுழைய, அதன் அடிப்பாகத்தில் இருந்த கலியாணமும், ஜெவானும் அவர்களைக் கண்டு வணங்கினர். அப்போது ஜெவான் உதவி அதிகாரியிடம் ஏதோ பேச ஆரம்பிக்க, பின்னவர் கையமர்த்தி, பேசாமல் இருக்கச் சொல்லிவிட்டு, கலியாணத்தை நோக்கி, ''இங்கே என்ன நடந்ததென்பதை நிதானமாகவும் தெளிவாகவும் சொல்லுங்கள்'' என்றார். கலியாணம், அங்கிருந்த ஒரு நாற்காலியில் உதவி அதிகாரியை உட்காரவைத்து மரியாதை செய்த பிறகு, '' நான் இன்றைய தினம் பகலில் 3-மணி முதல் கொஞ்ச நேரத்திற்கு முன்புவரையில் ஒரு காரியமாய் வெளியில் போயிருந்தேன். போனபோது தெருக்கதவை மூடிப் பூட்டுக்கொண்டுபோனேன். கொஞ்சநேரத்திற்கு முன்பு வந்தேன், கதவு பூட்டப்பட்டபடியே இருந்தது. எனக்கு அப்போது எவ்விதமான சம்சயமும் உண்டாகவில்லை.

கதவைத் திறந்து சுமமா சாத்தி வைத்துவிட்டு மாடிக்குப் போய் ஹாலின் விளக்கை ஏற்றினேன். அங்கே சிலை இருந்த இடத்தை நான் தற்செயலாய்ப் பார்க்க, அந்த இடம் காலியா யிருந்தது. அடுத்த நிமிஷம் விஷயம் என் மனதில் பட்டுவிட்டது. நான் ஆசையோடு வாங்கி வைத் திருந்த சிலை போய்விட்டதென்பது உடனே தெரியவே, எனக்கு பகீரென்று ஆய்விட்டது. அப்போது அது எனக்கு நம்பிக்கைப்படவே இல்லை. நான் என் கண் களையே நம்பவில்லை. மூன்றுநான்கு மனிதர்கள்சேர்ந்து தூக்கக்கூடிய சிலை எப்படித்தான் அந்தர்த்தானமா யிருக்குமோ வென்று மலைத்தேன். அப்போது திருடன் எவனாவது வீட்டிற்குள் இருப்பானோ வென்றும்,எனக்கு ஏதேனும் அபாயம் விளைவிப்பானோ வென்றும் எனக் குள் பெரிய திகில் உண்டாகிவிடவே, நான் வெறும் மிரட்டலுக்காக ஒரு தடியை இடது கையில் வைத்துக் கொண்டு 'திருடன், திருடன்' என்று கூச்சலிட்டுக் கொண்டே கீழே இறங்கி வந்தேன். எதிரில் இந்த ஜெவான் வந்தார். இவரிடம் விஷயங்களைச் சொன் னேன். பிறகு இவரும் நானும் விளக்குகளை ஏற்றி, கீழேயும் மேலேயும் ஓரிடம் விடாமல் தேடினோம். யாரும் காணப்படவில்லை" என்றார்.

உதவி அதிகாரி, ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத் தை நோக்கி, "இது புராணக் கதை மாதிரியல்லவா இருக்கிறது. இவர்கள்சொன்னதையும், ஜெவான் டெலி போனில் சொன்னதையும் ஒத்திட்டுப் பார்த்தால், முக் கியமான ஓர் அநுமானம் ஏற்படுகிறது. அதென்ன சொல்லும் பார்க்கலாம்" என்றார்.

கோவிந்த ராவ்:—(இடது கைவிரல்களால் மூக்கை இழுத்து விட்டுக்கொண்டு யோசனை செய்தபடி) இவர் உள்ளே வந்தபோது கதவை மூடிவிட்டு வந்தார்; ஜெவான் வந்தபோது, கதவு திறந்திருந்தது.

உதவி அதிகாரி:— அதுதான் நான் குறித்த பாய்ன்ட். அதிலிருந்து என்ன அநுமானம் ஏற்படுகிறது? இவர் வந்தபோது யாரோ ஆள் உள்ளே இருந்திருக்க வேண்டும்; இவர் மேலே போனவுடனும், ஜெவான் வந்ததற்கு முன்னும் கதவைத் திறந்து வைத்துவிட்டு அவன் வெளியில் ஓடியிருக்க வேண்டும்—என்று கூறி விட்டு ஜெவானை நோக்கி, "அடேய் 501, நீங்கள் எல்லோரும் இந்தப் போலீஸ் உத்தியோகத்திற்கு ஏன் வந்தீர்கள்! மண்டையை உடைத்தால், தம்பிடி அளவுகூட மூளை இல்லாத ஆடுகளெல்லாம் போலீஸில் வந்து வெறும் காக்கைக் கூட்டம்போ லிருந்தால், ஏன் இந்த இலாகாவின் பெயர் கெடாது. அடேய், நீ ஓர் அடைப்பைப் பையை சம்பாதித்துக்கொண்டு ரஸ்தாவில்போய் வந்துகொண்டிருக்கத்தான் அருகமானவன். நீ போலீஸ் இலாகாவில் ஏன் சேர்ந்து கொண்டாய்?" என்றார்.

ஜெவான்:—(அஞ்சி நடுங்கி விழித்து நின்ற வண்ணம்) நானு ஒண்ணும் தப்புப்பண்ணலீங்களே துரையே.

உதவி அதிகாரி:—ஷட் அப் (Shut up), பொறுக்கி எடுத்த முட்டாளே! உனக்கெதிரில் ஆள் வெளியில் ஓடி யிருக்கிறான். அவனை உடனே பிடித்துக்கொள்ளாமல், ஒரு மைலுக் கப்பாலுள்ள எங்களை டெலிபோன் வழியாகக் கூப்பிடுகிறாயே! நாங்கள் வந்து இப்போது யாரைப் பிடிக்கிறது? உன்னைத்தான் திருடனென்று பிடித்துக்கொள்ள வேண்டும்.

ஜெவான்:—நானு வந்தப்ப எங்கண்ணுலே ஒருத்தரும் படலீங்க. பட்டிருந்தா நானு அப்பிடி உட்டுடுவேனுங்களா.

உதவி அதிகாரி:—(முகத்தைச் சுளித்தபடி கலியாணத்தை நோக்கி) இந்தச் சிலையை யார் செய்து கொடுத்தது?

கலியாணம்:—சாஸ்திரியாருக்குச் செய்து கொடுத்தாரே மாராட்டிய சித்திரக்காரர், அவர்தான்.

உதவி அதிகாரி:—எத்தனை ரூபா கொடுத்து வாங்கினீர்?

கலியாணம்:—எழுநூறு ரூபாய்—என்றார்.

கலியாணம் தெரிவித்த தகவல்களை யெல்லாம் ஸப்-இன்ஸ்பெக்டர் தமது நோட்டுப் புஸ்தகத்தில் குறித்துக் கொண்டு, அடியில் அவருடைய கையெழுத்தைப் பெற்றுக் கொண்டார். அவரும் உதவி அதிகாரியும் அந்த வீட்டின் கீழ்ப்பாகம, உப்பரிகை யாகிய இரண்டு பகுதிகளையும் நன்றாக கவனித்துப் பார்த்துவிட்டு, தாங்கள் சொல்லியனுப்பும் போது வருமாறு கலியாணத்தினிடம் கூறிவிட்டு கோவிந்தராவுடன் மோட்டார் வண்டியில் ஏறி மறுபடி ஸ்டேஷனை யடைந்தனர். இருவருடைய முகங்களும் மிகுந்த வாட்டத்தையும் கவலையையும் காட்டின. இருவரும் தமது ஆசனங்களை யடைந்த பின்னும் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர். அப்போது உதவி அதிகாரி, 'சரி வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு ஒரு பிடி அவல் அகப்பட்ட மாதிரி இதுவும் துணை சேர்ந்துகொண்டது. நம் நிலைமை முன்னிருந்ததைவிட இப்போது நிரம்பவும் கடினமான தாகிவிட்டது. இனி நாம் விழிப்பாக வேலை செய்யாவிட்டால் நம்பாடு திண்டாட்ட மாகிவிடும்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இப்போது நாம் முதல் முதலில் ஒரு காரியம் செய்வது அவசியமாகப்படுகிறது. அந்த சித்திரக்காரரிடம் உடனேபோய், அவர் அன்னி பெஸன்ட் சிலை இன்னம் யார் யாருக்குச் செய்துகொடுத்திருக்கிறார் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது. அந்தச் சிலை இன்னம் எங்கேயாவது இருந்தால், அங்கே ஆள்களைப் பாராப்போட்டு வைத்தால் இந்த இரண்டு திருட்டுக்களுக்குத் துணையாக மேன்மேலும் அதிகத் திருட்டுகள் நேராமல் இருக்கும். நம் நிலைமை இன்னும் அதிக சிக்கலானதாய் மாறாது.

1324

உதவி அதிகாரி:—அதை நானும் நினைத்தேன். நீர் சொல்லிவிட்டீர். சரி, அதை உடனே கவனியும்.

கோவிந்த ராவ்:—இந்த இரண்டாவது திருட்டு நடந்ததை நாம் ஒரு விதத்தில் நன்மையாகத்தான் கருத வேண்டும்.

உதவி:—ஏன்?

கோவிந்த ராவ்:—நாம் இதற்கு முன்கொண்ட சந்தேகங்கள் ஒரு விதமாய்த் தெளிவுபடுகின்றன. கேவலம் பணலாபத்தை உத்தேசித்துத் திருடுகிறவனை தொழிலாளித் திருடனால் இவை நடத்தப்படவில்லை, என்பது தெரிகிறது.

உதவி அதிகாரி:—எப்படி?

கோவிந்த ராவ்:—அவனுக்கு சொத்தின்மேல் நாட்டமே பொழிய, அன்னிபெஸன்டின் சிலைகளை மாத்திரம் எடுக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகாதல்லவா. இந்த இரண்டாவது திருட்டில் அந்த வீட்டில் விலை பெற்ற பொருள்கள் எத்தனையோ இருக்க, அவைகளில் எதையும் தொடாமல் சிலையை மாத்திரம் கொண்டு போனதிலிருந்து எவனோ வேண்டுமென்றே சிலைகளை மாத்திரம் கொண்டு போகிறான் என்பது தெரிகிறது. எனவே இது திருட்டுத் தொழிலாளியால் நடத்தப்பட்டதல்ல. இந்தச் சிலையைச் செய்யும் விதத்தைக் கற்றுக் கொள்ள விரும்பும் சிற்பியால் எடுக்கப்படவில்லையென்பதும் நிச்சயமாகிறது. ஏனென்றால் அந்தக் கருத்தோடு கொண்டு போகிறவனுக்கு ஒரு சிலையே மாதிரிக்குப் போதுமானது. இரண்டாவது அவசியமில்லை. ஆகையால் அந்த வகுப்பாரையும் நாம் நம்முடைய சம்சயத்திலிருந்து நீக்கிவிட வேண்டியதுதான்.

உதவி அதிகாரி:—ஏன் இன்னொரு விதமாகவும் இருக்கலாமல்லவா. பல தொழிலாளிகள் அதைப் பார்த்துக் கற்றுக் கொள்ள எண்ணலாம். ஒரு சிலை ஒரு

வனால் திருடப் பட்டதைக் கண்டு, இன்னொருவன் இன்னொன்றைத் திருடிக்கொண்டு போயிருக்கலாம். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமலே இவைகளை நடத்தி யிருக்கலாம்.

கோவிந்த ராவ்:—அப்படி ஒரே காலத்தில் பல தொழிலாளிகள் ஒரேவிதமான எண்ணத்தைக் கொண்டிருப்பார்களா என்பது சந்தேகமாக யிருக்கிறது. இது அபூர்வமான வேலைப்பாடுடைய தாகையால், அவ்வளவு திறமைசாலிகள் பலர் இந்த ஊரில் இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இருந்தாலும் அந்த வகுப்பாரை நாம் சுத்தமாம் விலக்கிவிடா விட்டாலும், இரண்டாம் பட்சமாக கவனிக்க வேண்டும். இப்போது நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டியவர்கள் அன்னிபெஸன்டின் மேலோ, அவருடைய கொள்கையின் மேலோ விரோதம் பாராட்டும் அறிவாளிகளே.

உதவி அதிகாரி:—சரி; உமக்கு எது சரியாய்ப் படுகிறதோ அதைச் செய்யும். எப்படியாவது சரியான ருஜுவோடு நீர் திருடனைக் கண்டு பிடிப்பதையே நான் கோருகிறேன். எனக்கு நேரமாகிறது. நான் பெரிய துரையின் பங்களாவிற்குப் போய் அவரிடம் சங்கதிகளைச் சொல்ல வேண்டும், நீர் ஆகவேண்டியதைச் செய்யும்—என்று கூறி விட்டு சரேலென்று வெளியில் போய்த் தமது மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு சென்று விட்டார்.

அவர் அவ்விடத்தை விட்டுப்போன பிறகு, அவர் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் கோவிந்த ராவ் அமர்ந்து கொண்டு, அப்போதும் ஏதோ பழைய கெஜட்டைப்புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த ஸார்ஜண்டை நோக்கி, "என்னப்பா, ஸார்ஜெண்ட் தொரையே, அப்போது முதல் தேடுகிறாயே; கழுத்து நோகப்போகிறதே. வா அப்பா இப்படி. வீட்டுக்குப் போக நேரமாகவில்லையா? துரைஸானி கதவைத் திறக்க மாட்டேன் என்றால், உன்பாடு திண்டாட்டமாகி விடும்" என்று தாமாஷாகப்

பேச ஆரம்பித்தபடி சிகரெட்டப்பாவைத் திறந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து இழுக்கலானார். உடனே ஸார்ஜெண்டும் சந்தோஷ முகமலர்ச்சி யடைந்து எழுந்து வந்து, "ஒரு டப்பா நிறைய சிகரெட்டு வந்ததே. நீ மாத்திரந்தானா ருசி பார்க்கிறது. கொஞ்சம் தான தர்மம் பண்ணப்பா" என்று புன்னகையோடு கூறியபடி வந்து அவருக்குப் பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர், "உனக்கு இல்லாமலா! இதோ எடுத்துக்கொள்ளப்பா," என்று கூறியபடி டப்பாவை எடுத்து, அதிலிருந்து பத்து சிகரெட்டுகள் எடுத்து, ஸார்ண்டிற்கு முன் வைக்க, அவர் முகமலர்ச்சியோடு ஒன்றைப் பற்ற வைத்து வாயில் இடுக்கிக்கொண்டு மற்றவைகளை எடுத்துத் தமது சட்டைப் பைக்குள் திணித்துக்கொண்டார்.

கோவிந்த ராவ்:—இன்று 501-க்கு மிஸ்டர் சுந்தரம் நல்ல சவுக்கடி கொடுத்தார். அடைப்பப் பையை எடுத்துக்கொண்டு சிரைக்கப் போகாமல், போலீஸ் உத்தியோகத்திற்கு ஏன் வந்தாய் என்று கேட்டார். ஆள் அப்படியே செத்துப் போய்விட்டான்.

ஸார்ஜெண்ட்:—அவன் மேலும் தப்பு இருக்கிறது திருடன் திருடன் என்ற சத்தம் கேட்டவுடன், ரஸ்தாவில் அந்த வீட்டண்டை போன எவனையாவது ஒருத்தனை கப்பென்று பிடித்துக்கொள்ளவேண்டும்; அவன் உள்ளே இருந்து ஓடிவந்தான், பிடித்துக்கொண்டேன் என்று சொல்லவேண்டும். முட்டாள் பயல். நல்ல சந்தர்ப்பத்தை இழந்து, அம்பட்டன் என்ற பட்டத்தையும் சம்பாதித்துக் கொண்டான்.

கோவிந்த ராவ்:—இந்தப் போலீஸ் உத்தியோகத்தில், நியாயம், இரக்கம், பகுத்தறிவு முதலியவைகளுக்கு இடமே இல்லை. நீ சொல்வதுபோல் 501-செய்திருந்தால், எவனாவது நிரபராதி அகப்பட்டுக்கொண்டு, தண்டனை

யடைவான்; இவன் சுலபத்தில் முன்னுக்கு வந்துவிட லாம்.

ஸார்ஜண்ட்: ஏன், நீ கூடத்தான் அந்த வக்கீலைப் பிடித்துக்கொண்டு போய்க் கச்சேரியில் நிறுத்தினாய். உனக்கு ஏன் காரியம் பலிக்காமல் போயிற்று எதிலும் கொஞ்சம் குருட்டு அதிர்ஷ்டமும் கலந்து கொள்ள வேண்டும்.

கோவிந்த ராவ்:—எனக்கு இன்னமும் அந்த வக்கீ லின மேல்தான் சந்தேகம் உண்டாகிறது. அவன் பெரிய போக்கிரி; எவரா யிருந்தாலும், இலட்சியம் செய்யாமல் தாறு மாறாகப் புரளி பண்ணுவான்; அவனுக்குக் கச் சேரியிலும் வரும்படியே கிடையாது. ஊர் அக்கப்போரி லேயே அவன் பொழுதைப் போக்குவான். அன்னி பெஸண்டைப்பற்றி, அவன் தாறுமாறாய்த் தூற்றியதை நானே சில தடவைகளில் கேட்டிருக்கிறேன்.

ஸார்ஜண்ட்:—(புன்னகையோடு) என்னப்பா, அந்த சாஸ்திரிக்கு அன்னிபெஸன்ட் கிட்ட அவ்வளவு ஜோர் கிளம்பிவிட்டது?

கோவிந்த ராவ்:—(சந்தோஷ முக மலர்ச்சியோடு) வெள்ளைத்தோல் மகிமையப்பா! உங்கள் மகிமை லேசா னதா! நான் பி. ஏ. பரீட்சையில் தேறி, 75 ரூபாய் சம் பளம் வாங்குகிறேன். அதற்கு நாயாய்க் குலைக்கவேண்டி யிருக்கிறது. அலைகிற அலைச்சலில் எங்கள் அம்மாள் கொடுத்த செவ்வெண்ணெயெல்லாம் கழன்றுபோகிறது. ஏதாவது கேஸ் வந்துவிட்டால், நான் படுகிற பாட்டைப் பார்த்துவிட்டு என சம்சாரம், 'என்ன உங்கள் மேல் ஏதா வது கொலைக்கேஸ் வந்திருக்கிறதா என்ன, இப்படி வேதனைப்பட்டு உயிரை விடுகிறீர்களே!' என்று டோஸ் (Dose) கொடுக்கிறாள். நீ ஏ, பி, ஸீ, டி கூடப் படித் தாயோ இல்லையோ; உனக்கு 150 ரூபாய் சம்பளம். இது உங்கள் வெள்ளைத்தோல் மகிமைதானே தொரையே. நான் சொல்வதைப்பற்றி கோபப்படாதே.

ஸார்ஜண்ட் :—அடே, ஏனப்பா, பொறுமைப்படு கிறாய். நீ மூளையை வைத்துக்கொண்டு பிழைக்கிறாய் நான் வெள்ளைத்தோலை வைத்துக்கொண்டு பிழைக்கிறேன். உன் மூளையைக் கண்டு நான் பொறுமைப்படவில்லை. உன் மூளையைக் கொண்டு நீ நாளைக்குப் பெரிய சூபரின் டென்டெனட் வேலைக்கு வந்துவிடுவாய்; நான் அப்போதும் ஸார்ஜண்டாய்த்தா னிருப்பேன். அப்போது நீ இப்படி ஸிகரெட்டைப் பங்கிட்டுக் கொடுப்பாயா ?

கோவிந்த ராவ் :— கலகலவென்று சிரித்து) நீ பயப் படாதே தொரை; நான் ஜில்லா சூபரின்டென்டென்ட் வேலைக்கு வந்தால், உனக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் வேலை கொடுக்கும்படி நான் சிபார்சு செய்கிறேன்.

ஸார்ஜண்ட்:—இருக்கிற வேலைக்கு அபாயம் இல்லாமல் காப்பாற்றிக்கொண்டால் அதுவே போதும் அப்பா —என்றார்.

இவ்வாறு அவர்கள் இருவரும் தங்கள் உத்தியோகக் கவலைகளினிடையில் குழந்தைகள்போல் சற்று விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் அதைக் கண்டு பொறாமல் கோபித்துக் கொள்ளுகிறதோ என்று கருதும்படி டெலிபோன் எந்திரம் கணகணவென்று ஓசை செய்தது.

"யாரப்பா அது! நீ தான் பார்" என்றார் ஸார் ஜண்ட்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் அயர்வாக எழுந்து டெலிபோனண்டை போய், அதை எடுத்துவைத்துக் கொண்டு, 'யாரது" என்றார்.

மறுபக்கத்தி லிருந்தவர்:—நீர் கோவிந்தராவா?

கோவிந்த ராவ்:—ஆம். நான் கோவிந்தராவ்தான்.

மறுபக்கத்தி லிருந்தவர்:—நான் அஸிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட்; பெரிய துரை பங்களாவிலிருந்து பேசுகிறேன்.

கோவிந்த ராவ்:—இந்த இரண்டு திருட்டுகளையும் பற்றி பெரிய துரை என்ன சொல்லுகிறார்கள்?

உதவி அதிகாரி:—அதைப்பற்றி அவர் சொல்வ திருக்கட்டும். உம்முடைய பேரிலும், 647-பேரிலும தனபால் செட்டி கோள் மனு எழுதி பெரிய துரைக்கு அனுப்பி யிருக்கிறனே!

கோவிந்த ராவ்:—(திடுக்கிட்டு பயந்து நடுநடுங்கி) என்னைப்பற்றி அவன் எழுதுவதற்கு என்ன இருக்கிறது?

உதவி அதிகாரி:—நான் அவனுக்கு யாசகமாக ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேனல்லவா. அதில் ஒரு காசுகூட அவனிடம் சேரவில்லையாம். பணத்தில் பெரும் பாகத்தையும் 647 செலவிட்டுவிட்டானும்; செட்டியிடம் இரண்டணு கொடுக்கப்போனுனும்; செட்டி மறுத்து, என்னிடம் புகார் சொல்ல வந்தானும்; 647, செட்டியை அறைந்து துரத்தி விட்டானும்; அவன ஒன்னரை ரூபாய்க்கு ஸிகரெட் டப்பா யொன்றை வாங்கிக் கொண்டு வந்து உமக்குக் கொடுத்தானும். இப்படி யெல்லாம் செட்டி பெரிய துரைக்கு மனு எழுதிப் போட்டிருக்கிறன். அதை வைத்துக்கொண்டு, அவர் என்மேல் சீறி விழுந்து, உங்களுக்கெல்லாம் இவ்வளவு தூரம் இடம் கொடுத்தது நான்தான் என்று சொல்லி என் மேல் பாய்கிறர். ஏன் நீங்கள் இப்படி யெல்லாம் பெயரைக் கெடுத்துக்கொள்ள வேண்டும். [illegible] யில் சந்கூவ [illegible] போல, ஒருவனுக்கு இன்னொருவர் யாசகம் கொடுத்தால் அதை போலீஸாரே கொள்ளையடிப்பது எவ்வளவு கன்னணியமான வேலை! பெரிய துரை உங்கள் இருவரையும் இலேசில் விடமாட்டார்போ

லிருக்கிறது. வருவதை அநுபவியுங்கள். அதோ பெரிய துரையே வருகிறார்; வந்து உம்மோடு பேசப்போகிறார்; ஏதாவது ஒழுங்காகப் பதில் சொல்லி, தப்பித்துக் கொள்ள வழிபாரும்—என்றார்.

அதைக் கேட்ட கோவிந்த ராவுக்கு இடி விழுந்தது போன்ற மன அதிர்ச்சியும், திகிலும், குலை நடுக்கமும் உண்டாகிவிட்டன. பெரிய துரையான சூபரின்டென்டென்ட் தம்மிடம் பேசினால், அதைப்பற்றி தாம் என்ன சமாதானம் சொல்வ தென்பதை நிச்சயிக்க மாட்டாதவராய்த் திருடன்போல் விழித்துக்கொண்டு நிற்க, அடுத்த நிமிஷம் பெரிய துரை அவருடன் டெலிபோன் வழியாய்ப் பேசலானார்.

பெரிய துரை:—தனபால் செட்டி என்பவன் எனக்கு ஒரு மனு அனுப்பி யிருக்கிறான். மிஸ்டர் சுந்தரம் அவனுக்கு யாசகமாகக் கொடுத்த ஐந்து ரூபாயில், 647-பெரும்பாகத்தை எடுத்துக்கொண்டு, உமக்கு ஒன்றரை ரூபாய்க்கு ஸிகரெட் டப்பா வாங்கிக் கொடுத்தானும்; தனபால செட்டியை அடித்துத் துரத்தினானும். இதற்கெல்லாம் கடைக்காரர் முதலியோர் சாட்சி யிருக்கிறார்களாம். வழிப்பறி நடத்தி அடித்த குற்றத்திற்காக 647-ஐ சார்ஜ் பண்ணவும், திருட்டு சொத்தை வாங்கியதற்காக உம்மைச் சார்ஜ் செய்யவும் வேண்டுமென்று மனுவில் கேட்டுக்கொண்டிருக்கிறான். இதற்கு நீர் என்ன சமாதானம் சொல்லுகிறீர்?

கோவிந்த ராவ்:—647-என்ன செய்தானே எனக்குத் தெரியாது. அவன் என்னிடம் ஒரு டப்பா ஸிகரெட்டைக் கொண்டுவந்து கொடுத்தான். நான் முட்டாள் தனத்தினால் அதை வாங்கிவிட்டேன். துரை அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும். செட்டியின் பணத்தை எடுத்து இப்படி யெல்லாம் செய்யும்படி நான் 647-க்குச் சொல்லவில்லை. அவனே இப்படி யெல்லாம் செய்துவிட்

டான். நான் ஸிகரெட்டின் கிரயமாகிய ஒன்னரை ரூபாயை செட்டிக்குக் கொடுத்து விடுகிறேன்.

பெரிய துரை:—647, உம்மிடம் ஸிகரெட் டப்பா கொடுத்தது, வக்கீல் நாராயண ஐயருக்குத் தெரியுமாம். செட்டி அவரை சாட்சி போடப் போகிறானும். ஆகையால் இதில் நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. சாட்சிகள் எல்லோரும் உண்மையைச் சொல்லும் பட்சத்தில் உம்மீதும், 647-ன் மீதும் அவசியம் கிரிமினல் குற்றம் ஏற்படும். ஆகையால் உங்கள் இருவரையும் நான் மன்னிக்க முடியாது. அப்படிச் செய்தால், பிறகு இது என் மேல்கூட குற்றமாய் முடியும். ஆகையால், இந்த வழக்கை விசாரிக்கும்படி உதவி அதிகாரியிடம் மனுவைக் கொடுத்திருக்கிறேன். அதுவரையில் உங்கள் இருவரையும் வேலையிலிருந்து சஸ்பெண்டு செய்திருக்கிறேன். உம்முடைய சார்ஜை, ஸார்ஜண்ட் ஜாக்ஸனிடம் ஒப்புவித்துவிடும். அவரை இப்படி டெலிபோனுக்கு வரச்சொல்லும்—என்றார்.

தமது நிலைமையில் திடீரென்று அவ்வித மாறுபாடும், மானக்கேடும் நேருமென்று அவர் சிறிதும் எதிர்பார்க்காதவராதலால், திடீரென்று தலையில் அடி பெற்றவர் பொறிக் கலக்கமடைந்து திகைத்துப் பேசுவது போன்ற நிலைமையை அடைந்த கோவிந்தராவ், "ஐயா, ஸார்ஜண்ட் துரையே, உன்னைப் பார்த்துப் பொறாமைப் பட்டது கைமேல் பலித்துவிட்டது; எனக்கு சூபரின்டென்டென்ட் வேலை ஆயிருக்கிறது. என் வேலை உனக்கு ஆயிருக்கிறது பெரிய துரை கூப்பிடுகிறார். டெலிபோனில் பேசு" என்றார்.

அதைக் கேட்டு திடுக்கிட்டுப்போன ஸார்ஜண்ட், உடனே டெலிபோனண்டை போய்ப் பெரிய துரையுடன் பேசி, உண்மையைத் தெரிந்துகொண்டு, வாட்டமடைந்த முகத்தோடு திரும்பிவந்து மௌனமாகவே தமது நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, தமது சட்

டைப்பையிலிருந்த ஸிகரெட்டுகளை யெல்லாம் எடுத்து கோவிந்தராவுக்கு முன்னால் வைத்துவிட்டு, தமது கையில் புகைந்து கொண்டிருந்த ஸிகரெட்டையும் தூர எறிந்தார்.

பெரிதும் கலகத்தில் ஆழ்ந்தவராய் உட்கார்ந்திருந்த கோவிந்த ராவும், ஸார்ஜண்ட் செய்த மாதிரியே, தம்மிடமிருந்த ஸிகரெட்டுகளுக்கெல்லாம் மரியாதை நடத்தி டப்பாவை எடுத்து மேஜையின்மேல் போட்டார்; கையில் இருந்ததையும் வீசி யெறிந்தார். சுமார் ஐந்து நிமிஷ காலம் அந்த அறையில் நிசப்தம் சூடி கொண்டிருந்தது.

அதற்குமேல் ஸார்ஜண்ட், "நல்ல போலீஸ் உத்தியோகம் இது; இந்த நிமிஷம் நவாப் ஸாகிப்; அடுத்த நிமிஷம் பக்கிரி ஸாகிப். உன்னுடைய சார்ஜை உடனே வாங்கிக் கொண்டு உங்களை ஆபீஸை விட்டு அனுப்பும்படி துரை உத்தரவு செய்தார். எல்லாவற்றிற்கும் காலையில் நீ போய் பெரிய துரையைப் பார்" என்றார்.

கோவிந்த ராவ்:—அப்படியானால் இப்போது சார்ஜை ஒப்புவிக்க வேண்டாம் என்கிறாயா?

ஸார்ஜண்ட்:—(அச்சத்தோடு) ஐயோ! அது பெரிய அபாயம். இப்போது சார்ஜை ஒப்பிவித்து விடு. நாளை காலையில் அவரைப் போய்ப் பார்—என்றார்.

உடனே கோவிந்தராவின் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. அவர் அதைத் துடைத்துக் கொண்டபடி தம்மிடமிருந்த டைரி, முதலிய சாமான்களைக் கொடுத்துவிட்டு, "வீட்டிற்குப் போய் உடுப்புகளை யெல்லாம் அனுப்புகிறேன்" என்றார்.

உடனே ஸார்ஜண்ட் ஒரு ஜெவானை அழைத்து "நீ இந்த ஐயாவுடன் கூட விட்டிற்குப் போய் இவர் கொடுக்கும் உடுப்புகளை ஜாக்கிரதையாக வாங்கிக்கொண்டு வா" என்றார்.

ஜெவான் அதன் கருத்தை யறியமாட்டாதவனுய் மிகுந்த ஆச்சரியத்தோடு ஸார்ஜண்டின் முகத்தையும், ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தையும், மாறிமாறிப் பார்க்க ஸப்-இன்ஸ்பெக்டர் அவமானத்தினுல் குன்றிப் போனவராய்க் கீழே குனிந்து கொண்டார்.

அப்போது ஸார்ஜண்டு, 'கோவிந்த ராவ், நேரமாகிறதே, நீ போய், எல்லா உடுப்புகளையும் இவனிடம் கொடுத்தனுப்பு. அவைகளை யெல்லாம் வாங்கி பத்திரப் படுத்திவிட்டு நான் வீட்டுக்குப் போகவேண்டும்" என்ருர்.

கோவிந்த ராவ் மெல்லத் தமது ஆசனத்தை விட்டு எழுந்து இரண்டோர் அடி நடக்க, அப்போது மறுபடியும் டெலிபோன் ஓசை செய்தது. "கோவிந்த ராவ், இரு, போகலாம்" என்று கூறி சார்ஜண்டு அவரை நிறுத்தியபடி டெலிபோனண்டை போய், "யார் அது?" என்ருர்.

அப்புறமிருந்தவர், "நான் அசிஸ்டெண்ட் சூப்ரின்டென்டெண்ட. கோவிந்த ராவ் வீட்டிற்குப் போய்விட்டாரா?" என்ருர்.

ஸார்ஜண்ட்:—இல்லை. இப்போதுதான் போகப் புறப்பட்டார்; இதோ நிற்கிருர்.

உதவி அதிகாரி:— சரி; நல்லதாயிற்று. நான் பெரிய துரையிடம் பேசி, இவரைப்பற்றி சிபார்சு செய்து துரையை ஒருவிதமாக சமாதானப்படுத்தி யிருக்கிறேன். கோவிந்த ராவ் நல்ல கெட்டிக்காரரர். அவரை சஸ்பென்ட் செய்து அவமானப் படுத்துவதும், அவர் மேல் கிரிமினல் வழக்குத் தொடர்வதும் தர்மமல்லவென்று சொன்னேன். அவரும், அந்த ஜெவானும் தாங்களே வேலைகளை ராஜிநாமா செய்துவிட்டதாக எழுதிக் கொடுத்துவிட்டால், நாம் சும்மா விட்டுவிடலாம்; அவர்கள் வேறு எங்கேயாவது போய் உத்தியோகம் சம்பாதித்துக்கொள்ள அது அனுகூலமானதா யிருக்கும்

என்று நான் சொன்னேன். அதற்கு பெரிய துரை இணங்கிவிட்டார். இந்த மாதிரி செய்வதுதான் கண்ணியமாய்ப் போகும். ஆகையால் இரண்டு பேரிடத்திலும், ராஜிநாமாக்கள் எழுதி வாங்கி அவைகளை உடனே பெரிய துரைக்கு அனுப்பிவையும். தவற வேண்டாம்— என்று கூறினார்.

உடனே ஸார்ஜண்ட் அந்தச் செய்தியை ஸப்-இன்ஸ்பெக்டரிடம் சொல்ல, அவர் அளவற்ற மகிழ்ச்சியோடு அந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டு, உடனே தமது ராஜிநாமாவை எழுதி ஸார்ஜண்டினிடம் கொடுத்துவிட்டு ஜவானுடன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். தனபால் செட்டியின் பணத்தை அபகரித்த 647-ம் நம்பர் ஜவானிடத்திலும் ராஜிநாமா பெறப்பட, அவனும் அதே க்ஷணத்தில் ஆபீஸைவிட்டு வெளியேறினான்.

இருவரும் தாம் அவ்வளவு வரையிலாவது கண்ணியமாய்த் தப்பினோமே என்று கருதினராயினும், திடீரென்று உத்தியோகத்தை இழந்தது பெரிய மன அதிர்ச்சியையும், வேதனையும் உண்டாக்கியது. எந்த மனிதரது முகத்திலும் விழிக்கக் கூடாது என்ற தீர்மானத்துடன் இருவரும் மூறையே தம் தம் வீட்டையடைந்தனர்.

கால்மணி காலத்திற்குப் பிறகு கோவிந்த ராவிடமிருந்து சர்க்கார் உடுப்புகள் யாவும் வந்து சேர்ந்தன. ஸார்ஜண்ட் அவற்றை பத்திரப்படுத்தி வைத்துவிட்டு, இரண்டு ராஜிநாமாக்களையும் மறுநாள் விடியற்காலையில் பெரிய துரைக்குப் போகவிருந்த இதர தபால்களுடன் சேர்த்து வைத்துவிட்டு, தனது வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்.

மறுநாள் போலீஸ் ஸ்டேஷனில் ஸார்ஜண்ட் ஜாக்ஸன் தமது உத்தியோகக் கடமைகளோடு ஸப்-இன்ஸ்பெக்டருடைய உத்தியோகக் கடமைகளையும் சேர்த்துப்

பார்க்கத் தொடங்கினர். அவர் பாராக் கொடுப்பது, துணிவான முரட்டுக் கைதிகளைப் பாதுகாப்பது, துஷ்டர்களை அடித்து அடக்குவது முதலிய தேக சம்பந்தமான கடமைகளைப் பார்ப்பதில் நல்ல திறமைசாலியேயானாலும், ஆபீஸ் கடிதப் போக்குவரத்தைத் தெரிந்து கொண்டு தக்க நடவடிக்கைகளைச் செய்தல், மற்றவர்களின்மீது தலைமை வகித்து பல காரியங்களையும் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நடத்துதல் முதலிய அதிகார நிர்வாகத்தை நடத்த அவ்வளவு அனுபவமற்றவர்; அதற்குத் தேவையான படிப்பும் இல்லை. ஆதலால் அந்த ஒரு நாள் போவது அவருக்குப் பெரிதும் துர்லபமாய் முடிந்தது. கீழ்ச் சிப்பந்திகளே வழக்கப்படி தம் தமது கடமைகளை கவனித்துக்கொண்டு போயினார். ஸப்-இன்ஸ்பெக்டருடைய பதவிக்கு எவர் நியமிக்கப்படுவாரோ வென்றும், அவர் எப்போது வந்து அவரது உத்தியோகத்தை ஒப்புக்கொள்வாரோ வென்றும சார்ஜண்டும் மற்றவர்களும் பெரிதும் ஆவல்கொண்டு துடி துடித்திருந்தனர்.

எப்போது புதிய ஸப்-இன்ஸ்பெக்டர் வருவாரென்பதைப்பற்றி டெலிபோன் வழியாக தலைமை ஆபீஸில் கேட்கும்படி சிப்பந்திகள் ஸார்ஜண்டுக்குக் கூறினாரானுலும், அவ்வாறு செய்ய தைரியங் கொள்ளாத ஸார்ஜண்ட் எந்த வழியிலும் செல்ல அறியாமல் எல்லோர் மீதும் சீறிவிழுந்து தமது கோபத்தைக் காட்டியபடி பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்.

அன்றைய பகலில் அசிஸ்டென்ட் சூப்ரின்டென்டென்ட் மிஸ்டர் சுந்தரம் தமது மோட்டார் வண்டியில் வந்திறங்கி, படபடப்பும், கோபமும் நிறைந்த தோற்றத்தோடு உள்ளே வர, அவருடைய நிலைமையைக் கண்டு சிப்பந்திகள் பயந்து நடுங்கினர். ஸார்ஜண்டும் அவருக்கு சலாம் செய்து பயபக்தி விநயத்தோடு நின்றார்.

வந்து ஆசனத்தில் அமர்ந்த உதவி அதிகாரிக்கு படபடப்பு அடங்க சுமார் ஐந்து நிமிஷ காலமாயிற்று. அதற்குமேல் அவர் ஸார்ஜண்டை நோக்கி, "கோவிந்த ராவுக்கு திடீரென்று ஏதாவது புத்தி மாறுட்டம் ஏற்பட்டதா என்ன? இருந்திருந்து இந்த மனிதர் இப்படியும் நடந்துகொள்வாரென்று நான் எதிர்பார்க்கவே இல்லையே. நல்ல சமயத்தில நம்ப வைத்துக் கழுத்தை யறுத்தமாதிரி செய்துவிட்டாரே! வேறே ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டரை நியமித்ததாகச் சொன்னதற்கு, அதெல்லாம் எதற்கு, நானே மலையைப் புரட்டி விடுகிறேன் என்று சொல்லி: ஷர்லக் ஹோம்ஸ் திட்டம் போடுவதுபோல் போட்டார். கடைசியில் ஒரே நிமிஷத்தில் டோக்கர் கொடுத்து விட்டாரே!" என்றார்.

ஸார்ஜண்ட்:—(மிக விநயமாக) அவர் நல்ல மனிதர். வேலை பார்ப்பதிலும் திறமைசாலி. கெட்ட வழியிலும் போகிறவர் அல்ல. நான் பார்த்த வரையில், யாரிடத்திலும் பணம் கிணம் வாங்கினதாகத் தெரியவில்லை. குட்டிச்சுவர் நாயின் தலைக்குக் கல் கொண்டு வந்த மாதிரி 647, அவருக்கு இந்த அவகேட்டை உண்டாக்கிவிட்டான். இல்லாவிட்டால், இந்த அற்ப வஸ்துவை வாங்கக்கூடியவரல்ல, செட்டியினுடைய பணத்தில் வாங்கப்பட்டடப்பா என்பது அவருக்குத் தெரியாது.

உதவி அதிகாரி:—(முற்றிலும் வியப்பும் முக மாறுபாடும் அடைந்தவராய்) நீர் எதைப்பற்றிப் பேசுகிறீர் என்பது விளங்கவில்லையே! நான் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசுகிறேன். நீர் எதையோ சொல்கிறீரே! அவர் நேற்று நெடுநேரம் நான் இருந்த வரையில் இந்த வழக்கைப் பற்றி அக்கரை காட்டி எதை எதையோ சாதித்துவிடுவதாகச் சொல்லிவிட்டு நான் போனவுடன் ராஜிநாமாக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறாரே என்பதைப் பற்றி யல்லவா நான் பேசுகிறேன். நான் பெரிய துரையிடம் போய், கோவிந்த ராவ் வானத்தை வில்லாய் வளைத்து விடுவார் என்று சொல்லி விட்டுப் போனேன்.

காலையில் அவரிடம் ராஜிநாமா போயிருக்கிறது. அவர் அதை என்னிடம் காட்டி என்னைக் கோமாளியாக்கிவிட்டார். இதுதானா அந்த மனிதனுடைய யோக்கியதை. ராஜிநாமா செய்ய நினைத்தால் அதை முன்னால் என்னினிடம் நேரில் கிரமப்படி சொன்னால், நான் தடுக்கப் போகிறேனா. இப்போது எனக்கல்லவா பைத்தியக்காரப் பட்டம் வந்து வாய்த்தது.

ஸார்ஜண்ட்:—(வியப்பும் திகைப்பும் அடைந்து) ராஜிநாமா எழுதிக்கொடுப்பதாய் அவர் சொல்லவில்லையே! உங்கள் விருப்பத்தின்மேல் தானே அவர் எழுதிக்கொடுத்தார். உங்களிடம் சொல்லாமல் அவரே எழுதிக்கொடுத்து விட்டதாகச் சொல்வது எனக்கு விளங்கவில்லையே!

உதவி அதிகாரி:—(திடுக்கிட்டு திக்பிரமை கொண்டு) என்ன! என்ன! என் விருப்பத்தின்மேல் அவர் ராஜிநாமா எழுதிக் கொடுத்தாரா! என்ன பைத்தியக்கார சங்கதியாயிருக்கிறதே இது! நல்ல சமயத்தில் அவர் போய் விட்டாரே என்று நினைத்து நான் இன்று காலைமுதல் பைத்தியம் பிடித்தவன் மாதிரி இருக்கிறேன். ராஜிநாமா எழுதிக் கொடுக்கும்படி நான் ஏன் கேட்கிறேன். அவர் ஏதாவது தப்புச் செய்துவிட்டாரா! அவருக்கு இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பண்ணிவைக்க வேண்டுமென்று நான் நேற்றிரவு இங்கிருந்து போனபோதுகூட பெரிய துரையிடம் சொல்லிவிட்டுத்தானே என் ஜாகைக்குப் போனேன்.

ஸார்ஜண்ட்:—அப்படியா! இதில் ஏதோ மோசடி நடந்திருக்கிறது! இப்போதுதான் எனக்கு உண்மை விளங்குகிறது, இது அநேகமாய் அந்த வக்கீலின் வேலையாய்த்தா னிருக்கவேண்டும். அவன் அந்த தனபால் செட்டியையும் சேர்த்துக்கொண்டு இப்படி டெலிபோன் மூலம் ஹம்பக் செய்திருக்கிறான். மற்ற எவருடைய மூளைக்கும் இவ்வளவு திறமை உண்டா யிருக்காது—

என்று கூறி, முதல் நாள் இரவில் உதவி அதிகாரி போனபிறகு டெலிபோன் மூலம் நடந்த சம்பாஷணைக ளின் விவரங்களை யெல்லாம் உதவி அதிகாரியிடம் கூறி ஞர்.

அதைக் கேட்டு திடுக்கிட்டு ஸ்தம்பித்து மூக்கில் விரலை வைத்தபடி உட்கார்ந்துபோன உதவி அதிகாரி, "இதென்ன கண்ணிருக்கையிலேயே கண்ணைக் கொண்டுபோகிற ஜெகஜாலப் புரட்டா யல்லவா இருக் கிறது. நேற்றிரவு நான் இங்கிருந்து போனபிறகு நானு வது, பெரிய துரையாவது டெலிபோனில் பேசவே இல் லையே. தனபால் செட்டி பெரிய துரைக்கு விண்ணப்பம் அனுப்பினன் என்பதே பொய் அந்தமாதிரி வந்திருந் தால், அது என்னிடம்தானே வரும், பெரிய துரையின் தபால்களை யெல்லாம் நான் தானே உடைத்துப் பார்க் கிறவன். அவருடைய பெயரிட்டு சொந்தக் கடிதம்போல அவன் எழுதியிருந்தால்கூட அதை அவர் என்னிடம் சொல்லியிருப்பாரே! நீர் சொல்வது போல, இது இந்த வக்கீலின் வேலையாகத்தான் இருக்கும். சந்தேகமே இல்லை. வக்கில் ஜாமீனில் விடுபட்டுப் போனவுடன் செட்டியை வரவழைத்து, அவனுடைய விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு இம்மாதிரி தந்த்ரம் செய்து, கோவிந்த ராவும், 647-ம் ராஜிநாமாச் செய்யும்படி தந் திரம் செய்திருக்கிறன்போ லிருக்கிறது. அப்படிச் செய்துவிட்டால், அவனுடைய கருத்து நிறைவேறிப் போகுமா! பைத்தியக்காரன். உடனே ஆளைத் துரத்தி கோவிந்த ராவை அழைத்துக்கொண்டு வரச்சொல்லும். அவருடைய ராஜிநாமாவைக் கிழித்துப் போட்டுவிடலாம். அவர் தம் வேலையைப் பார்க்கட்டும். ராஜிநாமா செய்த தாகவே நாம் கருதவேண்டாம்" என்ருர்.

ஸார்ஜெண்ட்:—647-யையும் கூட்டிடுவோமா?

உதவி அதிகாரி:—அவனை அழைக்க வேண்டாம். அவன் செட்டியின் விஷயத்தில் அயோக்கியத்தனமாக

நடந்து கொண்டிருக்கிறன். அவனுடைய அயோக்கியக் காரியத்தினுல்தானே கோவிந்த ராவுக்கு இவ்வித உபத் திரவம் நேரிட்டது. அந்த ராஸ்கலுடைய ராஜிநாமாவை ஏற்றுக்கொண்டு விடும் கோவிந்த ராவை மாத்திரம் வர வழையும். அவருடைய ராஜிநாமாவைக் கிழித்துப் போட்டு விடலாம்—என்றார்.

உடனே ஒரு ஜெவான் கோவிந்த ராவினுடைய வீட்டிற்கு அனுப்பப்பட்டான். உதவி அதிகாரி எழுந்து டெலிபோனண்டை போய் பெரிய துரையை அழைத்து முதல்நாளிரவில் டெலிபோன் மூலம்நிகழ்ந்த மோசடியை விவரிக்க, அவர் அதைக் கேட்டு பெரிதும் பிரமிப்பும், குழப்பமும் அடைந்து உடனே கோவிந்த ராவை வேலையிலமர்த்தவும், அவருடை ராஜிநாமாவைக் கிழித்து விடவும் உத்தரவு கொடுத்தார்.

கோவிந்த ராவின் வீட்டிற்கு அனுப்பப்பட்ட ஜெவான் அரை நாழிகை காலத்தில் திரும்பி வந்து "நான் அவருடைய விட்டிற்குப் போனேன். அவர் இருந்த இடம் காலியா யிருந்தது. அவருடைய சம்சாரம் முதலிய எவரும் இல்லை. அதே வீட்டில் இன்னொரு பக் கத்தில் குடித்தனம் இருப்பவரிடம் விசாரித்தேன். நேற்று இரவு சுமார் பத்து மணிக்கு யாரோ ஒருவர் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் வந்தாராம். தமமை அசிஸ் டென்ட் சூபரின்டென்டென்ட் அனுப்பியதாக அவர் சொன்னாராம். ஸப்-இன்ஸ்பெக்டர் இந்த ஊரில் இருந் தால் அவர்மேல் கிரிமினல் வழக்கு ஏற்படுமென்றும், ஆகையால் அவர் குடும்பத்தோடு விடியற்காலம் வண்டியி லேயே புறப்பட்டு இன்ன ஊருக்குப் போனார்கள் என் பதே எவருக்கும் தெரியாதபடி ஊரைவிட்டு உடனே போய்விடும்படியும அசிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட் இரகஸியமாய்ச் சொல்லி எச்சரித்து விட்டு வரச்சொன்ன தாக அந்த மனிதர் கோவிந்த ராவிடம் சொன்னாராம், கோவிந்த ராவ் இரவோடிரவாய் சாமான்களை யாரோ

சொந்தக்காரர் வீட்டில் போட்டுவிட்டு, விடியற்காலை வண்டியில் குடும்பத்தோடு காசியாத்திரையோ, ராமேசுவர யாத்திரையோ போய் விட்டாராம், அவர்கள் போன இடம் இன்னதென்று எவராலும் சொல்ல முடியவில்லை'' என்ருன்.

அதைக் கேட்ட உதவி அதிகாரியும், ஸார்ஜெண்டும், மற்ற சிப்பந்திகள் எல்லோரும் அபாரமான ஆச்சரியமும், மனவேதனையும் அடைந்து அப்படியே பிரமித்துப்போயினர். அந்த விநோத சம்பவம் பெரிய துரைக்கும், ஊர் ஜனங்கள் எல்லோருக்கும் மிக சீக்கிரத்தில் பரவிப்போகவே, "சுயமரண புரம் போலீசாரின் சாமர்த்தியமே சாமர்த்தியம். ஒரே நிமிஷத்தில் எந்த எத்தனே அவர்களுடைய வேரைக் கல்லி வென்னீரை விட்டுவிட்டானே. இப்படி ஏமாறிப் போனவர்கள் மற்றவர்களுக்கு என்ன உதவியைச் செய்யப் போகிருர்கள்'' என்று ஜனங்கள் பேசிப் பலவாறு வம்பு வளர்க்கலாயினர்.

3

ஐயரும் சிலையுடன் அந்தர்த்தானம்

முன் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்ததற்குப் பிறகு சுமார் பதினைந்து தினங்கள் சென்றன. அன்னிபெஸண்ட்டின் சிலைகளைத் திருடிய மனிதர்கள் இன்னார் என்பது சிறிதும் தெரியாமல் மூடகமாகவே இருந்தது. போலீஸார் அவ்விஷயத்தில் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயன்படாமலேயே போயின. ஜனங்கள் அதைப்பற்றிப் பேசிப்பேசி அலுத்து ஓய்ந்து போயினர். சிலைகளை இழந்த சாஸ்திரியும், கலியாணமும் தங்களுடைய சிலை இனி வராதென்ற எண்ணத்தைக் கொள்ளலாயினர். அவர்கள் இருவரும் அதைப்பற்றி அந்த ஊர்நீதிபதிகள், பத்திரிகைப் பிரதிநிதிகள் முதலியோரிடம் புகார் சொல்லிச்சொல்லி அலுத்துப்போயினர்.

சாஸ்திரியார் அவ்வளவு கொழுத்த பணக்காரர் அன்றாதலால், அவர் மறுபடி சிலை செய்துவைக்க வேண்டுமென்ற ஆசையை விட்டுவிட்டார். ஆனால் கலியாணம் கொழுத்த பணக்காரராதலால், அவர் சித்திரக்காரரிடம் இன்னொரு சிலை செய்ய ஏற்பாடு செய்திருப்பதாக வதந்தியுலாவியது. அதைப்பற்றி பத்திரிகையிலும் குறிப்புகள் காணப்பட்டன. கலியாணம் தமது அண்டை வீட்டுக்காரரான வக்கீலிடம் அடிக்கடி வந்து நெடுநேரம் வரையில் அன்னியோன்னியமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவார். அப்போது வக்கீலின் விஷயத்தில் போலீஸார் எடுத்துக்கொண்ட முட்டாள் தனமான நடவடிக்கைகளைப் பற்றி கண்டனம் செய்து, போலீஸாருடைய உதவியற்ற தன்மையைக் குறித்து ஏளனமாகப் பேசிவிட்டுப் போவார். அதுவன்றி வக்கீலின் வீட்டிற்கு அடுத்த வீட்டில் அதாவது, கலியா

ணத்தினுடைய வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் இருந்த வரும், வைர வியாபாரியுமான மோஹன்மல் ஸௌக்கார் என்பவரிடத்திலும், சிநேகம் செய்து, அவருக்கும் அந்தரங்கமான நட்பினராயிருந்து வந்தார். ஒவ்வொரு நாளிலும் அவருடைய பெரும்பாலான காலமும் ஒழிவு நேரமாதலால், அவர் மாறி மாறி வக்கீல் வீட்டிற்கும், மோஹன்மல் ஸௌக்கார் வீட்டிற்கும் போய் வேடிக்கையாக சம்பாஷித்திருந்துவிட்டு வந்துசேருவார்.

அந்த நிலைமையில், மேலே குறிப்பிடப்பட்ட சிலத் திருட்டுகள் நடந்ததற்கு சுமார் பதினைந்து தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் எட்டுமணி சமயமிருக்கும். கலியாணம் தமது வீட்டின் வீதிக்கதவை மூடிப் பூட்டிக்கொண்டு மோஹன்மல் ஸௌக்கார் வீட்டிற்குள் போய்ச் சேர்ந்தார். அந்த வீடு விசாலமான உயர்ந்த மேன்மாட வீடு. அதன் பின்புறத் தாழ்வாரத்தில் மேன்மாடத்திற்குச் செல்லும் படிக்கட்டிருந்தது. வலது கை யற்றவரான அந்த மனிதர் ஷை படிகளின் வழியாக ஏறி மேன்மாடத்தை யடைந்தார். அங்கே எதிரில் காணப்பட்ட ஒரு பெரிய கூட்டத்தின் தரை முழுவதும் ஒரு சாண் உயரமுள்ள பஞ்சு மெத்தை பரப்பப் பெற்றிருந்தது. சுவரோரத்தில் வரிசையாகப் பல திண்டுகளும், பிரமாண்டமான உருட்டுத் தலையணைகளும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு முன்னல் இரண்டிடங்களில் கர்னாடக மேஜைப் பெட்டிகள் இருந்தன. சுவரில் சுவாமிகளின் படங்கள் இரண்டு காணப்பட்டன. ஆனல் அவ்விடத்தில் படாடோபமான அலங்கார வஸ்துக்கள் அதிகமாயில்லாவிடினும், அந்த ஹாலுக்கப்பாலிருந்த கெட்டியான ஓர் அறைக்குள் இருந்த பீரோக்களில் ஏராளமான வெள்ளிப் பாத்திரங்கள், வைர நகைகள் முதலிய பொருள்கள் பல கண்ணாடி பீரோக்களில் காணப்பட்டன. அவை காண் போரது மனதையும் கண்களையும் பிரமிக்கச் செய்தன. அவற்றின் மொத்தப் பெறுமானம் சுமார் பத்து லக்ஷத்

திற்கு மேலேயே இருக்குமென்று மார்வாடி தமது அந்தரங்க நண்பர்களிடம் சொல்லுவதுண்டு. அந்த ஸௌக்கார் கூட்டத்தில் ஓர் உருட்டுத் தலையணையில் ஒய்யாரமாகச் சாய்ந்து, ஒரு சமாச்சாரப் பத்திரிகையை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார். அவருக்குக் காலை வேளை ஒழிவான காலமென்பதைத் தெரிந்துகொண்டிருந்த கலியாணம் புன்னகை செய்தபடி அவருக்கு முன்னர் போய் நின்றார்.

அவரைக்கண்ட மோஹன்மல் ஸௌக்கார் பத்திரிகையைப் பக்கத்தில் வைத்துவிட்டு, சந்தோஷ முக மலர்ச்சி காட்டி, "வாருங்கள் ஸார்; உட்காருங்கள். நீங்கள் மறுபடியும் உத்தரவு செய்த சிலை இன்று வரப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தீர்களே; வந்து விட்டதா?" என்றார்.

கலியாணம் சந்தோஷ முகமலர்ச்சியோடு, "வந்து விட்டது. முதன் முதலில் உங்களை அழைத்துக் கொண்டு போய்க் காட்டவேண்டுமென்றுதான் வந்தேன். இப்போது இங்கே உங்களுக்கு ஒழிவாயிருந்தால் வந்து பார்க்கலாம்—என்றார்.

ஸௌக்கார்:—சிலையைப் பார்க்க எனக்கு ஆவலாய்த்தானிருக்கிறது. இப்போதே வருகிறேன்-என்று கூறியபடி எழுந்து வர, கலியாணம் முன்னால் வந்து படிகளின் வழியாக இறங்கிக் கீழே சென்றார். இருவரும் மூன்றாவது வீட்டை யடைந்தனர். அந்த வீட்டின் முன் பக்கத்துக் கதவு உடனே திறக்கப் பட்டது. இருவரும் உள்ளே சென்று மேன்மாடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கு காணப்பட்ட பெரிய ஹாலில் அன்னி பெஸன்டின் சிலை ஒரு பீடத்தின்மீது வைக்கப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த ஸௌக்கார் திடுக்கிட்டு பிரமித்துப்போய், 'அடேடே! உண்மையில் அன்னிபெஸன்ட் அம்மாள் உயிரோடு நிற்பது போலவே இருக்கிறதே!

முதல் தரமான வேலைப்பாடா யிருக்கிறதே! இது எதனுல் செய்யப்பட்டது. சலவைக் கல்லினுல் செய்யப் பட்டதா? என்ருர்.

கலியாணம்:—இல்லை; இது மெழுகினுல் ஆனது. இதோ பாருங்கள் வேடிக்கையை—என்று கூறி அந்த சிலையின் ஒரு மூலையில் இருந்த ஒரு விசையை அழுத் தினுர்.

உடனே அந்த சிலை உயிரோடிருக்கும் மனிதர் போல் கண்ணிமைகளை ஆட்டி, கைகளிரண்டையும் உடம்பையும் அப்புறம் இப்புறம் திரும்பி வாயைத் திறந்து இங்கிலீஷில் ஒரு பிரசங்கம செய்ய ஆரம்பித் தது. அப்போது உண்மையில் அன்னிபெஸன்ட் அம்மையார் பெரிய ஸதஸில் கம்பீரமாக நின்று உருக்க மாக உபந்நியாசம் செய்வது போலவே இருந்தது. சௌக்கார் மூக்கின்மேல் விரல் வைத்து அப்படியே ஸ்தமபித்து நின்று "அடாடா! அபூர்வமான வேலை. இந்த மாதிரி வேலைப்பாடு இந்த உலகத்திலேயே இரா தென்று நினைக்கிறேன்" என்ருர்.

கலியாணம்:—இதில் ஒரு மர்மம் இருக்கிறது. இதன் கை கால்கள் தலை முதலிய பாகங்களைத் தனித்தனியே அலாக்காக எடுத்துவிடலாம். இதற்காக ஒரு பெட்டி இருக்கிறது. இதை அதில் வைத்துத்தான் கொண்டு போக வேண்டும். பெட்டி எவ்வளவு அழகா யிருக்கிறது தெரியுமா! இதில் எப்போதும் காற்று பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மெழுகு புழுக்கத்தி னுல் இளகிப்போகும்—என்ருர்.

சிறிது நேரத்தில் பிரசங்கம் முடிய சிலை முன்போல அமைதி யடைந்தது.

சௌக்கார்:—வேலை இவ்வளவு விசித்திரமா யிருப்ப தால் தான் இரண்டு சிலைகளை எவனே திருடிக்கொண்டு போய் விட்டான். நீங்கள் இதை பந்தோபஸ்தாய்ப் பாது

காக்க வேண்டும். சரி, எனக்கு நேரமாகிறது. நான் வீட்டிற்குப் போகிறேன்-என்று கூறி செலவு பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டுத் தமது வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்.

மோஹன்மல் ஸௌக்கார் என்பவர் தமிழ் நாட்டிலேயே மிகவும் பிரபலமான வைர வியாபாரி. அவரிடம் வைரக் கம்மல்களும் வைர மூக்குத் திருகுகளும் வாங்காத வக்கீல் சம்சாரங்களும், சீமாட்டிகளும் மிக சொற்பமாகவே இருப்பர். அவருடைய வசத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் இருந்தன வென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆயினும் அவர் நடையுடை பாவனைகளில் அதிக படாடோபமின்றி, சர்வ சாதாரணமாக நடந்துகொள்பவர். அவர் இடுப்பில் தொப்புளின் கீழாக, அதாவது, தொந்தியின் அடியில் அரைஞாண் கயிறு கட்டப்படுமிடத்தில் வஸ்திரத்தை யணிந்துகொண்டு முழங்கால் வரையில் தூக்கி மூலைக் கச்சமாகக் கட்டிக்கொண் டிருப்பார், தலையில் ரோஜா நிறத் தலைப்பாகை யொன்று பெரிதாயிருக்கும். சாவிக்கொத்து ஒரு மூலையில் முடியப்பெற்றதும், மூக்குத்துடைக்க உபயோகப் படுவதுமான ஒரு முழ சதுரமுள்ள சிறிய பழுக்காய் உருமாலையை அவர் அங்கவஸ்திரமாகத் தோள்மீது போட்டிருப்பார்.

அவர் பல வருஷகாலமாக அந்த ஊரில் இருந்து வர்த்தகம் நடத்திவந்தா ராலும், எவ்வித நஷ்டமோ, திருட்டோ, அபாயமோ நேரவில்லை யாதலால், அவர் தமது அபாரமான சொத்துகளின் பாதுகாப்பைப்பற்றி சிறிதும் கவலை கொள்ளாமல் இருந்து வந்தார். சொத்துக்களின் பந்தோபஸ்தைக் கருதி அந்த வீடு அதிக ஜன்னல்களின்றி, மிக கெட்டியாக அமைக்கப்பட்டிருந்ததாகையாலும், அது இரவில் பெட்டிபோல் மூடப்பட்டு, பல தொட்டிப் பூட்டுகளால் பூட்டப்பட்டு விடுமாதலாலும், இரவில் வீட்டிற்குள் காற்று நுழைவதற்கே

வழியில்லாமல் இருந்தது. ஆகையால், அவர் தாம் வசிப்பதற்கு வேறொரு பங்களாவை வாங்கி அதில் இருந்து வந்தார். இரவில் அவருடைய வர்த்தகக் கட்டிடத்தின் திண்ணையில் நான்கு முரட்டு ஆள்கள் படுத்துக் காவல் காத்திருந்தனர்.

அவர் சொந்தத்தில் ஒரு குதிரை வண்டி வைத்துக் கொண்டிருந்தார்; அதில் ஏறிக்கொண்டு அவர் காலை ஏழுமணிக்குத் தமது வர்த்தக ஸ்தலத்திற்கு வருவார். மாலை எட்டு மணிக்கு மறுபடி திரும்பி பங்களாவிற்குப் போவார். அவருடைய ஸ்நானம், போஜனம முதலிய விவகாரங்களெல்லாம் வர்த்தக ஜாகையிலேயே நடைபெறும். அவருக்கு திறமைசாலிகளான ஐந்தாறு குமாஸ்தாக்க ளிருந்தனராதலால், லேவாதேவி சம்பந்தமான காரியங்களை அவர்களே கவனித்துக் கொண்டனராதலால் முதலாளிக்கு அநேகமாய் எப்போதும் ஒழிவாகவே இருக்கும்.

அவரைப்போலவே பகலில் ஒழிவுடைய கனவான்கள் பலர் அடிக்கடி வந்து அவருடன் லோகாபிராமமாக சம்பாஷித்திருந்துவிட்டுப் போவார்கள். அவர்களில்முக்கியமானவர் கலியாணம். ஸௌக்காரிடம் அவர் வந்து உட்கார்ந்துவிட்டால், ஒவ்வொரு நாளும் விசித்திரமான புதிய புதிய விஷயங்களையே சொல்லுவார்.

அவைகளைக் கேட்டு ஸௌக்கார் பிரமித்து மதிமயக்க மடைந்துவிடுவா ராதலால், கலியாணத்தை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் அரை மனதோடு அவரை அனுப்பிவைப்பார்.

கலியாணம் ஏகாங்கியா யிருந்தது பற்றி, அவருடைய கைவசத்தில் இருந்த சுமார் பதினாயிரம் ரூபாய் பணம், வெள்ளிப்பாத்திரங்கள் நகைகள் முதலியவற்றை ஒரு டிரங்குப்பெட்டியில்வைத்து, அ௬.த ஸௌக்காரின் வீட்டில் பாதுகாப்பாக வைத்திருந்தார். தமக்கு ஏதே

னும் பணம் முதலியவை தேவையானல், ஸௌக்கா ருடைய அநுமதியின்மேல் பெட்டி யிருந்த இடத்தை யடைந்து தமக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு போவார்.

இவ்வாறு இருவரும் அன்னியோன்னியமாய்ப் பழ கிக்கொண்டுவந்த காலத்தில் கலியாணம் ஒருநாள் காலை எட்டு மணிக்கு ஸௌகாரின் வீட்டுக்குப் போய் அவரு டன் சுவாரஸ்யமாக சம்பாஷித்திருந்த சமயத்தில், "ஐயா, ஐயா" வென்று கூப்பிட்டுக்கொண்டு ஒரு தந் திச் சேவகன் அங்கு, வந்து "மிஸ்டர் கலியாணத்திற்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. அவருடைய வீடு பூட்டியிருக்கி றது. அவர் இங்கிருப்பார் என அங்கு விசாரித்ததில் சொன்னர்கள்" என்றான்.

அதைக் கேட்ட கலியாணம், "நான்தானப்பா; தந்தியை இப்படி கொடு" என்ருர்.

உடனே சேவகன் தந்தியை அவரிடம் கொடுத்துக் கையெழுத்துப் பெற்றுக் கொண்டுபோய்ச் சேர்ந்தான். உடனே மிக ஆவலோடு கலியாணம் உறையைக் கிழித்து தந்தியை வெளியில் எடுத்து மனதிற்குள்ளாகவே படிக்க லானர்.

படித்தவர், "அப்பாடா தப்பினேன்; தந்தி யென் ருலே உடனே மனிதனுக்கு சர்வாங்கமும் கலங்கிப் போகிறது. அதில் அநேகமாய் அபாயமே வருகிறதன்றி நல்ல செய்தி வருவதில்லை. அதனல் தந்தி யென்ருலே அடிவயிற்றில் வேதனை ஆரம்பமாகிவிடுகிறது', என்ருர்.

ஸௌக்கார்:— வாஸ்தவம்தான். இப்போது வந்தி ருக்கும் சங்கதி சந்தோஷ சங்கதிதானே? அது அநேக மாய் உங்கள் சம்சாரம் பிரஸவித்த சங்கதியாகத்தான் இருக்கும். ஆணே பெண்ணே?

கலியாணம்:— உங்களுக்கு ஞானதிருஷ்டி உண்டோ? அதே சங்கதிதான் வந்திருக்கிறது. ஆண் குழந்தையாம்.

சௌக்கார்:— (புன்னகையோடு) சரி; கற்கண்டு வழங்குங்கள். இது பெரிய சந்தோஷச் செய்தியல்லவா!

கலியாணம்:—ஓ, அவசியம் வழங்குகிறேன். கற்கண்டுக்கென்ன குறைச்சல். இதில் இன்னொரு விஷயமிருக்கிறது. நான் உடனே புறப்பட்டு வந்து குழந்தையைப் பார்க்க வேண்டுமாம். இல்லாவிட்டால், ஏதோ தோஷமாம்.

சௌகார்:— சரி; புறப்படுங்களேன். ஒன்பதரை மணி வண்டிக்கே போங்கள். திருவாரூரில் தானே பிரஸவம். 12-மணிக்கெல்லாம் அங்கே போய்விடலாம்.

கலியாணம்:—அவ்வளவு அவசரமொன்று மில்லை. மத்தியான வண்டியில் போனால், சாயங்காலம் போய்ச் சேரலாம். போனால் நான்கைந்து தினங்கள் அங்கேயே இருக்க வேண்டியதாகும்.

சௌக்கார்:—இருந்துதான் வாருங்களேன். இங்கே உங்களுக்கு அவசர காரியமொன்று மில்லையே!

கலியாணம்:— அவசர காரிய மொன்றுமில்லை. அந்த சிலையைப் பற்றித்தான் பயமாயிருக்கிறது. இரண்டு சிலைகள் காணமல் போய்ப் பதினைந்து தினங்களாகின்றன. என்னுடைய சிலை நேற்றுதான் வந்தது. என் வீடு அவ்வளவு பந்தோபஸ்தானதல்ல. அதனால் தான் நான் என்னுடைய பணம் முதலியவைகளை இங்கே வைத்திருக்கிறேன்.

ஸௌக்கார்:—நீங்கள் வேண்டுமானால் ஒரு காரியம் செய்யுங்களேன். அந்த சிலையைக் கழற்றி அதன் பெட்டிக்குள் வைத்து, பெட்டியை இங்கே கொண்டுவந்து வைத்து விட்டுப் போங்களேன்.

கலியாணம் :— (சந்தோஷ முகமலர்ச்சியுடன்) அப்படித்தான் செய்ய வேண்டும். அதைக் கழற்றுவதும் மாட்டுவதும் பத்து நிமிஷ வேலை. அப்படியானால், நான் போய் அதைக் கழற்றிப் பெட்டியில் வைத்து, நான் ரயிலுக்குப் போகுமுன் இங்கே கொண்டுவந்து வைக்கச் செய்கிறேன்.

சௌக்கார் :—சரி; அப்படியே செய்யுங்கள். நீங்கள் எந்த வண்டிக்குப் போக உத்தேசிக்கிறீர்கள்?

கலியாணம்:—மத்தியானம் மூன்று மணிக்கு ஒரு வண்டி புறப்படுகிறது. அதுதான் சௌகரியமாயிருக்குமென்று நினைக்கிறேன். நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். கடைக்குப்போய் சில சாமான்கள் வாங்க வேண்டும்—என்று கூறியபடி எழுந்திருந்தார்.

ஸௌக்கார்:-சரி, போய்ஆகவேண்டிய காரியத்தை கவனியுங்கள்—என்றார்.

உடனே கலியாணம் அவ்விடத்தைவிட்டுவெளியில் சென்றார். சென்றவர் சுமார் இரண்டேகால் மணிக்கு மறுபடி திரும்பி வந்தார். அவருக்குப் பின்னால், நான்கு ஆட்கள் ஒரு பெரிய பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அந்தப் பெட்டி சுமார் ஏழடி நீளம், இரண்டேகால் அடி உயரம், அதே அகலம் இருந்தது. அதன் நான்கு பக்கங்களிலும் நான்கு கைப்பிடி வளையங்கள் இருந்தமையால் அவைகளைப் பிடித்து இலேசாய்த் தரையோடு தரையாய்த் தொங்கவிட்டபடி அவர்கள் அதைத் தாங்கிக்கொண்டு வந்தனர். ஸௌகார் உடனே எழுந்து, தம் நகைகள் முதலிய பொருள்களிருந்த அறைக்குள் போய்ப் பெட்டியை அங்கே வைக்கச் செய்தார். ஆள்கள் தூக்கிவந்த தினுசில் அது பளுவில்லாமல் இலேசாய் இருந்தது போலவே தோன்றியது. பெட்டியின் அடியில் நான்கு மூலைகளிலும் அரைச்சாண் உயரம் குமிழ்க்கால்கள் அமைக்கப் பட்டிருந்தமை

யால், அவற்றின்மேல் பெட்டி தூக்கலாக நின்றது. உடனே ஆள்கள் வெளியில் அனுப்பப்பட்டனர்.

கல்யாணம், "இப்போது அன்னிபெஸன்டம்மாள் எப்படியிருக்கிறார்கள் என்று பாருங்கள்" என்று கூறிப் பெட்டியின் ஒரு விசையை அழுத்த, அதன்மேல் பக்கத்துக் கதவு உடனே தானகவே திறந்துகொண்டது. பெட்டியின் உள் பக்கம் நகைப்பெட்டி போல, வெல்வெட், பஞ்சு முதலிய வைக்கப்பெற்று மிக அழகாய் அமைக்கப்பட்டிருந்தது. அது நிறைய கைகளும், கால்களும், தலையும் தனித்தனியாக மெல்லிய காகிதங்களால் சுற்றப் பட்டு வைக்கப்பட்டிருந்தன.

அவைகளைப் பார்த்த வெள்ளக்கார், "நம்முடைய உடம்புகூட இதே மாதிரியானதுதான். முழு வடிவமாய்த் தோலைப் போர்த்திக் கொண்டிருந்தால்தான் பார்க்கத் தக்கதா யிருக்கும். தனித்தனி வெட்டிப்போட்டால், பார்க்க, கோரமாய்த்தானிருக்கும்" என்ருர்.

கலியாணம்:—கைகால் முதலிய உறுப்புகள் கொஞ்சமே. உள்ளே வைத்திருக்கும் விசைச் சக்கரங்களும், கிராமபோன் யந்திரமும், சுழலும தகடுகளுமே பெரும் பாகம். அவைகளெல்லாம் அடியில் ஒவ்வோர் அங்கணத்தில் ஒன்றன்மேல் ஒன்று உராயாதபடி ஜாக்கிரதையாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதனுல் தான் பெட்டி இவ்வளவு பெரியதாயிருக்கிறது—என்ருர்.

வெள்ளக்கார்:—இருக்குமல்லவா, சிலை இவ்வளவு பேசி அசையவேண்டுமானுல், உள்ளுக்குள் எத்தனை விசைகள் இருக்கவேண்டும். அவைகள் கெடாமல்தான் இருக்கவேண்டும். ஒரு கடிகாரத்திற்குள் எத்தனை சக்கரங்களும் விசைகளும் இருக்கின்றன.

கலியாணம்:—சரி; நான் போய் வருகிறேன். நான் உங்களிடம் சொல்லிவிட்டுப் போனேனு. அதன் பிறகு எங்கள் வக்கில் குமாஸ்தாவைக் கண்டேன். நாளையதினம்

டிஸ்ட்ரிக் கோர்ட்டில், ஒரு விசாரணை போட்டிருக்கிறார் களாம். எனக்கு ஒருவன் பணம் தரவேண்டும். அவன் பேரில் டிக்ரி பெற்றிருக்கிறேன். அதை நிறைவேற்ற மனுப் போட்டேன், விசாரணையை நாளைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்களாம். அதற்காக வந்த நோட்டீஸை அவர் இப்போது என் கையில் கொடுத்தார். ஆகையால் நான் பல தினங்கள் ஊரில் இருக்க சரிப்படாது. நாளைய தினம் காலையிலேயே வந்துவிடவேண்டும்; வந்து மறுபடி ஸ்நான தினத்தன்று போகலாமென்று நினைக்கிறேன். எனக்கு நேரமாகிறது. நான் உத்தரவு வாங்கிக்கொள் கிறேன்—என்று கூறி அவரிடம் செலவு பெற்றுக் கொண்டு வெளியில் போய் அங்கே ஆயத்தமாகக் காத் திருந்த குதிரைவண்டியில் ஏறிக்கொண்டு, ரயில் ஸ்டே ஷனுக்குப் போய்விட்டார்.

அன்றைய பகற் பொழுது கழிந்தது. மாலையில் ஸௌகார் வழக்கப்படி கதவுகளைப் பூட்டிக்கொண்டு தமது பங்களாவிற்குப் போய்விட்டார். காவல்காரர்கள் நால்வர் திண்ணையில் படுத்துக்கொண்டு சிறிது நேரத்தில் தூக்கத்தில் ஆழ்ந்துபோயினர். அவர் ஊரில் இரவு பதி ெனாரு மணிக்கு மேல் சில போலீஸார் வெளிப்பட்டு இருவர் இருவராகப் பிரிந்து தெருக்களில் லோந்து சுற்றுவது வழக்கம். அவ்வாறு சுற்றும்போது அவர்கள் மோஹன்மல் ஸௌக்காருடைய கடைப்பக்கம் வரும் போது அதை நிரம்பவும் எச்சரிப்பாகப் பார்த்து, அங்கு படுத்திருக்கும் காவல்காரரைத் தட்டி எழுப்பிவிட்டுப் போவார்கள் அப்படி லோந்து சுற்றும் ஜெவான்கள் ஒவ்வொரு வீதிக்கும் ஓர் இரவில் இரண்டு தடவைக ளாவது போவார்கள். அந்தக் கிரமப்படி ஸௌக்கா ருடைய கடைப்பக்கம் அவர்கள் நடு இரவு சமயத்திலும், பிறகு மூன்றுமணி சமயத்திலும் வருவார்கள்; வரும் போது கதவிடுக்கால் உள் பக்கத்தைப் பார்த்தும் காவல் காரர்களை எழுப்பிவிட்டும் போவார்கள்.

கலியாணம் அன்னிபெஸன்டின் சிலையடங்கிய பெட்டியை உள்ளே வைத்த தினத்தன்று இரவு பன்னிரண்டு மணிக்கு லோந்துக்காரர்கள் வந்தபோது அவ்விடத்தில் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. ஜெவான்கள் காவற்காரர்களை எழுப்பி, இயற்கைப்படி கதவிடுக்கால் உள்ளே பார்க்க, உள் புறத்தில் இருளே மயமாய் நிறைந்திருந்தது. அவர்கள் எவ்வித சம்சயமும் கொள்ளாமல் போய் விட்டனர்.

அவர்கள் போனபின் சிறிது நேரத்தில் காவற்காரர்கள் ஒருவர்பின் னொருவராய்ப் படுத்து மறுபடி துயிலில் ஆழ்ந்து போயினர்.

ஜெவான்கள் மறுபடியும் மூன்றரை மணிக்கு அங்கு வந்து ஆட்களை எழுப்பிவிட்டவுடன், கதவிடுக்கால் உள்ளே பார்க்க, உள் புறத்தில் மின்சார விளக்குகளில் ஒன்று எரிந்துகொண் டிருந்தது. அதைப் பார்த்த ஜெவான், "என்ணண்ணே, உள்ளற விளக்கு எரியுதே! மின்னெ பாத்தப்ப விளக்கு இல்லையே!" என்று வியப்பாகவும் திகிலோடும் கூறினன்.

அதைக் கேட்டு இன்னொரு ஜெவான் துடியாகக் கதவண்டை சென்று உள்ளே பார்த்துவிட்டு, "ஆமாம், முன்னே இருட்டா யிருந்ததே!" என்று தணிவான குரலில் கூறியபடி கதவின் பூட்டைத் தடவி இழுத்துப் பார்க்க, அது பூட்டப்பட்டிருந்தது.

அதைக் கேட்ட காவற்காரர்களும் திடுக்கிட்டு திகில் கொண்டு கதவண்டை வந்து இடுக்கால் உள்ளே பார்த்து, விளக்கு எதனல் எரிந்ததென்பதை நிச்சயிக்க மாட்டாமல் தத்தளிக்கலாயினர்.

ஒரு ஜெவான் காவற்காரர்களில் முக்கியஸ்தனைப் பார்த்து, "உள்ளற யாராச்சும் படுத்திருக்காங்களா? விளக்கு எரியுதே! நாங்க மின்னெ பாத்தப்ப இல்லியே!" என்ருன்.

காவற்காரன்:—உள்ளற ஆரு மில்லீங்களே! விளக்கு எரியறது மாயமால்ல இருக்குது.

ஜெவான்:—எலக்டிரிக் சுவிச்சி (Switch) வெசை தளந்துபோய், தானே ஏத்திக்கிட்டுதா, இல்லாமெய் போனு, திருடன் கிருடன் உள்ளற தூங்கிருப்பானு!

காவற்காரன்:—இம்பிட்டுக் காலமா இல்லாமெ இண்ணைக்கி எந்தத் திருடன் வரப்போருன்! கதவு, பூட்டு எல்லாம் அப்பிடியே இருக்குதே. திருடன் எப்படி உள்ளற போறது?

ஜெவான்:—பின்னுலெ வாசப்படி இல்லியா?

காவற்காரன்:—அதெல்லாம் ஒண்ணும் பேசப்படா துங்க. சொவரு கல்லுக்கோட்டை கணக்கா நாப்பதடி ஒசரம் இருக்குதுங்க. ஜன்னல் கின்னல் ஒண்ணுமில் லீங்க.

ஜெவான்'—சொவத்துலெ கன்னங் கின்னம் வச்சு ஆளு வரலாமல்ல?

காவற்காரன்:—சொவரு முளுதும் சிமிட்டிச் சொவரு. என்னுதான் இடிச்சாலும், ரவையுண்டுகூடப் பேராது.

ஜெவான்:—அப்படியானு, சுவிச்சு வெசைதானு கவே வந்து பத்திக்கிட்டிருக்கும்.

ஜெவான்:—எல்லாத்துக்கும் கதவெத் தொறந்து பார்த்தா நல்லது. சாவி எங்கனெ யிருக்குதப்பா?

காவற்காரன்:—சாவி, மொதலாளிக்கிட்ட இருக் குது. அவுரு ஆத்தாங்கரைக்குப் பக்கத்துலெ பங்களா வுலே இருக்கிருரு.

ஜெவான்:—அங்கே டெலிபோன் இருக்குதா?

காவற்காரன்:—இருக்குது.

ஜெவான்:—நீ ஒரு ஓட்டமா இதோ பக்கத்துலே இருக்கிற டேஷனுக்கு ஓடு; உள்ளற ரைட்டரு படுத்திருக்காரு. கூப்பிட்டு, சங்கதியெச் சொல்லி, டெலிபோன் வளியா ஸௌக்காருக்கு இந்த சங்கதியெச் சொல்லி, ஒடனே சாவியோடெ அவரே வரச் சொல்லிப்புட்டு ஓடியா—என்றான்.

அதைக் கேட்டுக்கொண்டு அந்த ஆள் அங்கிருந்து ஓட்டமாக ஓடினன். மற்ற மூன்று ஆள்களும், ஒரு ஜெவானும் சற்று தூரத்தில் நிற்க, இன்னொரு ஜெவான் கதவிடுக்கால் உள்ளே உற்றுப் பார்த்தபடி நின்றான். இரண்டொரு நிமிஷகாலம் கழிந்தது. உள்புறத்தில் ஒரு வித ஓசை யுண்டாவதுபோலத் தோன்றியது. உடனே அந்த ஜெவான் மின்சார சக்தியால் ஊக்கப்பட்டவன். போலப் பின்புறம் திரும்பி, "அடேடே! ஆளு உள்ளற இருக்கிறாண்டோய்" என்று தணிவான குரலில் கூறினன்.

அதைக் கேட்டு மற்றவரும் திடுக்கிட்டு பெரிதும் ஆவேசம் கொண்டு, ஒருவர்பின் னொருவராய்க் கதவண்டை வந்து இடுக்கால் உள்புறம் பார்த்து காதை வைத்து, கவனித்து 'ஆள் உள்ளே இருக்கிறான்' என்று விஷயத்தை ஆமோதித்தனர்.

அதற்குமேல் தாம் சும்மா இருப்பது சரியல்லவென்று ஜெவான்கள் கருதினர். கதவு முன்புறம் பூட்டப்பட்டபடி இருந்ததிலிருந்து திருடர் வேறு வழியாக உள்ளே போயிருக்க வேண்டும், அல்லது பகலிலேயே உள்ளே இருந்திக்க வேண்டும் என்று அநுமானித்துக் கொண்டனர். ஒருவன் நடு ரஸ்தாவில் போய் நின்றுகொண்டு தனது ஊது குழலை எடுத்து வாயில் வைத்து, பெரிய அபாயத்தைக் காட்டிய விதத்தில் உரமாய் ஊதிக்கொண்டிருந்தான். இன்னொருவன் மூன்று கூலியாள்களில் ஒருவனை அங்கே நிறுத்திவிட்டு, மற்றவருடன் பக்கத்திலிருந்த வீடுகளின் கதவுகளைத் தட்டி

உள்ளே இருந்த ஜனங்களை எழுப்பி எச்சரிக்கும்படி சொல்லிவிட்டு, தானும் அதேப்போலச் செய்தான். சிறிது நேரத்தில் ஏராளமான ஜனக்களும், போலீஸ் லோந்துக்காரர்களும் அங்கு வந்து நிறைந்து போய் விஷயத்தைத் தெரிந்துகொண்டு கடைக்குள் போகவும் திருடரைப் பிடித்துக் கொள்ளவும் ஆவல்கொண்டு துடிதுடித்து நின்றனர்.

அந்த வீட்டின் பின்புறத்தில் சிலர் போய் நிற்க வேண்டுமென்று பலர் கூறினர். உடனே சிலர் பின்புறத்திலிருந்த தெருவை நோக்கி ஓடினர்.

ஸௌக்காரினது கடையின் ஒரு பக்கத்தில் வக்கீல் நாராயண ஐயரின் மெத்தை வீடிருந்தது. இன்னொரு புறத்தில் வேறொரு மராட்டியரின் வீடிருந்தது வக்கீலின் வீட்டுக் கதவை சிலர் இடித்துப் பார்த்தனராலும், எவரும் எழுந்து வரவுமில்லை; கதவைத் திறந்துவிடவுமில்லை: இன்னொரு புறத்திலிருந்த மராட்டியர் உடனே தமது வீட்டைத் திறந்து விஷயத்தைத் தெரிந்துகொண்டாராதலால், அவரும் துடிதுடித்து மற்றவரை அழைத்துக்கொண்டு தமது வீட்டின் பின் பக்கத்திலிருந்த புறக்கடைக்குப்போய், அங்கிருந்த மதில் சுவரின்மேலேறி ஸௌக்காரின் கடைக்குப் பின் பக்கத்கிலிருந்த புறக்கடையில் குதித்தனர். ஆனல் ஸௌக்காரின் கடையில் பின்புறத்தில் வழியில்லை யாதலால், அந்தப் புறக்கடை பின்பக்கத்து தெருவிலிருந்த வீட்டைச் சேர்ந்ததென்பது தெரிந்தது. ஆயினும், அந்தப் புறக்கடைக்குச் சென்றவர்கள் ஸௌக்காரின் கடையின் பின்புறச் சுவரை நன்ருக கவனித்துப் பார்த்தனர். அது ஒரு பெரிய கோவிலின் மதில்போல் ஆகாயத்தை யளாவிய சுவராயும், கதவோ, ஜன்னல் முதலிய திறப்புகளோ இல்லாததாயும் இருந்தது. அந்தச் சுவரின் வழியாக மனிதர் உள்ளே போவது கூடாத காரியமென்பது பிரத்தியக்ஷமாகத் தெரிந்துவிட்டது. ஆகையால் திருடர்

அந்த வழியாய்ப் போகவில்லை என்று எல்லோரும் தீர்மானித்தனராஞலும் சிலர் அங்கேயே நிறுத்தப்பட்டனர். பலர் மராட்டியருடைய வீட்டின் வழியாக மறுபடி முன்புறத்தில் வந்தனராதலால், அவர்கள் அந்த வீட்டின் வழியாகத் திருடர் ஒருகால் ஸௌக்காரின் கடைக்குள் போயிருப்பரோ வென்பதை ஆராய்ந்து பார்த்தனர். அந்த முயற்சியும் எவ்வித பலனையும் தரவில்லை. ஆகவே அந்த வீட்டு முற்றத்தில் சிலர் காவலாய் நிறுத்தப்பட்டனர். மற்றவர் ரஸ்தாவிற்கு வந்தனர்.

திருடன் பகலிலிருந்தே உள்ளே இருந்திருக்க வேண்டுமென்றும், அவன் அப்போதும் உள்ளே தான் இருக்கிருனென்றும், சிலர் அபிப்பிராயம் கூறினர். வேறு சிலர் விளக்கு தாஞகப் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்றும் ஓசை வேறு எந்த வீட்டிலிருந்தாகிலும் உண்டாயிருக்க வேண்டுமென்றும் கூறினர். எல்லாவற்றிற்கும், மிகுதியிருந்த இன்னொரு பக்கத்திலிருந்த வக்கீலின் வீட்டிற்குள் போய்ப்பார்த்து திருப்தி செய்துகொள்வதே நல்லதென்று நினைத்தனராதலால், பலர் மாறி மாறிச் சென்று கதவை தடதடவென்று ஓங்கி இடிக்கத் தொடங்கினர். கதவு திறக்கப்படவே இல்லை. உள் புறத்தில் மனிதர் இருந்த குறிப்பும் ஏற்படவில்லை.

அந்த சமயத்தில் போலீஸ் அசிஸ்டெண்ட் சூபரின்டெண்டெண்ட் மிஸ்டர் சுந்தரம், ஸார்ஜண்ட், ஸர்க்கில் இன்ஸ்பெக்டர், இரண்டு ஸப்-இன்ஸ்பெக்டர்கள் சில ஏட்டுகள், பல ஜெவான்கள் ஆகியோர் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புவதுபோல தபதப வென்று வந்து வீட்டு வாசலில் நிறைந்து போயினர்.

ஆஞலும், தாம் எந்த வழியாக உள்ளே நுழைவதென்பதை நிச்சயிக்க மாட்டாமல் எல்லோரும் இரண்டொரு நிமிஷ காலம் தயங்கினர். சிலர் ஸௌக்கார் வீட்டின் கதவை உடைக்கலா மென்றனர். விளக்கு தாஞக ஏற்றிக் கொண்டிருக்கும் பட்சத்தில் அது பெரிய மூடச்

செய்கையாக முடியுமென்று சிலர் அபிப்பிராயம் கூறினர். வக்கீலின் வீட்டு மச்சின்மேலேறி உள்ளே போகலாமென்றனர் பலர். மார்வாடியின் வீட்டிற்கு உடனே மோட்டாரை அனுப்பலாமென்றனர் சிலர்.

அவ்வாறு அங்கிருந்தோர் பெரிய குழப்பத்தில் ஆழ்ந்திருந்த சமயத்தில், ஸௌக்காரே அடுத்த பங்களாவிலிருந்த ஒரு நண்பருடைய மோட்டார் வண்டியை இரவல் வாங்கிக்கொண்டு, அதில் உட்கார்ந்து வந்து சேர்ந்து விஷயங்களைத் தெரிந்துகொண்டு முன் பக்கத்துப் பூட்டை விலக்கி கதவைத் திறந்துவிட்டார். போலீஸ் உதவி அதிகாரியும், மற்றும் பலபோலீஸாரும் தமது துப்பாக்கிகளையும், கத்திகளையும், ரிவால்வர்களையும் கையில் ஆயத்தமாக வைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தனர். அவர்களுக்கிடையில் சென்ற மார்வாடி இன்னின்ன இடத்தில் மின்சார விளக்குகளின் விசைகள் இருக்கின்றன வென்று சொல்லிக்கொண்டே போனாராதலால், போலீஸார் எல்லா விளக்குகளையும் ஏற்றி மூலை முடக்குகளை ஒன்றுகூட மிச்சம் விடாமல் பார்த்துக்கொண்டும், முதல் வாசற்படியிலும் உட்புறத்தில் பல இடங்களிலும் ஜெவான்களைக் காவலாக நிறுத்திக்கொண்டும் போயினர்.

கீழ்ப்பகுதி முழுவதும் சோதித்துப் பார்க்கப்பட்டுப் போயிற்று. திருடனோ, திருடன் வந்துபோன குறிப்போ காணப்படவில்லை. உடனே எல்லோரும் மேல் மாடத்திற்கு ஏறிச் சென்று ஸௌக்கார் உட்கார்ந்துகொள்ளும் ஹாலையடைந்தனர். அங்கேதான் விளக்கு எரிந்துகொண்டிருந்ததாகையால், அந்த வெளிச்சமே கீழ்ப்பக்கத்து முற்றத்தில் தெரிந்தது.

அங்கே போனவுடனேதான் ஸௌக்கார், "ஐயோ கதவு திறந்து கிடக்கிறதே!" என்று பெரிதும் வியப்போடும் அச்சத்தோடும் கதற, அந்த ஓசை எல்லோருடைய மனதிலும் கத்திபோல் சுரீரென்று பாய்ந்தது. அச்சத்

தினுல் எல்லோருக்கும் உச்சி மயிர் நிமிர்ந்து போயிற்று; உடம்பு முழுவதும் சிலுசிலுப்பு பரவியது. எந்த மூலேயில் திருடர் ஒளிந்துகொண்டிருப்பார்களோ என்னும் பீதி ஒவ்வொருவருக்கும் எழுந்ததாகையால் எவரும் துணிந்து முன்னே சொல்லாமல், ஒருவருக்குப்பின் மற்றவராய் வந்து பின்னையலாடினர்.

ஆனுல் மிஸ்டர் சுந்தரம் சுத்த வீரத்தனத்தோடு தமது ரிவால்வரைக் கையில் பிடித்துக்கொண்டு, நகைகள் முதலியவை வைக்கப்பட்டிருந்த பொக்கிஷ அறைக்குள் நுழைய, மற்ற போலீஸ்காரர்கள் அவருக்குப் பின்னுல் தைரியமாக நெருங்கிச் சென்றனர். அவர்களுக்கு நடுவில் ஸௌக்காரும் சென்றூர்.

அவ்வாறு உள்புறத்தை அடைந்த ஸௌக்கார், "அடாடா! அன்னிபெஸன்டின் சிலேப்பெட்டி போய் விட்டதே! இங்கேதானே வைத்தார்கள்! நான் இந்தக் கதவைப் பூட்டிக்கொண்டு போனபோது அது இருந்ததைப் பார்த்தேனே!" என்றூர்.

அதைக் கேட்ட போலீஸார் திடுக்கிட்டு வியப்போடு ஸௌக்காரின் முகத்தைப் பார்க்க, ஸௌக்கார் அந்தப் பெட்டி இன்னூரால் இன்ன காரணத்தை முன்னிட்டு வைக்கப் பட்டதென்று தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறினுர்.

அதைக்கேட்ட உதவி அதிகாரி, "ஓகோ! அன்னிபெஸன்டின் சிலே இருந்ததா! அப்படியானுல் சரிதான். இரண்டு சிலேகளேக் கொண்டுபோனவரைக் கண்டு பிடிக்கமாட்டாமல் நாம் பைத்தியம் கொள்ளும் நிலேமையிலிருக்கிறேம். மறுபடி அதே திருட்டு மூன்றுவது தடவை நடந்திருக்கிறதுபோ லிருக்கிறது. இது மாயத் திருட்டகத்தான் இருக்கிறது. அடுத்த உலகத்தில் உள்ள அன்னிபெஸன்ட் அம்மாள்தான், தம் சிலேகள்கூட இந்த அசுத்த உலகத்தில் இருக்கக்கூடாதென்று தேவ

தூதர்களை ஏவிவிட்டு சிலைகளை அப்புறப்படுத்தச் சொல்லுகிருரோ என்னவோ!" என்ருர்.

அந்தத் திருட்டினுல் ஏற்பட்ட அதிர்ச்சியும், பிரக்ஞாபகமும் சரிப்பட்டவுடன ஸௌக்கார் தமது பீரோக்களின்மீது கவனத்தைச் செலுத்தவே, அவர் ஏதோ நெருப்பை மிதித்துவிட்டவர் போலத் துள்ளிக் குதித்து, "பீரோக்களிலிருந்த ஸொத் ளும் போய்விட்டனபோ லிருக்கின்றனவே!" என் வீறிட்டலறியபடி சும்மா சாத்திவைக்கப்பட்டிருந்த க வுகளை யெல்லாம் பார்த்து, "ஐயையோ! வைர நகைக, தங்க நகைகள், எல்லாம் போய்விட்டனவே! ஒன் கூட மிச்சமில்லாமல் எல்லாவற்றையும் கொண்டு ய்விட்டானே! ஐயோ! தெய்வமே!" என்று அல புலம்பி மார்பில் அறைந்து கொள்ளத் தொடங்கி ர்.

அவருடைய பரி நாபகரமான அலறலைக் கேட்டு மற்றவர்கள் திகிலும் மனக்கலக்கமும் அடைந்து நடு நடுங்கி, அப்போதும் திருடர் உள்ளே இருக்கின்றனரோ வென்று நினைத்து மூலை முடக்குகளிலெல்லாம் போய்த் தேடிப் பார்த்தனர். எங்கும் திருடர் காணப்படவில்லை. சுமார் 10 லக்ஷம் ரூப ப் பெறத்தக்க தம்முடைய சொத்துகள் போய்விட்டனவென்று கூறிப் புலம்பிய ஸௌக்கார் அப்படியே மூர்ச்சித்து ஹாலில் மரம்போலச் சாய்ந்துவிட்டார். பே 'ஸார் உடனே டெலிபோன் மூலம் டாக்டருக்குச் யனுப்பிவிட்டு, அந்த வீட்டின் கதவுகள் ஜன்னல்க முதலியவற்றை யெல்லாம் கூர்ந்து ஆராயத் தொடங்கி எந்த வழியாகத்தான் திருடர் வந்திருப்பார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று பிரயத்தனப்பட்டனர். முற்றத்தின் மேல்பாகம் முழுதும் தளம் போடப்பெற்றிருந்தமையால் மேல்பக்கத்தில் உள்ளே வர வழியில்லாதிருந்தது. அது விபரீதமான பெரிய திருட்டாயிருந்ததாகையால், டெலிபோன் மூலம் செய்தி பெரிய சூபரின்டென்டென்ட், ஜில்லா

மாஜிஸ்டிரேட் முதலிய பெரிய அதிகாரிகளுக்கெல்லாம் தெரிவிக்கப்பட, சிறிது நேரத்தில் அவர்களும் வந்து சேர்ந்தனர். டாக்டர் ஒருவர் மருந்துகளுடன் வந்தார். உள்ளே நடந்திருந்த திருட்டுகளின் விபரம் வெளியில் இருந்த போலீஸாருக்கும், அவர்கள் மூலம ஜனங்களுக்கும் தெரியவே, எல்லோரும் அஞ்சி நடுங்கிப் பெரிதும் ஆவேசங்கொண்டு துடி...ப் பதறி நி...றனர்.

உள்ளே சென்ற டாக்...ர் ஸௌக்காரின் நாடியைப் பரீட்சித்து, அவருடைய ...ச்சை தெளியும்படியான சிகிச்சைகளைச் செய்தாரா...ல், அவர் சுமார் அரை நாழிகைக்குப் பிறகு தமது சு...உணர்ச்சியை யடைந்தாராலும் தம் மனதில் பெ...யெழுந்த அபாரமான விசன உணர்ச்சியைப் பொறு... அப்படியே திண்டில் பிணம்போலச் சாய்ந்து கண்ண...ர ஆறுய்ப் பெருக்கி குழந்தைபோலத் தேம்பித் தேம்... அழுகிறார்.

அப்போது ஐந்து மணி சமய... ஆய்விட்டதாகையால், பொழுது விடிகிறவரையில் தாம் அவ்விடத்திலேயே இருந்து, ஸௌக்காரின் குமாஸ்தாக்களை வரவழைத்து என்னென்ன பொருள்...ள் களவாடப்பட்டுப் போயின வென்பதை திட்டமாக... தெரிந்துகொண்டு, அந்த வீட்டையும், பக்கத்து வீடுகளையும் சந்தேகமற ஆராய்ந்துவிட வேண்டுமென்று...ர்மானித்துக்கொண்டு, போலீஸார் அவ்விடத்திலேயே... சரிப்பாகக் காத்திருந்தனர். பீரோக்கள் யாவும் ம...கிகளால் திறக்கப்பட்டனவென்பது கதவில் கண்...டாகத் தெரிந்தது. அவைகள் இருந்த அறையின் பூட்டின் தாளிருந்த இடம் வட்டமாக அறுத்தெடுக்கப்பட்டுப் ...போயிருந்ததாகையால், அறுபட்ட மரத்துண்டும் தாழ்ப்பாளு...ம் பூட்டோடு தொங்கின. பின் புறத்திலும் முன்புறத்திலும் மராட்டியருடைய வீட்டிற்குள்ளும் பலர் காவலாக நின்றனர். வக்கீல் நாராயண ஐயரின் வீட்டுக் கதவுகள் திறக்கப்படாமலேயே இருந்தனவாதலால், உள்ளே இருந்தவர்கள்

என்ன வாயினர் என்பதை நிச்சயிக்கமாட்டாமல், அவ் விஷயத்தில் பெரிதும் ஆச்சரியமடைந்தவராயிருந்தனர்.

அந்த நிலைமையில் பொழுது விடிந்தது. ஸௌக் காரின் குமஸ்தாக்களும் வந்து சேர, அவர்கள் நகைகள் முதலியவை இன்னின்ன களவாடப்பட்டுப் போயின என்பதை கணக்குப் புஸ்தகங்களின் உதவியால் நிச் சயித்துப் போலீஸாரிடம் வந்து வாக்குமூலம் கொடுத்தனர்.

அப்போது ஒரு போலீஸ் ஜெவான் சன்னதங் கொண்டவன் போலக் கூத்தாடிக்கொண்டு போலீஸ் அதிகாரிகளிடம் ஓடி, "இதோ வக்கீலின் வீட்டிற்கும் இதற்கும நடுவில் உள்ள ஜன்னல் பெயர்க்கப்பட்டு, மறுபடி சுவரில் சும்மா வைக்கப்பட்டிருக்கிறது; வந்து பாருங்கள்" என்றான்.

அந்தச் செய்தியைக் கேட்கவே, எல்லோரும் தம்மை மீறி, "ஹா! எப்படியா! எங்கே?" என்று கதறி ஆவலோடு கேட்க, அவன் அவர்களை மேன்மாட ஹாலி லிருந்து போகும ஒரு தாழ்வாரத்தின் வழியாக அழைத் துக்கொண்டு இரண்டு மூன்று முடக்குகளில் திரும்பி அப்பால் போய், அந்த வீட்டிற்கும் வக்கீலின் வீட்டிற் கும் நடுவிலிருந்த சுவரைக் காட்ட, அந்த இடத்தில் இருந்த ஒரு பெரிய ஜன்னல் சுவரை விட்டு அலக்காய் எடுக்கப் பெற்று மறுபடி அதே ஸ்தானத்தில் அப் படியே வைக்கப்பட்டிருந்தது.

அதை எடுத்துக் கீழே வைக்கும்படி போலீஸ் பெரிய துரை உத்தரவிட, ஜெவான்கள் அதை எடுத்து தூர வைத்தனர். சுவரில் பெரிய வழி உண்டாகவே, எல்லோரும் அப்புறம் போக, அது வக்கீலின் வீட்டு மேன்மாடக் கூடமென்பது தெரிந்தது. எல்லோரும் அந்த வீடு முழுதிலும் சென்று ஓரிடம் விடாமல் தேடிப் பார்க்க, வக்கீல் காணப்படவில்லை. அவருடைய தம்பி யும், வேலைக்காரனும் அப்போதே படுக்கையிலிருந்து

விழித்துக் கொண்டு, எழுந்து வந்தனராதலால், வீட்டிற் குள் பல மனிதர்கள் வந்து புகுந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டு திகில் கொண்டு மருண்டு மருண்டு விழித்து நடுங்குகின்றனர். முன்புறக் கதவும், பின்புறக் கதவும் மூடித் தாள்களிடப் பெற்றப்படி யிருந்தன. வீடு முழு தும் சோதனை செய்யப்பட்டதில் களவாடப்பட்ட பொரு ளில் எதுவும் அந்த வீட்டில் காணப்படவில்லை.

போலீஸார் வக்கீல் எங்கே என்று அவ்விருவரை யும் கேட்க, அவர் இரவில் அவருடைய கட்டிலில் படுத் தார் என்றும், அவர் எங்கே போனார் என்பது தங்களுக் குத் தெரியாதென்றும் கூறினர்.

நெடுநேரமாகக் கதவுகள் இடிக்கப்பட்டும், அவர்கள் ஏன் அவைகளைத் திறக்கவில்லை யென்று போலீஸார் வினவ, "யார் தட்டினார்கள்? எங்களுக்குத் தெரியவே தெரியாதே! இப்போதுதான் பொழுது விடிந்தது. வழக் கப்படி எழுந்தோம். யாராவது தட்டியிருந்தால் கதவைத் திறக்காமல் இருப்போமா" என்று நிஷ்களங்கமான முகத்தோற்றத்தோடு அவர்கள் மறுமொழி கூறினர். போலீஸார் அவர்களை அழைத்துக்கொண்டு போய், பெயர்க்கப்பட்டிருந்த ஜன்னலைக் காட்ட, அவர்கள் உளறியடித்துக்கொண்டு, "ஐயோ! இது என்ன பெரிய மாயமா யிருக்கிறதே! இதை யார் பெயர்த்தார்கள்? ஏன் அப்படிப் பெயர்த்தார்கள்?" என்று போலீஸாரையே திருப்பிக் கேட்டனர்.

உடனே எல்லோரும் தமது வியப்பை அடக்க மாட்டாமல் 'கலக்' என்று சிரித்தனர். உதவி அதிகாரி, "தூங்குகிறவரை எழுப்பலாம்; சும்மா கண்களை மூடிப் பாசாங்கு செய்வோரை நாம் எப்படி எழுப்ப முடியும்" என்றார்.

அவ்விருவரிடத்திலிருந்தும் தமக்கு உபயோகப் படக்கூடிய தகவல் எதையேனும் கிரகிக்க வேண்டு

மென்று போலீஸார் ஒவ்வொருவரும் தம் தம் புத்தியை யும் யுக்தியையும் உபயோகித்துப் பார்த்ததெல்லாம் அற்ப பயனும் அளிக்காமல் போய்விட்டது.

அவர்கள் இருவரையும் போலீஸார் கைதிகளாக்கி தம்முடன் அழைத்துக் கொண்டதன்றி, இரண்டு கட்டி டங்களிலும் ஏராளமான ஜெவான்களைப் பாராப் போட்டு விட்டு தமது காரியாலயங்களுக்குச் சென்றனர். தமது சொத்துக்களில் சுமார் 25 லக்ஷம் ரூபாய் பெறத் தக்க நகைகள் முதலியவை காணமற் போய்விட்டன வென்பதைத் தெரிந்துகொண்ட ஸௌக்கார் அந்த அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் செயலற்று வீழ்ந்து விட்டாராதலால், போலீஸார் அவரை மோட்டார் வண்டி யில் வைத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்.

அந்த பயங்கரமான மாயத்திருட்டைப்பற்றிய விவ ரம் பொழுது விடிவதற்குள் ஊர் முழுதும் பரவிப்போய் விட்டதாகையால், ஜனங்கள் எல்லோரும் பெரிதும் கலக் கமும், ஆச்சரியமும் அடைந்து அதே பேச்சாகப் பேசு வதும், கருடசேவையை தரிசிக்கப் போகிறவர்போல ஸௌக்காரின் கடையைப் பார்க்க ஓடிவருவதுமா யிருந் தனர்.

4

அநாமதேயரின் அதிசயக் கடிதம்

அன்றையதினம் மாலையில் அந்த ஊரில் வெளியான தினசரிப் புலுகன் பத்திரிகையின் பக்கங்களிலெல்லாம் அன்னிபெஸன்டின் சிலைத்திருட்டு, ஸௌக்காரின் கடைத் திருட்டு ஆகிய இரண்டு சம்பவங்களைப் பற்றிய செய்திகளே தடிப்பான பெரிய பெரிய தலைப்பெழுத்துகளில் அநேகமாய் எல்லாப் பக்கங்களிலும் வெளியாயிருந்தன.

இரண்டு சிலைகள் காணமல் போனதைப் போலீஸார் தக்க ஊக்கத்தோடு கண்டுபிடித்திருந்தால், மூன்ருவது தடவை திருட்டு நடந்தே இருக்காதென்றும், ஸௌக்காருடைய 25 லக்ஷம் களவாடப்பட் டிருக்காதென்றும், அவ்வளவு அபாரமான கொள்ளைக்குப் போலீஸாருடைய அசிரத்தையே உத்தரவாதமென்றும், மேலதிகாரிகள் இந்த விஷயத்தில் உடனே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு ஸௌகாருடைய சொத்துக்களை மீட்டுக் கொடுக்காவிடில், போலீஸாருக்கு மாத்திரமின்றி, சூரியனே அஸ்தமிக்காத அவ்வளவு அபரிமிதமான அகிலலோக சாம்ராஜ்யத்திற்குச் சக்கரவர்த்தியாயிருப்போரான இந்த துரைத்தனத்தாருக்கே ஒரு பெரிய களங்கமாகுமென்றும் மிக ஆக்கிரோஷத்தோடு தலையங்கம் எழுதியிருந்தார். அந்த பத்திரிகையில் உள்ளூர்ச் செய்திப் பக்கத்தில் அடியில் வரும் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

"ஸௌக்கார் கடைத் திருட்டு: இந்த ஆச்சரியமான திருட்டு சம்பந்தமாய் வக்கீல் நாராயண ஐயரின் தம்பியும், அவர்களுடைய வேலைக்காரனும் போலீஸ் லாக்

காம்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஷை இருவரும் முதன் முதலில் சொன்ன தகவலுக்கு மேல் ஓர் எள்ள ளவும் அதிகப்படியான புதிய தகவலைச் சொல்லக்கூடிய வர்களாயில்லை. அவர்களுடைய வீட்டின் ஜன்னல் பெயர்த்து வைக்கப்பட்டிருந்ததைத் தவிர, அந்தத் திருட்டில் அவர்களைச் சம்பந்தப் படுத்தக்கூடிய தடை யமோ சாட்சியமோ சிறிதும் இல்லையாதலால், அவர்க ளது விஷயத்தில் எவ்விதமான நடவடிக்கையை எடுத் துக் கொள்வதென்பதை யறியாமல் போலீஸார் நிலை கலங்கித் தவிக்கின்றனர்.

வக்கீல் நாராயண ஐயரை எங்கே போய்த் தேடுவ தென்பதை நிச்சயிக்க மாட்டாமல் போலீஸார் நிரம்ப வும் தவித்திருக்க, அவரே காலை சுமார் எட்டு மணிக்குத் தெற்கு ராஜ வீதியோடு தமது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த காலத்தில் போலீஸார் அவரைப் பிடித் துக் கொண்டனர்.

அவருடைய வீட்டிற்கும், ஸௌக்காரின் கடைக்கும் இடையில் இருந்த ஜன்னல் பெயர்க்கப்பட் டிருந்ததைப் போலீஸார் அவருக்குக் காட்டினர். அதோடு ஸௌக்கா ரின் கடையில் நிகழ்ந்த திருட்டின் விவரங்களையும், தமது தம்பியும், வேலைக்காரனும் போலீஸார் வசமிருந்த தையும் தெரிந்து கொள்ளவே, அவர் ஆச்சரியமும், கோபாவேசமும் கொண்டவராய்ப் போலீஸாரைத் தாறுமாறாக தூஷிக்கத் தொடங்கிவிட்டார்.

அன்றையதினம் இரவில் அவர் எங்கே போயிருந் தாரென்று போலீஸார் கேட்டதற்கு, தாம் போஜ னத்தை முடித்துக்கொண்டு தமது படுக்கையில் படுத் துத் தூங்கியதாகவும், அன்றைய தினம் காலை 6-மணிக்கு விழித்துக்கொண்டபோது, ஊருக்கு வெளி யில் ஒரு மைலுக்கப்பாலுள்ள ஒரு மரத்தடியில் படுத் திருந்ததாகவும், உடனே தாம் பிரமித்துப் போய் எழுந்து வந்ததாகவும், சௌக்கார் கடையில் திருடியவர்

கள் தம்மை அதில் மாட்டவைக்கும் உத்தேசத்துடன் தம்மைத் தூக்கிக் கொண்டுபோய் அவ்வாறு போட்டிருக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

அப்படியானல் அவருடைய வீட்டின் கதவுகளைஉட் புறத்தில் தாளிட்டது யாரென்று போலீஸார் கேட்க, ஒருகால் தமது வேலைக்காரனுகிலும், தம்பியாகிலும்அப் படிச் செய்திருக்கலா மென்றும், பயத்தினல், அவர்கள் அதைச் சொல்லாமல் மறைத்திருக்கலா மென்றும் கூறினர். ஆயினும் போலீஸார் அவரையும் ஸ்டேஷனில் லாக்காப்பில் வைத்திருக்கிருர்கள்.

அன்னிபெஸன்டின் 3-வது சிலைத் திருட்டு:—ஸௌக்காருடைய வீட்டில் சிலையோடுகூடிய பெட்டியை வைத்து. அதைத் திறந்து உள்ளே இருந்த சாமான்களை யெல்லாம் ஸௌகாருக்குக் காட்டி, அவரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற கலியாணம் மறுநாள் காலை ஒன்பது மணி ரயிலில் தமது ஊரிலிருந்து வந்து சேர்ந்தார். அவரைப் போலீஸார் அழைத்து, முதல் நாள் இரவில் நடந்த சம்பவத்தைக் கூறி, அவருடைய வாக்கு மூலம் வாங்கியதில், தாம் தமது சிலை பே னதைப் பற்றி பொருட் படுத்த வில்லை யென்றும், தமதுசிலையால்அநியாயமாய்த் தமது ஆப்த நண்பரான ஸௌக்காரின் 25 லக்ஷம் ரூபாய் பெறுமானமுடைய வைரங்கள், நகைகள் முதலிய சொத்துக்களை இழந்ததைப் பற்றி தாம் சகிக்க வொண்ணுத துயர மடைவதாய்க் கூறினர்.''

என்ற செய்தி காணப்பட்டது.

மறு நாளைய தினசரிப் புஞுகளிலும் அதே சம்பந்தமாய்த் துண்டு துண்டான சில செய்திகள் அப் பத்திரிகையின் பல இடங்களில் காணப் பட்டன.

"சில நாட்களாய் அன்னிபெஸன்டின் சிலைகளை வேண்டுமென்றே எவரோ நிரம்பவும் சாமர்த்தியமாய்த் திருடிக் கொண்டு போகிருர்கள்.

மேற்படி சிலைகளைத் திருடிய நபரையோ, நபர்களையோ கண்டு பிடிப்பதற்கான ஆலோசனை சொல்லுகிறவருக்கோ, அல்லது, தக்க ருஜுவோடு அப்படிப்பட்டவரைப் பிடித்துக் கொடுப்பவருக்கோ, 500 ரூபாய் சன்மானம் வழங்கப்படும்:— **போலீஸ் சூபரின்டென்டென்ட், சுயமரணபுரம்.**"

இதற்கடியில் மோஹன்மல் ஸௌக்காருடைய சன்மான விளம்பரமொன்று காணப்பட்டது. அதில் தமது வைரங்கள் முதலிய சொத்துக்கள் களவாடப் பட்டது சம்பந்தமாக அவர் 10,000 ரூபாய் சன்மான மளிப்பதாய் ஒரு விளம்பரம் வெளியிட்டிருந்தார்.

ஐந்தாறு தினங்களுக்குப் பிறகு அடியில் கண்ட செய்தி **தினசரிப் புஸ்தகனில்** காணப்பட்டது:— .

"ஸௌக்கார் அந்தத் திருட்டினுல் ஏற்பட்ட மன அதிர்ச்சியினுல் காலத்திற்கு முன் முதுமை யடைந்து விட்டவர் போலப் பெரிதும் தளர்ந்து போய் விட்டார். அவருடைய வசத்திலிருந்த பணமும் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்த நகைகள் யாவும் போய் விட்டன வாதலால், அவர் தமது பலஹீனமான நிலைமையில் மறுபடி ஏராளமாள நகைகளைத் தயாரித்து விற்பனையைத் தொடர்ந்து நடத்த அசக்தராய் இருப்பதுபற்றி, அவர் அந்த வர்த்தகத்திலிருந்து விலகிக் கொண்டார். ஆயினும், சுயமரண புரத்தில் அத்தகைய பெரிய நகைக் கடை யொன்று அத்தியாவசியமான தாகையால், அவர் சென்னை சௌக்கார்பேட்டையிலிருந்த தமது அம்மானுன **மோஹன்மல் ஸௌக்காரை** வரவழைத்து, தமது கடைக் கட்டிடத்தை அவருக்குக் கொடுத்து, அதில் அவர் புதிதாக ஒரு நகை வியாபாரத்தை ஸ்தாபிக்கும்படி விட்டு விட்டதாகவும், புதிய ஸௌக்கார் கடையை ஸ்தாபித்திருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

வக்கீல் நாராயண ஐயர் தம்மையும், தமது தம்பி, வேலைக்காரன் ஆகியோரையும் ஜாமீனில் விடும்படி

மனுச் செய்து கொண்டார். போலீஸார் அதை மிக உர மாக ஆட்சேபித்தனர். அன்னிபெஸன்ட் சங்கத்தில் நடந்த திருட்டு சம்பந்தமாய் இருவர் தனித்தனி அவரை அடையாளம் காட்டியிருந்தும், அவரை சிறைச்சாலையில் வைத்திராமல் ஜாமீனில் விட்டதனுல் மறுபடி அதை விடப் பெரிய திருட்டுக்கள் அவருடைய வீட்டின் வழி யாக நடந்திருக்கின்றனவென்றும், அவர் அதில் சம்பந் தப் படவில்லையென்று நினைக்க ஏதுவில்லையென்றும், அவரை மறுபடி ஜாமீனில் விட்டால் போலீஸார் தமது கடமையைச் செய்வது துர்லப மாகிவிடுமென்றும் சூப ரின்டென்டென்ட் துரையே மாஜிஸ்டிரேட்டிற்கு வற் புறுத்தலாக எழுதினராதலால், மாஜிஸ்டிரேட் ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார். ஆகவே, வக்கீல் முதலியோர் விசாரணைக் கைதிகளின் சிறைச்சாலையில் இருந்து வருகின்றனர்.''

ஸௌக்காரின் கடைத்திருட்டு நடந்த பிறகு சுமார் பத்து தினங்கள் கழிந்தன. அதைப்பற்றிய பொது ஜன வம்புப் பேச்சுகளும், போலீசாருடைய விசாரணை ஆடம் பரங்களும், தாமாகவே அலுத்து ஓய்ந்து போயின; பயங் கரமான இடியோசைக் கர்ஜ்ஜனைகள் யாவும் வெறும் புகையில் முடிந்தன.

போலீஸாருக்கு உபயோகப் படத் தக்க சாட்சியம் எதுவும் கிடைக்காமையால், சிறைச்சாலையில்இருந்த வக் கீல்முதலியோரைத் தாம் என்ன செய்கிறது என்பதை யறியாமல் அவர்கள் விழித்துக் கொண்டிருந்தனர்.

கலியாணம் தம்மிடமிருந்த ரொக்கம், நகைகள் முதலிய சொத்துக்களை பந்தோபஸ்திற்காக பெட்டியில் ஸௌக்காரின் கடையில்வைத்திருந்தாரென்றுநாம்முன் னரே குறிப்பிட்டோ மல்லவா. அதிர்ஷ்டவசமாக அது களவாடப்படாமல் இருந்தது. அதை எடுத்துக் கொள் ளும்படி மோஹனமல் ஸௌக்கார் நாணயமாக அவரி டம் சொல்லி விட்டார். ஆனல் திருடரது அச்சத்தினல்

அவர் அதை அவ்விடத்திலேயே வைத்திருந்ததன்றி, ஸொஹ்றஹன்மல் ஸௌக்கார் வந்தவுடன், பழையவருடைய சிபார்சின் மேல் புதியவரும் அதை இன்னம் சொற்ப காலத்திற்கு அங்கேயே வைத்திருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டார்.

அது சமபந்தமாகப் பழைய ஸௌக்கார் புதிய ஸௌக்காரிடம் அவரைப் பற்றிப் புகழ்ச்சியாகப் பேசி, அறிமுகம் செய்து வைத்ததால், கலியாணம் போஜனம் செய்த காலம் போக மற்ற வேளைகளில் புதியவருடன் கூடவே இருந்து வேடிக்கையாகப் பேசி, பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்.

புதிய ஸௌக்கார் கலியாணத்தின் வசீகரமான சம்பாஷணையால் கவரப்பட்டு படிப்படியாக அவரிடம் தம் மனதை விட்டு அந்தரங்கமாக பேசவும் நடந்து கொள்ளவும் ஆரம்பித்ததன்றி தமது இரகஸியம் சிலவற்றையும் சொல்ல ஆரம்பித்தார். ஒரு நாள் அவர்கள் இருவரும் சம்பாஷித்திருந்ததை நாம் கவனிப்போம்.

கலியாணம்;—என்ன ஸௌக்கார், இந்தப்போலீஸ்காரர்களுடைய வேலைத்தனத்தைப் பார்த்தீர்களா? என்னுடைய சிலைகள் இரண்டுதரம்காணமல் போய்விட்டன. திருடரைக்கண்டு பிடிக்க அவர்களால் கடைப்படவில்லை. நான் இன்னொரு சிலைக்கு ஆர்டர் கொடுத்தேன்; அது தயாராகிவிட்டது. அதை நான் எங்கேயும் வைக்கக் கூடாது என்று, 144 போடும்படி செய்து விட்டார்கள். ஜனங்களுடைய சொத்தைத் திருடர் அபகரித்துப்போவதைத் தடுக்க ஏற்பட்ட போலீஸார் ஜனங்கள் சொத்தைத் தம்மிடம் வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடுக்கிறார்கள். ஊரில் ஜனங்கள் எவ்வித சொத்து மில்லாமல் ஆண்டிகளா யிருந்தால், திருட்டே நடக்க வழி போலீஸார் தமது கடமையைச் செய்வது சுலப மல்லவா.

கை

ஸௌக்கார்:-(சந்தோஷ முகமலர்ச்சி காட்டி) நல்லா சொன்னுங்கொ நீங்கொ. அவுங்களெப்பத்தித்தான்நாம்ப கூட நம்ப வர்த்தக சரக்கை எடுக்காமெ பொட்டிலெயே வச்சிருக்காங்கொ.

கலியாணம்:—ஓ அப்படியா சங்கதி! உங்கள் வர்த்தக சரக்கை எடுத்து உபயோகப்படுத்த போலீஸாரைப் பற்றி நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்.

ஸௌக்கார்:- அது பெரிய ரகஸியங்கோ. வெளியே தெரியக் கூடாதுங்கோ. தெரிஞ்சா போலீஸ்காரங்கோ ஜுலும பண்ணுவாங்கொ.

கலியாணம்:—உங்களுடைய பொருள்களை நீங்கள் வைத்து ஆளுவதைப் பற்றி போலீஸார் ஏன் ஜுலும் பண்ணுவார்கள் ?

சௌக்கார்:— (தணிவான குரலில்) நம்புளுக்கிப் பளக்கமான யாபாரி ஒருத்தர் பாண்டிச்சேரிலே இருக்கருங்கோ. அவுங்க நம்புளுக்கி திருட்டுத்தனமா ஸவரன் அனுப்புவாங்கொ. இப்ப இந்த ஊர்லெ ஸவரன் ஐம்பது ரூப்யா விக்குது. அவுரு நம்புளுக்கி ஸவரன் ஒண்ணு முப்பது ரூப்யாக்கி அனுப்பறுங்கொ. அந்த மாதிரி நாம்ப வாங்கினது நம்ப ஊட்டுலெ சரியா லச்சம் ஸவரன் இருக்குதுங்கொ. அதெ யெல்லாம் எடுத்து வித்தா போலீஸாரு எங்கே வாங்கினேன்னு கேப்பாங்கொ; பட்டியல் காட்டச் சொல்லுவாங்கொ. ஜப்தி பண்ணி, கொண்டு பூடுவாங்கொ. அதுக்காவ நாம்ப வெளியெ எடுக்காமெ வச்சிருக்காங்கொ. இந்த ஸவரனெ அம்பது ரூப்யா வீதம் வித்து, லக்சம் ரூப்யாக்கு வைரம் வாங்கி நகைங்கொ பண்ணி ஷோ கேஸ்லே (Show Case) வைக்கனும்; ஸவரென் விக்கமாட்டாமெ நாம்ப முளிச்சுக்கினு இருக்காங்கொ.

கலியாணம்:— ஓகோ! அப்படியா சங்கதி! நீஙகள் கொள்வது சரியான அச்சந்தான். போலீஸார் அவசியம்

வந்து தொந்தரவு கொடுப்பார்கள். நீங்கள் இப்போது இதை என்னிடம் சொன்னது போல வேறு யாரிடத்தி லும் சொல்ல வேண்டாம். சொன்னால் உடனே அபாயம் வருவது நிச்சயம். அவன் சன்மானம் கிடைக்குமென்று நினைத்து போலீஸாரிடம் உடனே போய் கோள் பற்ற வைத்து விடுவான். இப்போது நானே போய்ப் போலீ ஸாரிடம் சொல்லி உங்கள் சொத்தை யெல்லாம் அவர் கள் பறிமுதல் செய்து கொண்டு போகும்படி செய்து விடலாம்.

ஸெளக்கார்:—நீங்கொ நம்புளுக்கி செநேகிதகாரரு ஆயிப்போனீங்கொ; அதனாலெ உங்கள்கி சொன்னுங்கொ. இது நம்ப மோஹன்மல் ஸெளக்கார்க்கிக் கூடத் தெரி யாதுங்கொ. அவுரிக்குத் தெரிஞ்சா, அவுருக்கும் வாங்கிக் குடுக்க ஸொல்லுவாங்கொ. அடிக்கடி ஸவரன் வந்தா, போலீஸ்காருக்குத் தெரிஞ்சு பூடும். நம்பொ பொளேப்பு வாயிலெ மண்ணு உளுந்து போவுங்கொ.

கலியாணம்:—நீங்கள் சொல்வது சரியான விஷயந் தான். போலீஸார் சம்சயங் கொள்ளாதபடி நம் காரியம் வரையில் பார்த்துக் கொண்டு போவதுதான் புத்திசாலித் தனம். ஆமா, பாண்டிச்சேரியிலிருந்து உங்களுக்கு ஸவ ரன் வருவதாகச்சொல்லுகிறீர்களே! அந்த ஊரிலிருந்து வரும் ஸவரன் மாற்றுக் குறைவானதென்று ஜனங்கள் சொல்லுகிறார்களே! அது இந்த ஊரில் எப்படி எடுபடும்?

ஸெளக்கார்:—அதெல்லாம் சரியல்லாங்கொ. ஸவர னெல்லாம் லண்டன்லே அடிக்கருங்கொ. அதுங்களெ பிராஞ்சுக்காரரு வாங்கி பாண்டிச்சேரிக்கு அனுப்ப ருங்கொ. எல்லாம ஒரே மாதிரிதான் இருக்கும். வெலே கொஞ்சமுன்னு அப்பிடி ஸொல்றுங்கொ. நாம்ப ஸவ ரன் காட்டருங்கொ. எப்பிடி இருக்குதுன்னு நீங்கொ பாருங்கொ. இப்பிடி வாங்கொ—என்றார்.

உடனே அவரும் கலியாணமும் எழுந்து பக்கத்தி லிருந்த அறைக்குள் சென்றனர். அது அந்த மாளிகை

யில் நிரம்பவும் பந்தோபஸ்தான இடம். அங்குமோஹன் மல் ஸௌக்காருடைய பீரோக்கள் அப்போதும் காலியாகவே இருந்தன. ஆனால், ஸொஹ்றஹன்மல் ஸௌக்கார் தாம் கொணர்ந்திருந்த ஸவரன்களை சிறிய சிறிய கித்தான் பைகளில் மளிகைக் கடைகளில் மூட்டைகளை அடுக்கி வைப்பது போல, ஒரு மூலையில் அடுக்கி வைத்திருந்தார். எல்லா மூட்டைகளும் கட்டி அரக்கு ஸீல் வைக்கப் பெற்றிருந்தன. ஆனால் மேலே இருந்த மூட்டை ஸீல் வைககப்பட வில்லை. நூல் கயிற்றினால் கட்டி வைக்கப் பட்டிருந்தது. ஸௌக்கார் அங்குசென்று அந்த மூட்டையின் கட்டை அவிழ்த்து வலது கையை உள்ளே விடுத்து ஒரு பிடி ஸவரன்களை அள்ளி கையை வெளியில் எடுத்துத் தமக்குப் பக்கத்திலிருந்த, கலியாணத்தினிடம் காட்டினார். அவருடைய கையில் சுமார் இருபது புதிய ஸவரன்கள் தகத்தகாயமாக மின்னிக் கண்களைப் பறித்தன.

அதைக் கண்ட கலியாணம் பிரமித்துப் போனவராய், ஸௌக்காருடைய கையிலிருந்த ஸவரன்களில்சில வற்றை எடுத்து ஆராய்ந்து தட்டிப் பார்த்தார். அவை சென்ற வருஷத்தில் பொறிக்கப் பட்ட ஒழுங்கான நாணயங்கள் என்பது சந்தேகமறத் தெரிந்தது. அவர் "சரிதான்; வையுங்கள்; இதே துறையில் தலைமுறை தலைமுறையாய்ப் பழகுகிறவர்களான நீங்கள் தப்பான ஸவரன்களை வாங்குவீர்களா; வாருங்கள் ஹாலுக்குப் போவோம்" என்று கூறியபடி முன்னிருந்த இடத்திற்குச் செல்ல, ஸௌக்கார் பையை மறுபடி கட்டி வைத்து விட்டு வந்து ஹாலில் முன்போல உட்கார்ந்து கொண்டார்.

இவ்வாறு அவர்கள் இருவரும் மேலும் சொற்ப நேரம் பேசிக்கொண்டிருந்த பின்னர், கலியாணம் அவ்விடத்தை விட்டு எழுந்துதமது இருப்பிடத்திற்குச் சென்றார்.

அன்றைய தினம் வேறு எவ்விதமான புதிய சம்பவமுமின்றிக் கழிந்தது. மறு நாள் மாலையில் ஸௌக்கார் தமது ஹாலில் கிராமபோன் சங்கீத கருவிகளை வைத்து சுவாரஸ்யமான பாட்டுகளைப் பாடச் செய்து இன்பகரமாகக் கேட்டபடி பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்.

அவ்வாறு ஐந்தாறு பாட்டுகள் பாடப் பட்டன. படியில் யாரோ ஏறிவந்த ஓசையைக் கேட்டு, கிராமபோன் மிஷினை நிறுத்தி விட்டு தமக்கெதிரில் மேஜைப் பெட்டியின் மீதிருந்த ஏதோ ஒரு கணக்குப் புஸ்தகத்தைப் பிரித்து அதிலிருந்த புள்ளி விவரங்களை கவனமாகப் பார்த்தபடி இருந்தார்.

அப்போது கலியாணம் புன்னகை தவழ்ந்த முகத்தோடு அங்கே வந்து, "ராம், ராம், ஸௌக்கார்" என்று கூறி நமஸ்காரம் செய்தார்.

அதைக் கேட்ட ஸௌக்கார் திடுக்கிட்டு நிமிர்ந்து, "ஓ நீங்களா! நமஷ்கார், வாங்கொ, உக்காருங்கொ. எங்கே நேத்துமொத ஒங்க தரிஷன் கிடைக்கல்லே" என்றார்.

கலியாணம் அவருக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டவராய் "நேற்று இங்கே இருந்து போனேனு; ஊரில் என் சம்சாரத்தினிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. பிள்ளை பெற்ற பிறகு அவளுடைய உடம்பு சரிப்பட்டு வரவில்லையாம். குழந்தைக்கும் அடிக்கடி ஏதாவது கோளாறு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறதாம. சில மருந்துகளும், வேறு பல சாமான்களும் வாங்கி யனுப்பும்படி எழுதி யிருந்தாள். பல இடங்களுக்குப் போய் எல்லாவற்றையும் வாங்கி, பார்சல் பண்ணி அனுப்ப இன்று பகல்வரையில் பிடித்தது. நேற்று முதல் உங்களைப் பார்க்காமல் இருந்தது எனக்கும் ஒரு யுகமபோலாய் விட்டது. இப்போது நான் வந்ததிலும் ஒரு பெரிய

விசேஷ மிருக்கிறது. நான் முக்கியான இரண்டு செய்திகள் உங்களுக்குக் கொண்டுவந் திருக்கிறேன்'' என்றார்.

சௌக்கார்:—ரொம்ப ஸந்தோஷம். சொல்லுங்கோ, கேக்கலாம்.

கலியாணம்:—இங்கே வேறே யாரும் இல்லையே? நாம் பேசவேண்டிய விஷயம் நிரம்பவும் இரகஸியமானது. அது வேறு எவருடைய காதிலும் படக்கூடாது.

சௌக்கார்:—இங்கே ஆர் இருக்காங்கோ. நாம்ப இன்னம் குமாஸ்தாகூட நேமிக்கல்லெ. நாம்ப ஒருத்தர்; நமப சமயக்காரன் ஒருத்தன். ரெண்டே பேர். சமயக்காரன் கீளே சமய ரூம்புலெ இருக்கருங்கோ. நாம்பொ பேசறது ஆருக்கும் கேக்காதுங்கொ.

கலியாணம்:—சில தினங்களுக்கு முன் இந்தக் கடையில் நடந்த திருட்டு சம்பந்தமாய் பக்கத்து வீட்டு வக்கீல் நாராயண ஐயர், அவருடைய தம்பி, வேலைக்காரன் ஆகிய மூன்று பேர்களையும் ரிமாண்டில் வைத்திருந்தார்களா? அவர்களை இன்றைய தினம் ஜாமீனில் விட்டுவிட்டார்கள்.

சௌக்கார்:—அப்படியானு, வக்கீல் ஐயாவும் அவுங்க தம்பியும், வேலைக்காரனும், அவுங்க வூட்டுக்கு வந்திருப்பாங்கொ?

கலியாணம்:—ஓ, வந்துவிட்டார்கள்.

சௌக்கார்:—இந்த வக்கீல் ஐயா உங்கள்கி சிநேகிதகாரருன்னு நீங்கொ சொன்னுங்களே; போய்ப் பார்க்க வாணுமா?

கலியாணம:—நான் இப்போது அவரைப் பார்த்துவிட்டுத்தான் இங்கே வந்தேன். என் சிலை ஒன்று அந்தத் திருட்டில் சம்பந்தப்பட்டிருக்கிற தாகையால், ஒரு வேளை நானும் அவர்மேல் சம்சயம் கொண்டிருப்பதாக

அவர் நினைத்துக்கொள்வது சகஜமல்லவா. ஆகையால், நான் போய், அவரைப் போலீஸார் விட்டதைப்பற்றி எனக்கு ஆயாசமே இல்லையென்று உபசார வார்த்தை சொல்லிவிட்டு வந்தேன்.

சௌக்கார்:—அப்பிடியானு, அவருக்குத் தெரியாமெ, அவுரு வூட்டு வளியா ஜாமானெ எப்பிடிக் கொண்டு, போனுங்கொ? அவுரு அப்ப வூட்டுலெ இல்லாமெ எங்கெ போனுரு? அவுரு தம்பியும் வேலெக்காரனும் கதவெத் தாப்பாப் போட்டுக்கினு பொழுது விடியறவரையிலெ ஏன் தொறக்காமெ இருந்தாங்கொ? இந்த மூனு பேருக்கும் தெரியாமெத் திருட்டுப் போவலேங்கறது மாத்திரம் நிச்சயம்.

கலியாணம்:—இவர்கள் உடந்தையாய் இல்லாவிட்டால், இந்தத் திருட்டு ஒருநாளும் நடந்திருக்காது. அது வடிவரயில் நிச்சயம். ஆனால், சொத்துகள் இப்போது வேறொருவருடைய வசத்தில் இருக்கின்றனவென்று அநுமானிப்பதற்கு எனக்கு ஒரு தகவல் எட்டியிருக்கிறது.

சௌக்கார்:—(வியப்போடு) ஓகோ! அப்படியானு நீங்கொ போலீஸ்காரருக்குந் தெரியாமெத் துப்பு விசாரிக்கறுங்கோ? ஆளு தெரிஞ்சு போனு, சொத்தும் அம்பிட்டுக்கும்?

கலியாணம்:—(சந்தோஷ முகமலர்ச்சி காட்டி) நான் போய்த் துப்பு விசாரிக்கவில்லை. நான் எந்த மூலையைக் கண்டேன். இன்றைய தபாலில் தானாகவே என்னைத் தேடிக்கொண்டு ஒரு கடிதம் எனக்கு வந்திருக்கிறது. இதோ இருக்கிறது அந்தக் கடிதம். நீங்களே படியுங்கள் —என்று கூறி சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தையெடுத்து சௌக்காரிடம் கொடுத்தார்.

சௌக்கார்:—நம்புளுக்கித் தமுள் படிக்கத் தெரியாதுங்கொ. நீங்களே படியுங்கொ. கேக்கலாம்—என்றார்.

உடனே கலியாணம் அந்தக் கடிதத்தைப் பிரித்து அடியில் வருமாறு படித்தார்:—

"இந்த ஒரு மாத காலத்திற்குள் களவாடப்பட்ட அன்னிபெஸன்டின் மூன்று சிலைகளும், மோஹன்மல் சௌக்காருடைய வைரங்கள், நகைகள் முதலிய எல்லா சொத்துகளும் இப்போது என் வசத்திலிருக்கின்றன.

ஒரு முக்கியமான காரணத்தை முன்னிட்டு ஷை சொத்துகள் யாவும் அபகரிக்கப் பட்டனவானாலும், அவைகளை நாங்கள் உபயோகப் படுத்திக்கொள்ள விரும்பவில்லை. முக்கியமாய் அன்னிபெஸன்டின் சிலைகளை நாங்கள் வைத்து உபயோகிப்பதும அநுசிதமானது; அவைகளை விற்பதும் அபாயகரமானது. அவைகளை அழித்துவிடுவது சுலபமான காரியமானாலும், பெரிய பொருட்செலவின்மேல் தயாரிக்கப்பட்ட ஷை சிலைகளை அழித்து வீணாக்குவதற்கும் எங்கள் மனம இடந்தரவில்லை.

ஆனல் சௌக்காருடைய வைரங்கள், நகைகள் முதலியவற்றை விற்பது சுலபமான காரியமானாலும், சந்தேகத்திற்கு இடமின்றி அவைகளை விற்கவேண்டுமானல், ஒவ்வொரு நகையாகப் பல இடங்களில் விற்க வேண்டும். 25 லக்ஷம் ரூபாய் பெறத்தக்க ஏராளமான நகைகளை விற்பதற்குப் பல மாதகாலம் பிடிக்கும். அல்லது, அவைகளை சென்னைப்பட்டணம் முதலிய இடங்களில் மொத்தமாய் விற்க முயன்றால் மொத்தத் தொகையில் கால்பாகம் தேறுவதும் பிரயாசை. 25 லக்ஷம் ரூபாய் பெறத்தக்க அருமையான பொருள்களை அநியாய விலைக்கு விற்பதை விட அவைகளை அவற்றின் சொந்தக்காரரிடத்தில் கொடுத்துவிட்டால், அவர்கள் சந்தோஷமடைவதோடு, அவைகளுக்காக மனதார தகுந்த சன்மானம் கொடுப்பார்கள்.

நாங்கள் இது விஷயத்தில் பழைய சௌக்காரிடம் நேரில் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள விரும்ப

வில்லை. இப்போது புதியதாய் வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கும் ஸோஹன்மல் சௌக்கார் என்பவரும், நீங்களும் அன்னியோன்னிய நேசர்களா யிருப்பதால், அவர் மூலம் இந்த வியாபாரத்தை நீங்கள் பேசி முடிக்கும் பட்சத்தில், சௌக்காருடைய கடையிலிருந்து களவாடப்பட்ட சொத்துகள் யாவற்றையும் நான் அவருக்குக் கொடுத்து விடுகிறேன். அவர் எனக்கு ஐந்து லக்ஷம் ரூபாய் ரொக்கமாகக் கொடுத்துவிடவேண்டும். அது நோட்டாகவோ [illegible]கவோ', இருப்பது கூடாது; ரூபாயாகவோ சவரனாகவோ இருக்கலாம்.

இதற்கு சௌக்கார் ஒப்புக்கொண்டால், நீங்கள் 'சம்மதம்' என்று காகிதத்தில் எழுதி ஓர் உறைக்குள் போட்டு ஒட்டி மேல் விலாசமில்லாமல் அதை ஆற்றங்கரைப் பாலத்திற்குத் தெற்கில் இருக்கும் அரசமரத்தின் அடியில் உள்ள நாகச்சிலைக்கு அடியில் பின்புறத்தில் வெளியில் தெரியாமல் சொருகி வைக்கவும், அது என்னிடம் உடனே வந்து சேரும். நாளையதினம் இரவு சுமார் 10-30-மணிக்கு உங்களுடைய வீட்டின் வாசல் திண்ணையின் மேல் உங்களுடைய சிலைப்பெட்டி வந்து உட்கார்ந்திருக்கும்.

அதை நீங்கள் ஆள்களின் உதவியைக்கொண்டு இரகஸியமாக சௌக்காருடைய வீட்டில் கொண்டு போய் வைத்துவிட்டு வந்துவிடுங்கள். பெட்டி விசை வைத்த பெட்டி என்பது உங்களுக்குத் தெரியும். அதைத் திறக்கும் விசை எங்கே இருக்கிற தென்பதும் உங்களுக்குத் தெரியும. நீங்கள் நேரில் போக பயந்து, ஆள்களின் மூலம் பெட்டியை அனுப்பலாம். அதற்காக இரவு 12 மணிக்கு பெட்டி தானே திறந்துகொள்ளும்படி அதன் விசையை 12-மணியில் திருப்பிவைத்தனுப்புகிறேன். நீங்கள் நேரில் போனால் அதை எப்போது வேண்டுமானாலும் திறக்கலாம். நீங்கள் போகாவிட்டால், அது தானாகவே சரியாக 12-மணிக்குத் திறந்துகொள்ளும். மற்றவருக்கு அதை திறக்க வழி தெரியாது.

8

பெட்டி திறந்துகொண்டவுடன் அதற்குள் $12\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் பெறுமானமுடைய நகைகள் இருப்பதை ஸௌக்கார் பிரத்தியக்ஷமாகக் காண்பார். ஸௌக்கார் நகைகளைப் பார்த்துத் திருப்தி செய்துகொண்டு 5 லக்ஷம் ரூபாயையும் மறுநாள் உங்களிடம் கொடுக்கட்டும். அதை நான் ஓர் ஆளை அனுப்பிப் பெற்றுக்கொள்கிறேன். அன்றைய தினம் இரவில், இன்னொரு $12\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் பெறுமான நகைகளும், உங்கள் சிலைகள் இரண்டும் உங்களுடைய வீட்டிற்கு வந்து சேரும். நகைகளை நீங்கள் ஸௌக்காரிடம் சேர்த்துவிடுங்கள். சிலைகளை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். சாஸ்திரியாருடைய சிலையும் அவருடைய சங்கத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

ஆற்றங்கரையில் நான் கடிதத்தை எடுக்கும்போதோ, பெட்டியை உங்கள் வீட்டில் வைக்கும்போதோ, உங்களிடம் பணத்தை என்னுடைய ஆள் பெறும்போதோ ஆள்களைக்கொண்டோ, போலீஸாரைக்கொண்டோ என்னையோ, என்னுடைய ஆளையோ பிடிக்க முயற்சித்தால் உங்கள் முயற்சி பலியாது. உங்கள் உயிரும், ஸௌக்காருடைய உயிரும் எமனுலகிற்குப் போய்விட்டனவென்றே நீங்கள் நிச்சயமாய் எண்ணிக்கொள்ளலாம்.

இந்த ஏற்பாட்டின்படி நாணயமாய் நடந்துகொள்ள உங்களிருவருக்கும் விருப்பமானால், கடிதம் எழுதி நான் குறிப்பிட்ட இடத்தில் வைக்கலாம்.

இப்படிக்கு,
அநாமதேயன்.

என்று எழுதியிருந்ததை கலியாணம் படித்துக் காட்டவே, அதைக்கேட்டு ஸௌக்கார் அபாரமான சந்தோஷ முகமலர்ச்சி காட்டி, "ஏது, இவன் திருடனிலும் பரம யோக்கியனுக காணப்படுகிருனே! இவ்வளவு தயாளமாக நடந்து கொள்ளும் திருடன்கூட இந்த உலகத்தில் இருக்கிருஞ! சரி, நான் இதற்கு இணங்குகிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்ருர். (இவர் பேசியதை சரியான தமிழில் எழுதுகிருேம்.)

கலியாணம்:—நான் உங்களுக்கும் அவனுக்கும் நடுவிலிருந்து சொத்தை ஒருவரிடத்திலிருந்து மற்றவரிடம் சேர்க்கவேண்டும். அப்போது போலீஸார் பிடித்கொண்டால் என்பாடு கடினமாகிவிடும். நீங்கள் எனக்கொன்றும் தெரியாதென்று சொல்லும் பட்சத்தில் நான் தப்பமுடியாது.

ஸௌக்கார்:—எனக்காக வேலை செய்யும் உங்களை நான் நடுவில் சந்தியில் விட்டால் என்னைப்போல் பதர் எவனும் இருக்கமாட்டான். உங்களுக்கு அதைரியமாயிருக்கும் பட்சத்தில், நான் என் கைப்பட உங்களுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுக்கிறேன். அதை வைத்துக் கொள்ளுங்கள்; இந்த அநாமதேயக் கடிதத்தை நீங்கள் காட்டியதாகவும், என்னுடைய வேண்டுகோளின் மேல் மத்தியஸ்தமா யிருந்து இதை நடத்துவதாகவும் எழுதித் தருகிறேன்.

கலியாணம்:—சரி, அதுதான் சரி; அப்போதுதான் எனக்கு தைரியம் உண்டாகும். ஸௌக்காருடைய நகைகளை நானல்லவா நடுவில் நின்று உங்களிடம் சேர்க்க வேண்டும். அப்போது போலீஸார் பிடித்துக்கொண்டால் என்பாடு திண்டாட்டமாகிவிடும். அதற்கு உங்கள் கடிதமே சரியான பாதுகாப்பு. ஆமா, இந்த விஷயத்தை நீங்கள் பழைய ஸௌக்காருக்குச் சொல்லவேண்டாமா?

ஸௌக்கார்:—இப்போது நான் இதைச் சொல்ல விரும்பவில்லை. நானே ஐந்து லக்ஷம் ரூபாய் பெறுமான

முடைய பவுன்களைக் கொடுத்து நகைகளை யெல்லாம் வாங்கிக்கொண்டு காரியம் பூர்த்தியாய் முடிந்த பிறகு அவசியமானால், அவரிடம் சொல்லலாம். சரி, இப்போதே கடிதம் எழுதிக் கொடுக்கிறேன். எங்களுடைய பாஷை யில் எழுதினால் அது உங்களுக்குத் தெரியாது. நான் இங்கிலீஷ் படித்திருக்கிறேன். இங்கிலீஷில் எழுதித் தருகிறேன்.

கல்யாணம்:—அதுதான் நல்லது. இங்கிலீஷிலேயே எழுதுங்கள்—என்றார்.

உடனே ஸொஹ்ஹறன் மல் ஸௌக்கார் சற்றுமுன் கூறியபடி ஒரு கடிதம் எழுதி கலியாணத்தினிடம் கொடுக்க, அவர் அதைப் பெற்றுக்கொண்டார் ஸௌக் கார் அநாமதேயக் கடிதத்தை வாங்கி அதைப் பத்திர மாய் தம்மிடம் வைத்துக்கொண்டார். பிறகு கலியாண மும் செலவு பெற்றுக்கொண்டு எழுந்துபோய்ச் சேர்ந் தார்.

5

ஸவரன் காலனுவானுல், ஸௌக்கார் என்னவானுர்?

மறு நாளிரவில் ஸொஹ்றஹன் மல் ஸௌக்காரும் அவருடைய சமயற்காரரும் தங்களுடைய இராப் போஜனத்தை மாலையிலேயே முடித்துக்கொண்டனர். ஸௌக்கார் பெட்டியின் வருகையை எதிர்பார்த்து தெருவீதிக் கதவிற்கு அடுத்தாற்போலிருந்த நடைத்திண்ணையில் காத்திருந்தார். வழக்கம்போல நான்கு ஆள்கள் திண்ணையிலிருந்தனர். மூன்ருவது வீட்டிலிருந்து எவரேனும் ஒரு பெட்டியைக் கொணர்ந்தால், எவ்வித ஆட்சேபனையும் கூச்சலும் செய்யாமல் விட்டுவிடும்படி ஸௌக்கார் அவர்களிடம் சொல்லி திட்டப்படுத்திவிட்டு, கதவைத் தாளிடாமல் வெறுமையாக மூடிவைத்துவிட்டு உள்புறத்தில் ஆவலோடு காத்திருந்தார்.

கடிகாரத்தில் மணி பதினென்றடித்தபோது, திண்ணையிலிருந்த ஆள்கள் மெல்ல கதவைச் சிறிது திறந்து, "பெட்டி வருகிறது" என்றுகூற, அதைக்கேட்ட ஸௌக்கார் ஓசையின்றி கதவைத்திறந்து வைத்துவிட்டு கதவின் மறைவில் நின்ருர்.

அடுத்த நிமிஷம் நான்கு மனிதர்கள் ஒரு பெட்டியை உள்ளே கொண்டுவர, சௌக்கார், மேலே கொண்டு போங்கள்" என்று கூறியபடி கதவைத் தாளிடாமல் அரைப்பங்கு மூடி வைத்துவிட்டு, பெட்டியை எடுத்துச் சென்றவர்களுக்குப் பின்னுகவே நடந்து மேல் மாடத்திற்குச் சென்ருர்.

இருளில் ஆள்கள் இடரி விழுந்தனராதலால், ஸௌக்கார் ஒரு மின்சார விளக்கைக் கொளுத்தினுர். நான்கு ஆட்கள் மாத்திரம் பெட்டியோடு காணப்பட்

டனரே யன்றி, கலியாணம் காணப்படவில்லை. உடனே ஸௌக்கார், "அந்த ஐயா வரவில்லையா?" என்றார்.

ஆள்களில் ஒருவன், "இன்று சாயங்காலம் அவ ருடைய காலில் தேள் கொட்டிவிட்டதாம். அப்போதே உங்களுக்குச் செய்தி சொல்லியனுப்ப யாரும் இல்லையாம். இப்போது நோவு கொஞ்சம் குறைவா யிருக்கிறதாம். காலையில் வந்து பார்க்கிறேன் என்று சொல்லச் சொன் னார்கள்" என்றான்.

அதைக் கேட்ட ஸௌக்கார் தமது அநுதாபத்தைத் தெரிவிக்கச் சொல்லியபடி, பெட்டியை ஸவரன் இருந்த அறையில் வைக்கச் செய்ய, ஆள்கள் அப்படியே வைத்துவிட்டு, அவரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு வெளியில் சென்றனர். ஸௌக்கார் கீழே சென்று வீதிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு மறுபடியும் மேலே வந்து சேர்ந்தார்.

அதுவரையில் மறைவில் இருந்து அவருடைய சம யற்காரன் வெளியில் வந்தான். அப்போது ஸௌக்கார், "மணி பதினொன்றாகிறதே, இன்னம் நீ படுத்துத் தூங்க வில்லையா?" என்றார்.

சமயற்காரன், "எஜமான் பாலைச்சாப்பிடாமல் மறந்து விட்டீர்களே. அதைக் கொண்டு வந்திருக் கிறேன்" என்றான்.

ஸௌக்கார்:—எனக்கு வயிறு மந்தமா யிருக்கிறது. பாலைத் தோய்த்துவிடு. எனக்குப் பால் தேவையில்லை. நீ எங்கே படுத்துக்கொள்ளப் போகிறாய்?

சமையற்காரன்:—நான் வழக்கப்படி கீழே சமைய லறைக்குள் படுத்துக்கொள்ளப் போகிறேன்.

ஸௌக்கார்:—சரி, போ; எனக்குக் கொஞ்சம் அலு வலிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு நான் இங்கேயே படுத்துக்கொள்ளுகிறேன்—என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந்தது. இருவரும் பிரிந்து சென்றனர். ஸௌக்கார் கூடத்தில் மெத்தைமேல் தலையணை முதலியற்றைத் தட்டிப்போட்ட ஓசை கேட்டது. ஹாலின் விளக்கு அணைக்கப்பட்டுப் போயிற்று. ஸவரன் இருந்த அறையில் மின்சார விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் வெளிச்சம் ஹாலிலும் சிறிது மங்கலாகத் தெரிந்து, அங்கு ஸௌக்கார் படுத்திருப்பது போன்ற வடிவத்தைத் தோற்றுவித்தது.

அப்போது மணி பதினென்றுக்கு மேல் ஆகிவிட்டதாகையால், ஊரோசை யடங்கிவிட்டது. மணி பதினென்றே முக்கால் ஆன சமயத்தில் சில போலீஸார் ரஸ்தாவில், ஒரு பர்லாங்கிற்கு அப்பால், 'உஷார், உஷார்' என்று கூச்சலிட்ட ஓசை கேட்டது.

அதன் பிறகு கால்மணி நேரத்தில் அவர்கள் ஸௌக்காரின் வீட்டுத் திண்ணையை அடைந்து கதவை இடித்து, 'உஷார், உஷார்' என்று கூச்சலிட்டதன்றி, அங்கு படுத்திருந்த நான்கு காவல்காரர்களைத் தட்டி எழுப்பினர். அவர்கள் வழக்கப்படி ஆழ்ந்த நித்திரையிலிருந்து திடுக்கிட்டு எழுந்தனர். அங்கு வந்திருந்த ஜெவான்களில் ஒருவன் சைகை காட்டி அவர்களை அருகில் அழைத்து, "அடேய் இன்றைய தினம் இரவில் திருடர்கள் வந்து இந்தக் கடையில் இருக்கும் சொத்துகளை எடுத்துக்கொண்டு போக ஏற்பாடு செய்திருப்பதாக எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது. இன்று ஒரு பெட்டி இங்கே வந்ததா?" என்றுன்.

ஓர் ஆள், "வந்தது. உள்ளே கொண்டுபோய் வைத்திருக்கிருர்கள்" என்றுன்.

ஜெவான் ஸௌக்காருடைய சொத்துக்களையும். ஸௌக்காரையும், அந்தப் பெட்டியையும் நாம் போலீஸ் கச்சேரிக்குக் கொண்டுபோய் விடவேண்டும். தூங்க வேண்டாம். இதோ வண்டி வரப்போகிறது" என்றுன்.

அதைக்கேட்ட காவல்காரர்கள் நால்வரும் பெருத்த திகில்கொண்டு நடுநடுங்கி நின்றனர். அவர்களுடைய உடம்புகள் வியர்த்து வெலவெலத்துப் போயின. ஸௌக்காருடைய சாமான்களையும் அவரையும் எப்பாடு பட்டாகிலும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள் படபடத்து நின்றனர். அந்தச் சமயத்தில் அந்தக் கட்டிடத்தின் வாசலில் ஒரு மோட்டார் லாரி வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு போலீஸ்காரர்கள் கீழே குதித்து வந்து, ஸௌக்கார் கதவைத் திறக்கவில்லையா?'' என்றனர்.

முதலில் வந்த ஜெவான்களில் ஒருவன், “இன்னம் திறக்கவில்லை. கம்மென்று இருங்கள்'' என்றான். அதன் பிறகு அங்கு நிசப்தம் குடிகொண்டிருந்தது. அங்கு விளக்குகளே இல்லையாதலால் இருளில் மனிதரிருந்ததோ, வண்டி நின்றதோ எவருக்கும் தெரியவில்லை.

வீட்டின் திண்ணையில் நிலைமை அங்ஙனமிருக்க, மேன்மாடத்தில் ஸௌக்காருடைய ஸவரன் இருந்த அறையில் என்ன நிகழ்ந்ததென்பதை இனி நாம் கவனிப்போம். அங்கு விளக்கு எரிந்து கொண்டிருந்ததென்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோமல்லவா! ஸௌக்கார் வேண்டுமென்றே இன்றைய தினம் கடிகாரத்தின் முள்களை 15 நிமிஷம் முன்னால் தள்ளி வைத்திருந்தாராதலால், வீதியில் போலீஸார் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திற்கு அப்பால் வந்தபோதே மேன்மாடத்திலிருந்த கடிகாரம் கிண்கிண்ணென்று பன்னிரண்டு அடித்தது. அது ஓய்ந்தவுடன் அங்கிருந்த பெட்டியில் 'கிளிக்' என்று ஒரு விசை திரும்பிய ஓசையுண்டாயிற்று. உடனே அதன் மேல்மூடி தானாகவே நகர்ந்து பக்கத்தில் தொங்கியது. பெட்டியின் உட்புறத்தில் ஏராளமான விசைகள் காணப்பட்டனவேயன்றி, வைர நகைகள் முதலிய சொத்துகள் காணப்படவில்லை. அவ்வாறு திறந்துகொண்ட பிறகு, சுமார் ஐந்து நிமிஷ காலம் எதுவும் நடக்கவில்லை. ஸௌக்காரும் எழுந்து வர

வில்லை. அப்போது பெட்டியில் இன்னொரு விசை 'கிளிக்' என்றது. உடனே பொறித் தட்டும் நேரத்தின் அதன் மேல் பாகத்திலிருந்த அந்தஸ்து மறைய, உள்ளே இருந்து குபீரென்று ஒரு முரட்டு மனிதர் விசையாக எழுந்து நின்றார். அவருடைய முகம் கருப்பு முக மூடியால் மறைக்கப்பட் டிருந்தது. கண்களுக்கு மாத்திரம் துளைகள் விடப்பட்டிருந்தன. அவருடைய வலது கையில் ஒரு பட்டாக் கத்தியும், இடது கையில் ஒரு ரிவால்வரும் இருந்தன.

அவர் பம்பரம்போல் மிகச் சுறு சுறுப்பாகச் சுழன்று நான்கு பக்கங்களிலும் திரும்பிப் பார்த்து அங்கு எவரும் இல்லை என்று நிச்சயித்துக் கொண்டார். அவருடைய பார்வை ஹாலை நோக்கிச் சென்றது.

அங்கு மனிதர் படுத்திருப்பதுபோன்ற வடிவம் காணப்படவே, ஸௌக்கார் படுத்துத் தூங்குவதாக அவர் நிச்சயப்படுத்திக் கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, படுத்திருந்த மனித வடிவத்தண்டை சென்று. தமது வலக் கரத்திலிருந்த பட்டாக்கத்தியை உயர்த்திக் குனிந்து அந்த வடிவத்தின் கழுத்தைப் பார்த்து பல மாக ஒரு வெட்டுப் போடவே, அதே சமயத்தில், ஓசை செய்யாமல், அவருக்குப் பின்னல் வந்த இன்னொரு மனிதர் ஒரு மூங்கில் தடியால், முன்னலிருந்தவருடைய மண்டையின்மேல் அடிக்கவே, அவர் பொறிக்கலக்க மடைந்து, படுத்திருந்த வடிவத்தின் மீது வீழ்ந்து, மூர்ச்சை யடைந்து பிணம்போ லானர். அவருடைய கைகளிலிருந்த கத்தி துப்பாக்கிக ளெல்லாம் நழுவி தூரப்போய் விழுந்தன.

முதலில் கீழே காணப்பட்ட வடிவம் பொய் வடிவம், உண்மையில் ஸௌக்கார் அங்கு படுத்திருக்கவில்லை. நீளமான தலையணையைக் கொண்டும், துணிகளைக் கொண்டும் மனிதர் போலச் செய்து, அதன் மேல் ஒரு சால்வையைப் போர்த்தியிருந்தா ராகையால், பெட்டிக் குள்ளிருந்து வந்த மனிதர் கத்தியால் வெட்டியதால்,

கழுத்துப் பக்கத்தி லிருந்த துணிச்சுருளே அப்பால் நகர்ந்து போயிற்று. பெட்டிக்குள்ளிருந்து அவ்வாறு வெட்டிய மனிதர் அடி பெற்று வீழ்ந்தவுடன், அவரை அடித்தவரான ஸௌக்காரின் சமயற்காரர் அங்கிருந்த பொய் வடிவத்தைக் கலைத்துவிட்டு, ஸ்மரணை தப்பிக் கிடந்த மனிதரை அங்கே இழுத்துப் போட்டு, தங்கச் சங்கிலி தங்கப் பத்தான்களோடு கூடிய ஸௌக்காரின் சட்டையை அவருடைய உடம்பில் மாட்டிவிட்டு, தலைப் பக்கத்தில் மார்வாடியின் ரோஜா நிறத் தலைப்பாகையை வைத்து நெற்றியில் குங்குமத்தினல் நாமம் தீட்டி, மேலே படாடோபமான ஒரு சால்வையை போர்த்திவிட்டார். அந்த வேலை சுமார் பத்து நிமிஷ காலத்தில் நிறைவேறியது.

அவருடைய கருப்பு முகமூடியை சமயற்காரர் எடுத்துத் தமது முகத்தில் அணிந்துகொண்டு, தடதட வென்று கீழே இறங்கி வீதிப்பக்கம் போய்க் கதவின் தாளை நீக்கிக் கதவைத் திறந்துவைத்து, "வாருங்கள்; சீக்கிரம் ஆகட்டும். பெட்டியும், ஸவரன் மூட்டைகளும் ஐந்தே நிமஷத்தில் கீழே வரவேண்டும். இந்த ஆள்களையும் அழைத்துக்கொண்டு வாருங்கள். விளக்குகளைக் கொளுத்த வேண்டாம" என்று தணிவான குரலில் அடையாளம் தெரியாதபடி கூற, நான்கு ஜெவான்களும் நான்கு ஆள்களும் விரைவாக உள்ளே பாய்ந்தனர். அப்போது சமயற்காரர் தமது தலையை நிமிர்த்தாமல் கதவிற்குப் பின்னல் நகர்ந்து கொண்டார். அவர் மறுபடி மேலே போய் விட்டதாக எல்லோரும் நினைத்துக் கொண்டனர்.

வீட்டு மனிதர்களும் மேல்மாடத்திற்குச் சென்று விட்டனர் என்பதைக் கண்டவுடன், சமயற்காரர் விரைவாக வெளியில் போய், ரஸ்தாவின் ஓரத்தில் ஒன்றுக்குப் போகிறவர்போல் நடித்து, மோட்டார் லாரியின் அடியில் போய், அங்கிருந்த ஆயுதப் பெட்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

மேலே சென்ற ஜெவான்கள், அப்போது மூடப் பட்டுப் போயிருந்த ஏழடிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய், மோட்டார் லாரியில் வைத்து விட்டு வரும்படி காவல்காரர்களை ஏவ, அவர்கள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினர். நான்கு ஜெவான் களும், ஸவரன் பைகள் அடுக்கப் பட்டிருந்த இடத்தை அடைந்து தலைக்கு இரண்டு பைகளாய்த் தூக்கிக் கொண்டு கீழே ஓடினர். பெட்டியும் மூட்டைகளும் லாரி யில் வைக்கப் பட்டவுடன், ஒரு ஜெவான் வெளியில் நின்ருன். மற்ற மனிதர்களும் பன்முறை மேலே ஏறி யேறிச் சென்று, ஸவரன் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்து லாரியில் நிரப்பினர். ஒவ்வொரு பையிலும் 1000 ஸவரன்கள் வீதம் வைக்கப் பட்டிருந்த தனல் நூறு மூட்டைகள் இருந்தன. அத்தனை ஆட்க ளும் இறகுகளின்றிப் பறந்தனராதலால், சுமார் 15-நிமிஷ காலத்தில் லட்சம் பவுன்களடங்கிய நூறு பைக ளும் லாரிக்கு வந்து சேர்ந்தன.

ஜெவான்கள் நால்வரும லாரியில் ஏறிக் கொண்ட னர். ஒருவன் ஆள்களைப் பார்த்து, "கதவை வெளிப்பக் கத்தில் பூட்டிக் கொண்டு திண்ணையில் ஜாக்கிரதையாக இருங்கள்; நாங்கள் லாரியில் இன்னொரு நடை வருகி ருேம். வந்து ஸௌக்காரையும் இன்னம் மிச்ச மிருக்கும் சொத்துக்களையும் உங்களையும் கொண்டு போகிருேம்" என்று கூறி முடிக்க, உடனே லாரிப் புறப்பட்டது. ஆள்கள் உள்ளே இருந்த ஒரு பூட்டை எடுத்து வந்து முன் கதவை மூடிப் பூட்டிவிட்டு திண்ணையிலேயே ஜாக் கிரதையாக உட்கார்ந்து கொண்டனர்.

அங்கிருந்து புறப்பட்ட மோட்டார் லாரி விசையா கச் சென்று பல வீதிகளைக் கடந்து, ஒரு பங்களாவிற் குள் நுழைந்து, உள்ளே இருந்த ஒருகிடங்கிற்குள்போய் நின்றது. அவ்விடத்தில் ஒரு மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அங்கு ஒரு மனிதர் சட்டை, நிஜார் ஆகிய உடுப்புகளை அணிந்து கொண்டு நின்ருர்.

அவர் ஜெவான்களில் முக்கியஸ்தனைப் பார்த்து, "என்ன கந்தசாமி, ஸவரன் பைகள் எல்லாம் சரியாய் வந்து சேர்ந்தனவா?" என்றார்.

கந்தசாமி:— ஸௌக்கார் வீட்டு மூலையில் அடுக்கப் பட்டிருந்த பைகளை யெல்லாம் கொண்டு வந்து விட்டேன்.

நிஜார்க்காரர்:— கலியாணம் எங்கே?

கந்தசாமி:—பெட்டிக்குள் பள்ளி கொண்டிருக்கிறார் போலிருக்கிறது?

நிஜார்க்காரர்:— சரி, மூன்றாவது வீட்டிலிருந்து பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய் வைத்த நீங்களே போலீஸ்காரர்கள்போல் வேஷம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று ஆள்கள் சந்தேகங் கொள்ளவில்லையா?

கந்தசாமி:—இல்லை எங்களை நிஜமான லோந்துக் காரர்கள் என்றே நினைத்துக் கொண்டனர். உடுப்புக் கள் போலீஸ் உடுப்பாயிருக்கும் போது, யாருக்குத்தான் சந்தேக முண்டாகும்.

நிஜார்க்காரர்:— ஸௌக்காரை வெட்டிப் போட்டு விடச் சொன்னதுபோல தம்பி செய்து விட்டானல்லவா?

கந்தசாமி:— நாங்கள் போன போது ஸௌக்கார் ஹாலில் படுக்க வைக்கப் பட்டு சால்வையால் மூடப் பெற்றிருந்தார். முகம் பிணத்தின் முகம் போல்தான் இருந்தது அவன் விழித்துக் கொண்டிருந்தால், எழுந் திருக்காமல் படுத்திருப்பானா?

நிஜார்க்காரர்:—சரி; எல்லா வேலையும் ஒழுங்காகவே முடிந்து விட்டது. இன்றைக்கு தெற்குராஜவீதிக்கு நியமிக்கப் பட்ட இரண்டு லோந்துக் காரர்களையும் நான் கூப்பிட்டு அவர்களை வேறோரிடத்திற்கு அனுப்பி விட்டேன். ஆகையால் போலீஸார் யாரும் இன்றிரவு அந்த வழியாய்ப் போகவே மாட்டார்கள். போலீஸ் அசிஸ்

டெண்ட் சூபரின்டென்டே திருட ஆரம்பித்தால், அதில் எத்தனையோ அநுகூலங்கள் இருக்கின்றன. பெட்டியை யும் பைகளையும் இறக்குங்கள். பெட்டியிலிருந்து கலியா ணம் வெளியில் வரட்டும்—என்ருர்.

உடனே நான்கு போலி ஜெவான்களும், பெட் டியையும் ஸவரன் மூட்டைகளையும் சுமார் பத்து நிமிஷ காலத்தில் கீழே இறக்கி வைத்தனர். மோட்டார் லாரி அவர்களுடைய சொந்த வண்டியாதலால், அது பக்கத்தி லிருந்த ஒரு லாயத்தில் கொண்டுபோய் விடப்பட, லாயத் தின் கதவு பூட்டப் பட்டது. அதன் கீழ் ஆயுதப் பெட்டி யில் உட்கார்ந்திருந்த ஸௌக்காரருடைய சமயல்காரர் வண்டி பங்களாவிற்குள் நுழைந்தபோதே மெதுவாகக் கீழே குதித்து ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்து கொண் டார்.

ஸவரன் மூட்டைகளைக் கீழே இறக்கி வைத்த வுடன் கந்தசாமி நிஜார்காரரை நோக்கி, “இவைகளை எங்கே வைக்கிறது?” என்ருன்.

நிஜார்க்காரர், “ஏன் சந்தேகமென்ன? பூமிக்குள் இருக்கும் அறைக்குள் கொண்டு போய்வையுங்கள். அது தான் பந்தோபஸ்தான இடம்; பழைய ஸௌக்காருடைய சொத்துகளை வைத்தீர்களே, அதற்குப் பக்கத்தில் வையுங்கள். இடம தாராளமாயிருக்கிறது” என்ருர்.

உடனே கந்தசாமி ஒரு மூலையில் தரையோடு தரை யாயிருந்த ஓர் இரும்புக் கதவைத் தூக்க அதன் கீழ்படி கள் காணப்பட்டன. கந்தசாமியைத் தவிர மற்ற போலி ஜெவான்கள் ஸவரன் மூட்டைகளை ஒவ் வொன்ருய் எடுத்துக் கொண்டு படிகளின் வழியாக இறக்கி சுரங்கத் திற்குள் கொண்டு போய் வைத்து விட்டு வந்தனர்.

அப்போது நிஜார்க்காரர் கந்தசாமியைப் பார்த்து, “என்ன, கலியாணம் பெட்டியிலிருந்து வெளியில் வர வில்லையே! ஒருவேளை அவன் பெட்டிக்குள் போக வில் லையா?” என்று கூறி, பெட்டியினருகில் சென்று,

அதை மெதுவாகத் தட்டி, 'தம்பீ, கலியாணம், கலியாணம், பெட்டி நம்முடைய பங்களாவுக்கு வந்து விட்டது; நீ வெளியில் வரலாம்" என்று கூறினர். அந்தப் பெட்டியில் பல இடங்களில் துவாரங்களும், விசைகளும் காணப்பட்டன. அவர் ஒரு துவாரத்தில் தமது வாயை வைத்துக் கொண்டு அவ்வாறு கூறினர்.

கலியாணம் வெளியில் வரவுமில்லை; பெட்டியும் திறக்கப்படாமலேயே இருந்தது. அதைக்கண்ட நிஜார்க்காரர், "என்ன கந்தசாமி, ஆள் வெளியில் வரவில்லையே பெட்டிக்குள் அவன் இல்லை போலிருக்கிறதே" என்றார்.

உடனே கந்தசாமி பெட்டியினண்டை போய் அதை அசைத்தும் தூக்கியும் பார்த்து, "காலிப் பெட்டியாயிருந்தால், இவ்வளவு கனம் எங்கிருந்து உண்டாகும். உள்ளே ஆள் இருப்பது தெரிகிறதே! ஒரு வேளை தூங்கிப் போய் விட்டாரோ என்னவோ!" என்றான்.

நிஜார்க்காரர் பெட்டியைத் தூக்கியும் அசைத்தும் பார்த்து விட்டு, "ஆள் இருப்பது போலத்தான் தெரிகிறது. அவன் இவ்வளவு அஜாக்கிரதையாகத் தூங்க மாட்டானே! காற்றை உள்ளே இழுத்து முகத்தில் வீசிக் கொண்டிருக்கும் யந்திரம் கெட்டு போயிருக்குமோ? காற்றில்லாமையால் இறந்துபோ யிருப்பானே? இல்லா விட்டால், அங்கே ஸௌக்காரைக் கொன்றபோது இவனுக்கு ஏதாவது காயம்பட்டிருக்குமோ! பெட்டியை உடைப்போமா?" என்றார்.

கந்தசாமி :—உடைத்தால் விசைகள் கெட்டுப்போம். நமக்கு மறுபடி இந்தமாதிரி பெட்டி கிடைப்பது இலேசான காரியமா? இது அதிர்ஷ்டப் பெட்டியல்லவா? பழைய ஸௌக்கார் வீட்டிற்குள்ளே இருந்த 25 லக்ஷம் ரூபாய் சொத்துக்களைக் கொண்டுவந்த பெட்டியல்லவா இது?

நிஜார்க்காரர்:—அப்போது நீ பெட்டிக்குள் ஒரு நாள் முழுதும் இருந்தாயே! காற்று எப்படி வந்தது? காற்றின் விசையால் கெடுதல் இருப்பதாகத் தெரிந்ததோ?

கந்தசாமி:—அதெல்லாம் தவறு ஒன்றுமில்லை. நாம் வெளியில் இருந்தால் எப்படி முகத்தில் காற்று அடிக்கிறதோ அதுபோலவே காற்று முகத்திலும் உடம்பிலும் மோதுகிறது. இல்லாவிட்டால், நான் எழுந்து வக்கீலின் வீட்டு ஜன்னலை ஒருவனுகவே கன்னக்கோலால் பெயர்த்திருக்க முடியுமா? உள்ளே இருக்கும்போது தாகம் ஏற்பட்டால், குடிப்பதற்கு ஒயின் நிரப்பிய துருத்தி வைக்கப் பட்டிருக்கிறதல்லவா? அதை ஒருவேளை அதிகமாய் இழுத்துவிட்டாரோ என்னவோ! அதனுல் கொஞ்சம் மயக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

நிஜார்க்காரர்:—நீ மயக்கம் என்று சொன்னவுடன் எனக்கு இன்னொரு விஷயம் நினைவிற்கு வருகிறது. நாம் அன்றையதினம் அந்த வக்கீலின் வேலைக்காரனிடம் மயக்கம் உண்டாகும் அபினி திராவகப் புட்டியைக் கொடுத்தோமே; அதை அவன் ஒளித்துவைத்த இடத்திலிருந்து கவனமாய் எடுத்துக்கொண்டாயா?

கந்தசாமி:—நான் அவனிடம் பெரிய அளவு புட்டியைக் கொடுக்கவில்லையே. நாலைந்து துளிகள் காணும்படி ஒரு சிறிய புட்டியில் கொட்டி மூடிக் கொடுத்தேன். அதை அவன் அப்படியே குழம்பில் போட்டுவிட்டானும். வக்கீலும், அவருடைய தம்பியும் பொழுது விடிகிற வரையில் மயங்கிக் கிடந்தார்கள். வக்கீலின்மேல் சந்தேகம் உண்டாகட்டுமென்று நாங்கள் அவரை வண்டியில் வைத்துத் தூக்கிக்கொண்டுபோய் ஊருக்கு வெளியில் ஒரு மரத்தடியில் படுக்கவைத்து விட்டு வந்து விட்டோம்.

நிஜார்க்காரர்:—அந்த விஷயத்தில்தான் உன்னுடைய யுக்தி மூடத்தனமானதாகிவிட்டது. நீங்கள் வக்கீலையும் சாமான்களையும் தூக்கிக்கொண்டு போன பிறகு கதவை வேலைக்காரன் மூடித் தாளிட்டது தவறு. கதவு

திறந்தே கிடந்திருந்தால், அது விஷயத்தை அதிகக் குளறுபடையாக்கி யிருக்கும். இப்போது வக்கீலும், அவருடைய தமபியும், வேலைக்காரன்மேல் சந்தேகங் கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

கந்தசாமி :—அவர்களுடைய சந்தேகம் அவனை என்ன செய்யப்போகிறது! அவர்கள் அவனை எப்போது போகச் சொல்லுவார்கள் என்று அவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் வேலையை விட்டால் சந்தேகம் உண்டாகிவிடும். அவர்கள் போகச் சொன்னால், உடனே அவன் விலகிக்கொள்ளப் போகிறான். நாம் கொடுத்த நூறு ரூபாயை வைத்துக்கொண்டு அவன் ஒரு காய்கறிக் கடை வைக்கப் போகிறதாக என்னிடம் சொன்னான்—என்றான்.

அப்போது மற்ற மூன்று ஆள்களும் ஸவரன் மூட்டைகளை எடுத்துக் கீழே கொண்டுபோய் வைத்துக் கொண்டே இருந்தனர். கடைசியில் இரண்டு மூட்டைகள் மிச்சமிருந்தபோது அவைகளை கவனித்த நிஜார்க்காரர், "கந்தசாமி, ஒரு மூட்டையை எடுத்துப் பிரி; ஸவரன் எப்படி இருக்கிறதென்று பார்க்கலாம். ஸௌக்கார் காட்டிய ஸவரன்களைப் பார்த்துவிட்டு தம்பி என்னிடம் பிரமாதமாய்ப் புகழ்ந்தான். ஒரு ஸவரன் முப்பது ரூபாய்க்குப் பாண்டிச்சேரியிலிருந்து யாரோ இந்த ஸௌக்காருக்கு அனுப்புகிறானென்றால், அது கலப்படமான பவுனாயிருக்கலாமென்ற சந்தேகம் எனக்கு உண்டாகிறது. ஒரு மூட்டையைப் பிரி" என்றார்.

கந்தசாமி உடனே ஒரு மூட்டையை எடுத்துவந்து மற்றவருக்கெதிரில் வைத்துக்கொண்டு, தனது மடியில் இருந்த ஒரு பேனாக்கத்தியால் அதன் முடிப்பை அறுத்துக் கட்டுகளைப் பிரித்து, கையை உள்ளே விட்டு ஒரு கை அள்ளி நிஜார்க்காரரிடம் நீட்டினான். மின்சார விளக்கு வெளிச்சத்தில் அவைகள் பளபளவென்று மின்னின. அவற்றைக் கையில் வாங்கிப்பார்த்த நிஜார்க்காரர் திடுக்கிட்டு, "ஆ! இதென்ன! எல்லாம் காலணாக்

கள் அல்லவா! இவைகள் ஸவரன்களா!" என்று வியப் போடு மொழிந்தார்.

அதைக் கேட்ட கந்தசாமியும், அப்போது சற்று தூரத்தில் நின்ற மற்ற மூவரும் திடுக்கிட்டு ஆச்சரியத் தைக்காட்டிய முகத்தோடு அங்கே நெருங்கி வந்து, நாண யங்களைத் தலைக்கு நான்கைந்தாய் எடுத்துப் பார்த்து, ஏமாற்றமும் ஆவேசமும் அடைந்தவர்களாய், "ஆம், எல்லாம் காலணுக்களே" என்றனர்.

கந்தசாமி உடனே போய் அந்தப் பையிலிருந்த நாணயங்களையெல்லாம் கீழே கொட்டி எடுத்தெடுத்துப் பார்க்க, எல்லாம் காலணுக்களாகவே இருந்ததன்றி ஒன்று கூட ஸவரனலல.

நிஜார்க்காரர், "இது பெரிய மோசடியாயிருக் கிறதே! பாண்டிச்சேரியான் இந்த ஸௌக்காரை சாமர்த் தியமாய்த்தான் ஏமாற்றி யிருக்கிறன்! ஐம்பது ரூபாய் பெறத்தக்க ஸவரனை முப்பது ரூபாய்க்கு வாங்கிவிட்ட தாக ஸௌக்கார் சந்தோஷப்படுகிறர். பாண்டிச்சேரி யான் காலணுவை முப்பது ரூபாய்க்கு விற்றிருக்கிறன். இதில் யார் சமர்த்தர்?" என்றார்.

கந்தசாமி:—எல்லா மூட்டைகளுமா காலணுக்களாக இருக்கும். ஸௌக்கார் ஒவ்வொரு பையையும் பிரித்துப் பார்க்காமலா வாங்கி யிருப்பார்!

நிஜார்க்காரர்:—சில பைகளைப் பார்த்து, மற்றவை களை நம்பிக்கையின்மேல் வாங்கிக்கொண்டிருக்கலாம்.

கந்தசாமி:—இந்த ஒரு பைதான் இப்படி இருக் கிறதா இன்னும மற்றவைகளும் இப்படியே இருக்கின் றனவா என்று பார்த்துவிடுவது நல்லது. இன்னெரு பையையும் எடுங்கள் — என்றுன்.

ஆள்கள் மிச்சமிருந்த இன்னெரு பையையும் எடுத் துக் கொணர்ந்து வைக்க. கந்தசாமி அதன் முடிச்சையும் அவிழ்த்து, உள்ளே இருந்த நாணயங்களை ஒரு கையால்

அள்ளி வெளியில் வைத்துக்கொண்டு பார்த்து, "சரி; இந்த பையும் காலணாப் பைதான் என்றான்.

சுரங்கத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்ட எல்லா பைகளையும் மேலே கொண்டுவரும்படி நிஜார்க்காரர் உத்தரவு பிறப்பிக்க சுமார் பதினைந்து நிமிஷ காலத்தில் எல்லாப் பைகளும் மேலே வந்துசேர்ந்தன. அவைகள் யாவும் உடனே பிரித்துப் பார்க்கப்பட்டன. எல்லாம் காலணா நாணயங்களாவே இருந்தனவன்றி, ஸவரன் என்பது மாதிரிக்கு ஒன்றுகூடக் காணப்படவில்லை.

எல்லோருக்கும் அந்த விஷயம் பெருத்த மன அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் உண்டாக்கியது. நிஜார்க்காரர், கந்தசாமி ஆகிய இருவரது முகங்களும் வாட்டமடைந்து பெரிதும் கலக்கத்தையும் கவலையையும் காண்பித்தன.

கந்தசாமி :—லட்சம் ஸவரன்களும் ஐம்பது லட்சம் ரூபாய் தேறுமென்று எதிர்பார்த்தோம்; லட்சம் காலணாக்கள் தேறின.

நிஜார்க்காரர்:— அதுவும் ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்குமேல் தேறும். நாம் பட்ட பாட்டுக்குக் கூலி கிடைத்துவிட்டது. நமக்கு நஷ்டம் இல்லை.

கந்தசாமி:—இப்போதுகூட, பாண்டிச்சேரியான் இந்த ஸௌக்காரை ஏமாற்றிவிட்டதாக எண்ணுகிறீர்களா?

நிஜார்க்காரர்:—ஸௌக்கார் நம்மை ஏமாற்றிவிட்டதாக எண்ணவேண்டும்.

கந்தசாமி:—பழைய ஸௌக்காருடைய சொத்துகளில் அரைப்பங்கைப் பெட்டியில் வைத்தனுப்புவதாக எழுதி, கத்தி, துப்பாக்கியோடு நாம் ஓர் எமனை உள்ளே வைத்து அனுப்பி அவனை ஏமாற்றப் பார்த்தோம். அவன் காலணாக்களை மூட்டையாகக் கட்டி வைத்துக் கொண்டு, ஸவரன் மூட்டைகள் என்று நம்மை அதற்கு முன்னரே ஏமாற்றியிருக்கிறான்.

நிஜார்க்காரர்:—என் தம்பிக்கு ஒரு பையிலிருந்து ஸவரன்களைக் காட்டினனே. அது என்ன மாயம்?

கந்தசாமி:—ஏதாவது ஒரு பையில் ஐம்பதறுபது ஸவரன்களை மேலே வைத்திருந்து எடுத்துக் காட்டியிருப்பான்.

நிஜார்க்காரர்:—அப்படியானல், அந்த ஸௌக்காருடைய கருத்து என்ன? காலணவை ஸவரன் என்று விற்றுவிடலா மென்னும் அபிப்பிராயமா யிருக்குமா? மற்றவருக்குக் கண்ணில்லையா?

கந்தசாமி:—அப்படி இராது. தான் பெரிய வியாபாரி என்று படாடோபமாய்க் காட்டி, தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக அவன் அப்படி யெல்லாம் செய்திருக்கலாம். அவனிடம் உண்மையில் அதிக சொத்திருக்காது. சொற்ப முதலை வைத்துக்கொண்டு, பெரிய முதலாளி மாதிரி காட்டிக்கொண்டு வியாபாரத்தை சிறுகச்சிறுக அபிவிருத்தி செய்ய உத்தேசித்திருக்கலாம்.

நிஜார்க்காரர்:—நமக்கு ஐந்து லக்ஷம் கொடுத்து, பழைய ஸௌக்காருடைய சொத்துக்களை வாங்கிக் கொள்ள, அவன் எப்படி ஒப்புக்கொண்டான்?

கந்தசாமி:—நகைகள் அவனுடைய சொந்தக்காரனுடையவை. அவைகளை வாங்கிக்கொண்டு அவன் நம்மை ஏமாற்றிவிடலாமென்று அந்த ஏற்பாட்டிற்கு இணங்கி யிருக்கலாம்.

நிஜார்க்காரர்:—அப்படியானல், அவனை நாம் வெட்டிவிடச் சொன்னது அவனுக்கு சரியான தண்டனைதான. அவன் இறந்தான, அல்லது, மயங்கிக் கிடக்கிருன என்பது நமக்குத் தெரியவேண்டுமே! நல்ல சமயத்தில் தம்பி பெட்டியில் மயங்கிக் கிடக்கிருனே! இந்தப் பெட்டியை அவனே திறந்துகொண்டு வந்தாலன்றி, நாம் திறக்க முடியாதே. நீ இவனைக் கூப்பிட்டுப் பார், வெளியில் வராவிட்டால், பெட்டியை உடைத்தாவது அவனை

வெளியில் எடுப்போம். பைகளை எல்லாம் கீழே கொண்டு போய் வையுங்கள்; வந்த காசிற்கு வட்டமில்லை—என்றார்.

அதைக் கேட்டவுடன் மூன்று ஆட்களும் பைகளை மறுபடி கீழே கொண்டுபோகத் தொடங்கினர். கந்தசாமியும், நிஜார்க்காரரும் பெட்டியண்டை வந்து, உள்ளே இருந்தவரை அழைக்க முயன்றதன்றி, பெட்டியைப் பிடித்து அப்புறம் இப்புறம் அசைத்து உலுக்க வாரம்பித்தனர். அதன்மேல் ஏராளமான துளைகள் இருந்தனவென்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோமல்லவா. அவற்றில் ஒன்றின் வழியாகப் போலீஸ் ஊதுகுழலோசை மிக உரமாக உண்டாயிற்று.

அங்கிருந்தோருக்கு அது புதுமையாயிருந்ததாகையால் எல்லோரும் திடுக்கிட்டு பிரமித்துப் போயினர். யாரோ ஒரு மனிதர் உள்ளே இருந்தாரென்பது நிச்சயப் பட்டதாலும், அவர் கலியாணமா, அல்லது, வேறு எவரேனுமா என்பதும், அவர் ஊதுகுழலை ஊத வேண்டிய காரணம் என்னவென்பதும் அங்கிருந்தோருக்கு நிச்சயப்படவில்லை.

பெட்டிக்குள்ளிருந்து உண்டான ஊதுகுழலோசை சுமார் ஐந்து நிமிஷ காலம், கிருஷ்ண பரமாத்மாவின் சங்க நாதம்போல் முழங்கவே, அதே காலத்தில் அந்த பங்களாவின் பல பாகங்களிலிருந்தும், பல ஊதுகுழல் ஓசை த்வனித்தன,

நிஜார்க்காரர், கந்தசாமி, மூன்று ஆட்கள் ஆகியோர் அதன் கருத்தை யூகித்துக் கொள்ளமாட்டாமல் ஒருவரை யொருவர் பார்த்து நடுநடுங்கி நிற்க, அடுத்த நிமிஷம் சுமார் இருபது போலீஸ்காரர்கள் வந்து குபீரென்று அவர்களை வளைத்துக் கொண்டனர். அவர்களில் போலீஸ் சூபரின்டென்டென்டு ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸர்க்கில் இன்ஸ்பெக்டர், ஸப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமை ஜெவான்கள் ஆகியோர் இருந்தனர்.

போலீஸ் சூபரின்டென்டென்டிற்குப் பக்கத்தில் வந்து நின்றுகொண்டிருந்தவரான, ஸௌக்காரின் சம

யற்காரர், "இவர்களைப் பிடித்துக்கொள்ளுங்கள். பெட்டிக்குள் இருப்பவர் வெளியில் வந்தால், அவருக்கு இவர்களால் அபாயம் நேராமல் இருக்கவேண்டும்" என்ருர்.

உடனே சிலர் அங்கிருந்த ஐவருடைய கைகளையும் இருவர் இருவர் வீதம் பிடித்துக்கொண்டனர். அதுவரையில் மலைப்பில் ஆழ்ந்திருந்த நிஜார்க்காரர் தமது கைகளை உதறிக்கொண்டு, "நான் யார் என்பது தெரியவில்லையா! நான் போலீஸ் அசிஸ்டென்ட் சூப்ரின்டென்டெனட் சுந்தரமல்லவா? ஸௌக்கார் வீட்டில் திருட்டு நடக்கப் போவதாகக் கேள்வியுற்று, நான் சில ஆள்களுடன் போய் அவருடைய பணப்பைகளை எடுத்து வந்து பந்தோபஸ்து செய்கிறேன். நீங்கள் என்னை ஏன் பிடிக்கிறீர்கள்! பெட்டிக்குள் ளிருப்பவருக்கு நாங்கள் ஏன் கெடுதல் செய்கிருேம். உள்ளே இருக்கும் திருடன் வெளியில் வரட்டுமே" என்ருர்.

அதைக் கேட்டு சூபரின்டென்டென்ட் முதலிய போலீஸார் திடுக்கிட்டு அவர் சொன்னது உண்மையாயிருக்கலாமென்று நினைத்தனர். போலீஸ் சூபரின்டென்டென்ட் அங்கு நின்றவர்களைப் பிடித்துக்கொள்ள வேண்டாமென்று உத்தரவிட, எல்லோரும் தம் தம் பிடியை விட்டு விட்டனர். அப்போது சமயற்காரர் பெட்டியண்டை வந்து நின்ருர்.

அதே காலத்தில் பெட்டிக்குள் 'கிளிக்' என்ற ஓர் ஓசை யுண்டாயிற்று. உடனே பெட்டியின் மேல் கதவு திறந்துகொண்டது. அதற்கு உள்ளே இருந்து யார் வரப் போகி ர் என்று பார்க்கவேண்டுமென்று எல்லோரும் வியப்போடு பெட்டியையே பார்த்தனர். அதற்கு ஐந்து நிமிஷ காலத்திற்குப் பிறகு இரண்டாவது கதவு திறந்து கொண்டது ஏழு குழாய் ரிவால்வர் ஒன்றைக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு மனிதர் குபீரென்று கிளம்பி பெட்டியை விட்டு வெளிப்பட்டு ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் பக்கத்தில் போய் நின்று புன்னகையோடு, "நான் சுட்டுவிடுவேனென்று யாரும் பயப்படவேண்டாம். இது

வெறும் மிரட்டல் துப்பாக்கி; உள்ளே தோட்டா இல்லை" என்றார்.

அவரைப் பார்த்த போலீஸ் சூபரின்டென்டென்ட் திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்து, "ஹா! திகம்பர சாமியா ரல்லவா இவர்! யாரோ வென்றல்லவோ நினைத்து விட் டேன்! என்ன ஆச்சரியம் இது! இந்தப் பெட்டிக்குள் இவர் எப்படி வந்தார்?" என்று வியப்போடுகூற, அதைக் கேட்டு ஜில்லா மாஜிஸ்டிரேட் முதலியோர் அனைவரும், "ஹா! இவர்தானா திகம்பர சாமியார்! யாரோ ஒரு பரதேசிபோ லல்லவா இருக்கிறார்!" என்று கூறி ஆர்ப் பரித்தனர்.

உடனே ஜில்லா மாஜிஸ்டிரேட் புன்னகை செய்த படி திகம்பர சாமியாருடைய கைகளைப் பிடித்துக் குலுக்கி, "உங்களைப் பார்த்ததில் என் மனம் அபார மான சந்தோஷம் கொண்டு பொங்குகிறது. நான் இது வரையில் உங்களுடைய அரிய கீர்த்திப் பிரதாபத்தைப் பற்றி நிரம்பவும் கேள்வியுற்றிருக்கிறேன். உங்களை நேரில் பார்க்கும் பாக்கியத்தை ஆவலோடு எதிர்பார்த் திருந்தேன். அது இப்போது வந்து வாய்த்தது" என்று கூறி அன்பாக உபசரித்தார். அதேபோல போலீஸ் சூபரின்டென்டென்டும் செய்ய, இன்ஸ்பெக்டரும், ஸப்- இன்ஸ்பெக்டர்களும் தூர நின்றபடி அவருக்குத் தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்த சுந்தரம், திகம்பர சாமியாரை நோக்கி, "மற்ற அதிகாரி கள் உங்களை வரவேற்றுப் பெருமைப்படுத்தினார். நான் அப்படிச் செய்யாததைப்பற்றி மன்னிக்க வேண்டும். அதற்கு முக்கியமான காரணமிருக்கிறது. உங்களுடைய உண்மையான உள் மர்மத்தை மற்றவர் உள்ளபடி தெரிந்து கொள்ளவில்லை நான் இன்று பிரத்தியக்ஷமா கத் தெரிந்துகொண்டேன், உங்களுடைய சாயம் இன் றைக்குத்தான் வெளுக்கப் போகிறது. இன்றோடு உங்க

ளுடைய புகழுக்கும், பெயருக்கும் சாவுமணி அடித்தாய் விட்டது'' என்ருர்.

அவரது அதீதமான துணிவைக் கண்டு, துடுக்கான சொற்களைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் பெரி தும் வியப்பும் கலகமும் அடைந்து ஸ்தம்பித்து நின்று, மாறி மாறி அவர்கள் இருவரது முகங்களையும் உற்று கவனித்தனர்.

உடனே திகம்பர சாமியார் சந்தோஷத்தால் மலர்ந்த முகத்தோடு, "ஜாதி வண்ணன்கூட அழுக்கு உடைகளைத்தான் வெள்ளையாக்குவான். நீங்கள் என் பெயரையும் புகழையும் வெளுக்க வைப்பேனென்கிறீர் கள். அப்படியானல், உங்களிடம் ஜாதி வண்ணனுடைய திறமையைவிட அதிகமான திறமை இருக்கிறதென்று நீங்கள் சொல்வதுபோ லிருக்கிறது. நான் இந்தப் பெட் டிக்குள் இருந்து வந்தேனே! இதுதான் உங்களுடைய வெள்ளாவிப் பானையோ! இதைத் தூக்கிக்கொண்டு வந் தவர்கள் உங்கள் வாகனங்களோ! எப்படியாவதிருக்கட் டும். எங்கே, நீங்கள் சொன்னபடி தயவுசெய்து வெளுக்க வையுங்கள்; நேரமாகிறது; பெரிய மனிதர்கள் நமக்காகக் காத்திருக்கிருர்கள்'' என்ருர்.

சுந்தரம்:—பழைய சௌக்காருடைய சொத்துகளில் பாதிப் பாகத்தை இதில் வைத்தனுப்புவதாகவும், புதிய சௌக்கார் ஐந்து லக்ஷம் ரூபாய் கொடுத்தனுப்பினல், இன்னொரு பாதியையும், அன்னிபெஸன்டின் சிலைகளை யும் அனுப்புவதாகவும் நீர் புதிய சௌக்காருக்கு அநாம தேயக் கடிதம் எழுதினீரா இல்லையா?

திகம்பர சாமியார்:—தயவு செய்து கடிதத்தைக் காட்டுங்கள்.

சுந்தரம்:—அது புதிய சௌக்காரிட மிருக்கிறது. நகைகளுக்கு பதிலாக நீரே இந்தப் பெட்டிக்குள் இருந்து இரவு பன்னிரண்டு மணிக்கு இதைத் திறந்துகொண்டு

வெளியில் வந்து புதிய சௌக்காரைக் கத்தியால் வெட்டிக் கொல்லவில்லை?

திகம்பர சாமியார்:—அவருடைய பிணத்தை தயவு செய்து காட்டுங்கள்.

சுந்தரம்:—அது இப்போது சௌக்காருடைய கடையில் மாடிக் கூடத்தில் கிடக்கிறது.

திகம்பர சாமியார்:—(பெரிய துரையை நோக்கி) தயவு செய்து உங்கள் ஸப்-இன்ஸ்பெக்டரையும், சில ஜெவான்களையும் சௌக்காரின் கடைக்கனுப்பி, உள்ளே இருக்கிற ஆசாமியை ஜாக்கிரதையாய்க் கொண்டுவரச் செய்யுங்கள். அப்படியே வெளியில் இருக்கும் காவல்காரர்களையும் மூன்றாவது வீட்டிலிருக்கும் கலியாணத்தையும் அழைத்து வரச் சொல்லுங்கள். இந்தப் பங்களாவிலேயே ஒரு மோட்டார் லாரி இருக்கிறது. அதை நீங்கள் உபயோகிக்கலாம்—என்றார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர், சுந்தரத்தின் முகத்தைப் பார்த்தார். சுந்தரம் மிகுந்த கோபங் கொண்டவராய், "ஏது சாமியாருக்கு ஆரூடம் கூடத் தெரியும்போலிருக்கிறதே! அதுவன்றி, என்னுடையதான இந்தப் பங்களாவைத் தம்முடையது போலவே எண்ணி, என் மோட்டார் லாரியைக் கொண்டுபோக அவரே உத்தரவிடுகிறாரே!

திகம்பர சாமியார்:—(விநயமாகப் புன்னகை செய்து) அப்படியா! நிஜந்தானா! இந்தப் பங்களா உங்களுடையதுதானா?

சுந்தரம்:—தடையென்ன! இது என்னுடைய பங்களா அல்லவென்றுகூட நீர் சொல்லுவீர்போலிருக்கிறதே!

திகம்பர சாமியார்:—நான் இல்லையென்றல்லா நினைத்தேன். இந்தப் பங்களாவும், இதிலுள்ள எல்லா

சொத்துகளும் உங்களுடையவை அல்லவென்பதல்லவா என் அபிப்பிராயம்.

சுந்தரம்:—(கோபத்தோடு) அப்படியானல், உம்மை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பவேண்டும். இந்தப் பங்களாவும், இதிலுள்ள எல்லா சொத்துகளும் என்னுடைய அநுபவத்திலிருந்து வருகின்றன. இவைகள் என்னுடையவை அல்லவென்று நீர் அபிப்பிராயப்படுவதென்ருல், நீர்தான் இவைகளை சம்பாதித்து இங்கே வைத்திருக்கிறீர்போ லிருக்கிறது!

திகம்பர சாமியார்:—(ஜில்லா மாஜிஸ்டிரேட்டைப் பார்த்து) இப்போது இவர்சொன்ன வாக்கியங்களை நீங்கள் எல்லோரும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுகிறேன். பின்னல் ஒரு வேளை இவர் இதே வாயால் இதற்குமாருக எதையாவது சொன்னுலும் சொல்லுவார்—என்ருர்.

அவ்வாறு அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்துகொண்டிருந்த சமயத்தில் ஒரு ஸப்-இன்ஸ்பெக்டரும், சில ஜெவான்களும் சௌக்காரின் சமயல்காரரும் அப்பால் சென்று தேடி, மோட்டார் லாரி இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அதில் ஏறிக்கொண்டு போய் சௌக்காரின் கடையை அடைந்து, மேலே மூர்ச்சித்துக்கிடந்த மனிதரை தூக்கி லாரியில் போட்டுக்கொண்டு, வீட்டைப் பூட்டிவிட்டு. காவல்காரர்கள் நால்வரையும் அழைத்துக் கொண்டு, சுமார் பத்து நிமிஷ காலத்திற்குள் சுந்தரத்தின் பங்களாவிற்கு வந்து சேர்ந்தனர். அதுவன்றி, அவர்கள் மூன்ருவது வீட்டிற்குப் போய் அது வெளியில் பூட்டப் பெற்றிருந்ததைப் பார்த்துவிட்டு வந்தனர். அவர்கள் வந்துவிட்டதைக் கண்ட திகம்பரசாமியார் ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "சௌக்காருடைய பிணத்தை எடுத்து வந்தீரா? வந்திருந்தால், அவரைத் தூக்கிக் கொண்டு வாருங்கள்" என்ருர்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் சில ஜெவான்களை ஏவி, மோட்டார் லாரியில் படுக்கவைக்கப் பெற்றிருந்த மனிதரை ஒரு சாய்வான நாற்காலியில் சார்த்தி, நாற்காலியைத் தூக்கிக்கொண்டு வரச்செய்தார்.

அவரைப் பார்த்த சூபரின்டென்டென்ட், "இவர் வக்கீல் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள மிஸ்டர் கலியாணம் அல்லவா. இவருக்கு சொந்தமான, அன்னிபெஸன்ட் சிலைகள்தானே இரண்டு தடவைகளில் களவாடப்பட்டன. இவருக்கு சென்ற யுத்தத்தில் வலது கை போய் விட்டதே! இவர் இப்போது இறந்தா போய்விட்டார்?" என்றார்.

திகம்பரசாமியார்:—இவர் அவ்வளவு சுலபத்தில் எமனிடம் போகக் கூடியவரா? இவருக்கு இதுவரையில் காணுமல் போயிருந்த வலது கைகூட நேற்றிரவு மறுபடி முளைத்து விட்டதே. வலது கையைப் பாருங்கள்— என்றார்.

உடனே ஒரு ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் நாற்காலியண்டை சென்று, அவருடைய வலது கையைத் தூக்கி எல்லோருக்கும் காட்ட, அது அவருடைய இடது கையைப் போல, நல்ல ஆரோக்கியமான நிலைமையில் இருந்தது தெரிந்தது.

சூபரின்டென்டென்ட்:— (திகம்பர சாமியாரை நோக்கி மூக்கின்மேல் விரலை வைத்து) நாங்கள் இவரோடு பல தடவைகளில் பழகினேம். இவருக்கு வலது கை இருந்ததே தெரியவில்லையே. இதை நீங்கள் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?

திகம்பர சாமியார்:—இவருக்கு வலது கை இல்லை என்பதையே நான் முதன் முதலில் நம்பவில்லை. மிலிடரி இலாகா அதிகாரிக்கும், அக்கவுண்டென்டு ஜெனரலுக்கும் நான் கடிதம் எழுதினேன். கலியாணம் என்ற பெயருடைய மிலிடரி பென்ஷனர் யாரும் இல்லையென்று அவர்கள் மறுமொழி எழுதினார்கள்.

சூபரின்டென்டென்ட்:—இவர் வலது கை இல்லா தவர் போல் எதற்காக நடித்தார்?

திகம்பர சாமியார்:—வலது கை இல்லாதவர் போல் நடித்தால், இவர் கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்தவர் என்றோ, வலது கையில் கத்தியைப் பிடித்து ஆளை வெட்டக் கூடியவரென்றோ எவரும் சந்தேகிக்கவே மாட்டார்களல்லவா! சந்தேகத்திற்கிடமின்றி, அரிய பெரிய காரியங்களை சாதிக்கலாமல்லவா! தாம் கையில் லாதவர் என்று வக்கீல் நாராயண ஐயர் நம்பவேண்டு மென்று, அவரிடம் ஒரு கடிதம் எழுதி வாங்கிக்கொண்டு, அவருக்கு அரை ரூபாய் சன்மானம் வழங்கிய அசகாய சூர நடிகரல்லவா இவர்!

சூப்ரின்டென்டென்ட்:—இவர் ஸெளக்காரின் வீட் டிற்குள் இந்த நடு இரவில் எப்படி வந்தார்?

திகம்பர சாமியார்:—அதை உங்கள் உதவி ஆபீஸர் மிஸ்டர் சுந்தரத்தினிடம் கேளுங்கள். நான் புதிய ஸெளக்காரைக் கொன்று விட்டதாகவும், அவருடைய பிணம் மெத்தைமேல் இருப்பதாகவும் சொன்ஞர். உங்க ளுடைய மனிதர்கள் போய் இவரைத் தூக்கிக்கொண்டு வந்திருக்கிருர்கள்! புதிய ஸெளக்காருக்கு பதில் இவர் எப்படி வந்தார்? அவர் எங்கே போனுர்?

சுந்தரம்:—அவரை நீர் கொன்று எங்கேயோ ஒளித்துவிட்டு, இவரையும் அடித்து அங்கே போட்டிருக் கிறீர்?

திகம்பர சாமியார்:—(ஸெளக்காரின் காவற்காரர் களைக் கூப்பிட்டு) ஏனப்பா, மூன்ருவது வீட்டிலிருந்து சிலர் பெட்டியைக் கொண்டு வந்தார்களே! அப்போது இவர் வராததற்கு என்ன காரணம் சொன்ஞர்கள்?

காவற்காரர்கள்:—இவருக்குத் தேள் கொட்டிவிட்ட தனுல் வரவில்லை யென்றும், காலையில் வருவாரென்றும் சொன்ஞர்கள்.

திகம்பர சாமியார்:—அதன் பிறகு இதுவரையில் இவர் ஸௌக்காரின் வீட்டிற்கு வரவில்லையே?

காவற்காரர்கள்:—இல்லை.

சுந்தரம்:—அப்படியானல், இவர் மூன்ருவது வீட்டுக்காரர் அன்று என்றல்லவா அர்த்தமாகிறது. அவருக்கு வலது கை இல்லை; இவருக்கு அது இருக்கிறது. ஆகையால், அவர் வேறு, இவர் வேறு; வடிவத்தில் ஒற்றுமை யிருக்கலாம். ஒருகால் இவரும் அவரும் சகோதரர்களா யிருக்கலாம்.

திகம்பர சாமியார்:—(ஸௌக்காரின் சமயற்காரரை நோக்கி) ஏனப்பா, இன்றிரவு நீ ஸௌக்காரின் கூடவே இருந்தாயல்லவா? இந்தப் பெட்டி வந்ததற்கு முன்பாவது இவர் அங்கே வந்தாரா?

சமையற்காரன்:—இல்லை.

சுந்தரம்:—அப்படியானல்?

திகம்பர சாமியார்:—அப்படியானல், இவர் பெட்டிக்குள் ஆரோகணித்து வந்திருக்க வேண்டும்.

சுந்தரம்:—அப்படியானல் இப்போது இந்தப் பெட்டியில் இருந்து நீர் எப்படி வந்தீர்? அங்கேயும் பெட்டிக்குள் நீர்தான் போயிருக்க வேண்டும்?

சூப்ரின்டென்டென்ட்:— (திகம்பர சாமியாரை நோக்கி) ஸௌக்காரின் வீட்டிற்கு வந்த பெட்டிக்குள் இவர் வந்தார் என்பதற்கு திருப்திகரமான ஆதாரம் வேண்டாமா?—என்ருர்.

திகம்பர சாமியார், 'நான் ஒரு சிறிய ஸினிமா இயந்திரம் வைத்துக்கொண் டிருக்கிறேன். அது எதிரில் இருக்கும் வடிவங்களை உடனே படம் பிடித்துவிடும்; மனிதர் பேசுவதையும் அப்படியே பிடித்துக்கொள்ளும். அந்த இயந்திரத்தை இதோ இந்தப் பெட்டிக்குள் வைத்

துக்கொண்டு வந்திருக்கிறேன். அதில் பிடிக்கப்பட்டிருக்கும் காட்சியைப் பாருங்கள்" என்று கூறி பெட்டிக்குள்குள் இருந்த இயந்திரத்தை எடுத்து, அதற்குள் பிடிக்கப்பட்டிருந்த ஒரு காட்சி சூப்ரின்டென்டென்டினிடம் கொடுத்தார்.

அதைப் பெற்ற துரை வியப்போடு அதை உற்று நோக்கினர். ஸௌக்காரின் பொக்கிஷ அறையும் கூடத்தில் ஒரு பாகமும் அதில் தெரிந்தன. பொக்கிஷ அறைக்குள் ஒரு மூலையில் அடுக்கப்பட்டிருந்த ஸவரன் பைகளின் குவியலும், அதற்குப் பக்கத்தில் ஏழுடிப்பெட்டியும் காணப்பட்டன. ஏழடிப்பெட்டியின் மூடிகள் ஒன்றன் பின்னென்றாய்த் திறந்துகொண்டதும், உள்ளே இருந்த ஒரு மனிதர் குபீரென்று கிளம்பி ஒரு கையில் ரிவால்வர், இன்னொரு கையில் கத்தி முதலியவற்றுடன் வெளிப்பட்டு விசையாகச் சுற்றிப் பார்த்துவிட்டு, கூடத்தில் படுத்திருந்ததுபொல் காணப்பட்ட ஸௌக்காரின் வடிவத்தண்டை ஓடி, கத்தியால் கழுத்தை வெட்டியதும், அப்போது பின் பக்கத்தில் ஒருவர் ஓடிவந்து, முன்னவரை மண்டையில் அடிக்க, அடிபெற்றவர் மயங்கிக் கீழேவீழ, அடித்தவர் அங்கே மனித வடிவம்போலிருந்த தலையணை முதலியவற்றை விலக்கி அந்த மனிதருக்கு ஸௌக்காரின் சட்டை தலைப்பாகை முதலியவற்றை மாட்டிப் படுக்க வைத்து சால்வையால் மூடிவிட்டுக் கீழே இறங்கி ஓடியது ஆகிய சம்பவங்கள் வரையில் அடங்கிய காட்சி அந்தப் படத்தில் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் எடுக்கப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த சூப்ரின்டென்டென்ட் அபாரமான வியப்படைந்தவராய் அதை ஜில்லா மாஜிஸ்டிரேட் முதலிய மற்ற எல்லோருக்கும் காட்டியபின் திகம்பர சாமியாரிடம் கொடுத்தபடி. "இது, எவரும் எதிர்பார்க்காத புதுமையாகத்தான் இருக்கிறது! இந்த மனிதர் பெட்டிக்குள் இருந்தார் என்பதும், ஸௌக்காரை வெட்ட முயற்சித்தார் என்பதும் சந்தேகமறத் தெரிகின்

றன. ஸௌக்கார் அதை எதிர் பார்த்து தம்மைப் போல் பொய் வடிவம் செய்துவைத்துவிட்டு எங்கேயோ போய்விட்டா ரென்பதும் அநுமானிக்கக் கூடியதா யிருக்கிறது. இந்த மனிதரைப் பின்னல் நின்று அடித்து அவருக்கு ஸௌக்காரின் தோற்றத்தை உண் டாக்கிப் படுக்கவைத்தவர் ஸௌக்காரின் சமயற்காரர் என்பதும் தெரிகிறது. அதன் பிறகு இவர்கள் பெட்டி யையும் பைகளையும் எடுத்துக்கொண்டு வந்ததிலிருந்து, அதுவரையில் எங்கேயோ மறைவில் இருந்து படம் பிடித்த நீங்கள், இந்த ஆள் கீழே ஒடிக் கதவைத் திறந்துவிட்ட காலத்தில், இந்த இயந்திரத்தோடு பெட் டிக்குள் புகுந்து இதை மூடிக்கொண் டிருக்கவேண்டும்" என்றார்.

திகம்பர சாமியார்:-(ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி) நீங்கள் இப்போது போனபோது, மூன்றாவது வீட்டில் வசிக்கும் கலியாணத்தை அழைத்து வரச்சொன் னேனே! அழைத்து வந்தீர்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:--அவருடைய வீட்டின் வெளிக் கதவு மூடிப் பூட்டப்பட்டிருந்தது.

திகம்பர சாமியார்:—(சூபரின்டென்டென்டைநோக் கிப் புன்னகை செய்து) தம்மை தேள் கொட்டிவிட்ட தாகையால் மூன்றாவது வீட்டிற்கு வர முடியவில்லை யென்று சொன்னவர் நடு இரவில் வீட்டைப் பூட்டிக் கொண்டு எங்கே போயிருப்பார்! இவற்றால், இவரே மிஸ்டர் கலியாணம் என்பவர் என்றும், இவர் இதுவரை யில் வலது கை இல்லாதவர் போல் நடித்தார் என்பதும் தெளிவுபடவில்லையா?

சுந்தரம்:—அவர் தமது நோவைப் பொறுக்க மாட் டாமல், டாக்டர் வீட்டிற்குப் போயிருக்கலாம்.

சூபரின்டென்டென்ட்:—அவர் வேறு, இவர் வேறு என்று ஸ்தாபிப்பதில் என்ன பாயின்டு இருக்கிற தென்பது தெரியவில்லையா!

திகம்பர சாமியார் :—உங்கள் உதவி அதிகாரி பாயின்டில்லாமல் பேசுவாரா? அவர் அவ்வளவு மூட்டா ளல்ல. இந்த ஸினிமா இயந்திரத்தில் இன்னும் மேலே பிடிக்கப் பட்டிருக்கும் விஷயத்தையும் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். இவர்கள் இந்தப் பெட்டியையும் மூட்டை களையும் இங்கே கொண்டு வந்தவுடன் இவர்களுக்குள் சம்பாஷணை நடந்தது. இந்த இயந்திரத்தின் வாயை, பெட்டியின் ஒரு துளையில் வைத்து அதை அப்படியே பிடித்திருக்கின்றேன். அதையும் கேளுங்கள்—என்று கூறி விசையை முடுக்கிவிட்டார்.

உடனே அதற்குள்ளிருந்து ஒரு படம் வெளியில் வந்தது. நான்கு போலி ஜெவான்கள் லாரியோடு வந்த வுடன், நிஜார்க்காரரான சுந்தரம், மூட்டைகள் இறக்கப் பட்டதும் அதில் தெரிந்ததன்றி, அவருக்கும் கந்தசாமிக் கும் நடந்த சம்பாஷணை முழுதும் அப்படியே மறுபடி த்வனித்தது. அதைக் கேட்கக் கேட்க, அங்கிருந்தோர் அனைவரும் தங்கள் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் அடக்க மாட்டாமல் அடிக்கடி 'பலே' 'பலே' என்று கூறிக் கைகொட்டி நகைத்தனர். முக்கியமாய் ஸவரன் கள் காலணுக்களாகமாறிய காலத்தில் நிகழ்ந்த சம்பா ஷணையே அவர்களுக்குப் பெரிய விகட கவியின் ஆசியம் போலிருந்ததாகையால் அந்த இடத்தில் ஜில்லா மாஜிஸ் டிரேட் முதலிய பெரிய அதிகாரிகள் கூடத் தம்மை மறந்து குழந்தைகள்போல் நகைத்தனர். உடனே திகம்பர சாமியார் தாம் புதிய ஸௌக்காருடைய வீட்டில் இருந்தபடி, பெயர்க்கப்பட்ட ஜன்னலின் வழியாக வக் கீலுடைய வீட்டிற்குள் போய், அடுத்த வீடான கலி யாணத்தின் ஜாகையில் டெலிபோன் வைக்கப்பட்டி ருந்த இடத்திற்குப் பக்கத்தில் இருந்து, பலதடவைகளில் அவர் அஸிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட் சுந்தரத் துடன் சம்பாஷித்ததை யெல்லாம் உடனுக்குடன் எழுதி யிருந்த காகிதக் கற்றையை படித்துக் காட்ட, அதைக் கொண்டே அப்போது தாங்கள் வரவழைக்கப்பட்டோ

மென்பதை போலீஸ் அதிகாரிகள் சுலபத்தில் யூகித்துக்கொண்டனர். அதே காலத்தில் சில ஸப்-இன்ஸ்பெக்டர்களும் ஜெவான்களும் சுந்தரத்தையும் நான்கு போலி ஜெவான்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

உடனே திகம்பர சாமியார் போலீஸ் ஜெவான்களை நோக்கி, "நீங்கள் இந்தச் சுரங்கத்திற்குள் போய் அங்கே இருக்கும் சொத்துக்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்றார்.

ஜெவான்கள் பன்முறை கீழே சென்று அங்கிருந்த ஏராளமான சொத்துக்களைக் கொணர்ந்து மேலே பரப்பினர். பழைய ஸௌக்காருடைய வைரங்கள், ஆபரணங்கள், அன்னிபெஸன்ட் சங்கத்தின் சிலைப்பெட்டி, இரண்டு சிலைகள் முதலிய ஏராளமான பொருள்கள் அங்கிருந்து வெளிப்படுத்தப்பட்டன.

அவைகளைக் கண்ட போலீஸ் சூபரின்டென்டென்ட், "பழைய ஸௌக்காருடைய சொத்துகளுக்குத் துணையாக, இன்னம் அநேக திருட்டுக்களில் சம்பந்தப்பட்ட சொத்துகளும் இங்கே இருக்கின்றன!" என்றார். அப்போது சுந்தரம், "இவைகளை யெல்லாம் யாரோ பகைவர்கள் கொண்டுவந்து வைத்திருக்க வேண்டும்" என்றார்.

உடனே திகம்பர சாமியார் புன்னகை செய்து, "நான் முதலில் ஒரு விஷயத்தை கவனத்தில் வைத்துக் கொள்ளச் சொன்னது நினைவிருக்கிறதா! இந்தப் பங்களாவும், இதிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் இவருடைய அநுபவத்தில் இருப்பதாகச் சொன்ன இவர் இப்போது இவைகள் பிறருக்குச் சொந்தமானவை என்கிறார்" என்றார்.

அதைக் கேட்டு எல்லோரும் மறுபடி நகைத்தனர். அப்போது சூபரின்டென்டென்ட், "இப்போது வெளி

யாயிருக் நம் விஷயங்களையும், இதற்குமுன் நடந்த சிலைத் திருட்டுகளையும் பார்த்தால், இந்த ஸௌக்கார் கடையில் பெட்டியை வைத்துத் திருடுவதற்குப் பூர்வ பீடிகை யாகவே இவர்கள் இந்த சிலைத்திருட்டுகளை நடத்தி ஆடம் பரம் செய்து சிலைக்கு ஒரு பிராபல்யத்தைக் கொடுத் திருக்கிறார்கள்! இவர்களுடைய மூளை அபாரமான யூகத் தோடுதான் வேலை செய்திருக்கிறது! இதெல்லாம் சரி தான். அந்த ஸப்-இன்ஸ்பெக்டர் கோவிந்தராவை ராஜி நாமாக் கொடுக்கும்படி செய்தது யார்?" என்றார்.

திகம்பர சாமியார்:—அதுவும் சுந்தரம்தான். கோவிந்தராவ் நல்ல திறமைசாலி; அவர் இருந்தால், எப்படியும் முயற்சித்து திருடர்களைக் கண்டு பிடித்துவிடு வார் என்று பயந்தே இவர் உங்களுடைய பெயரைச் சொல்லி அவரை பயமுறுத்தி ராஜிநாமா கொடுக்கச் செய்து, உடனே ஓர் ஆளை அவருடைய வீட்டிற்கு அனுப்பி, மேலும் பயமுறுத்தி, ஊரைவிட்டுப் போகச் செய்திருக்கிறார். இவைகள் சுலபத்தில் அநுமானிக்கப் படத்தக்க அற்ப விஷயங்கள் தானே.

சூபரின்டென்டென்ட்:—அநியாயமாய் வக்கீல் நாராயண ஐயரும், அவருடைய தம்பியும் இவர்களுடைய சூழ்ச்சி வலையில் சிக்கி, அவமானமும், இழிவுகளும், மனவேதனையும் அடைந்து விட்டனர். அவர்களுடைய விஷயமும், ஸப்-இன்ஸ்பெக்டர் கோவிந்த ராவின் விஷயமும் நிரம்பவும் பரிதாபகரமா யிருக்கின்றன.

திகம்பர சாமியார்:—அவர்களுக்கு நீங்கள்தான் பரி காரம் செய்து கொடுக்கவேண்டும். அது உங்களுக்கு ஒரு பெரிய காரியமல்ல. சரி; எனக்கு நேரமாகிறது. கைதி களை யெல்லாம் இனி தக்கபடி நடத்திக் கொள்ளுங்கள்.

நான்உத்தரவுபெற்றுக்கொள்ளுகிறேன். இந்த அகாலத்தில் உங்கள் தூக்கத்தைக் கெடுத்து உங்களை அசௌகரியத்திற்கு ஆளாக்கிவிட்டேன். எல்லோரும் மன்னிக்க வேண்டும்—என்று கூறிவிட்டு பக்கத்தில் திரும்பி, "வா, அப்பா, குமாரசாமி, நாம் ஊருக்குப் போவோம். நமக்கு வேறு அவசர ஜோலி இருக்கிறது" என்று கூறியபடி நடக்க எத்தனித்தார்.

அவர் சௌக்காரின் சமயற்காரனைப் பார்த்து, 'குமாரசாமி' என்று அழைத்தது எல்லோரையும் திடுக்கிடச் செய்துவிட்டது. முக்கியமாய்ப் போலீஸ் சூபரின்டென்டென்ட் மூக்கின்மேல் விரலை வைத்து, "என்ன ஆச்சரியம் இது! நீங்கள் உங்கள் மைத்துனரான குமாரசாமி பிள்ளையை புதிய சௌக்காரிடம் சமையற்காரனாக ஏற்படுத்தி, அவர் சௌக்காருக்கு யுக்திசொல்லிக் கொடுக்கச் செய்து, காலணா மூட்டைகளை அடுக்கி வைத்துக்கொண்டு, பாண்டிச்சேரியில் ஸவரன் வாங்கியதாகக் கதை கட்டி கலியாணத்தின் மனதில் துராசையை உண்டாக்கச் செய்து, அவனுடைய வலையிலேயே அவனை வீழ்த்தினீர்களா! ஐயா, குமாரசாமி பிள்ளை, அந்தப் புதிய மார்வாடி இப்போது எங்கே ஒளிந்துகொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லாமல் போகிறீர்களே! அவரை நாங்கள் எங்கே தேடுவோம்?" என்றார்.

குமாரசாமி பிள்ளை முக மலர்ச்சியோடு திகம்பர சாமியாருடைய முகத்தைப் பார்த்தார். திகம்பர சாமியார், "புதிய சௌக்காரை நான் என் உடம்பிற்குள்ளே தான் ஒளிய வைத்துக்கொண்டிருக்கிறேன். அவரைத் தேட நீங்கள் அதிக தூரம் போகவேண்டியதில்லை; இனி அவரை நீங்கள் பார்க்கவேண்டுமானால், "**திகம்பர சாமி**

யார், மன்னர்க்குடி'' என்று தந்தி கொடுங்கள். அவர் உடனே வருவார்'' என்று புன்னகையோடு கூறினர்.

அதைக் கேட்கவே, எல்லோரும் ஒரே காலத்தில், "ஆகா! புதிய சௌக்காராக வந்தவரே திகம்பர சாமி யாரா! அடாடா! இதுவரையில் அது எவருக்கும் தெரிய வில்லையே! இவருடைய பெயர் சொக்கலிங்கம் பிள்ளை யல்லவா; அதை மாற்றி ஸொஹ்றஹன்மல் சௌக்கார் என்று வைத்துக்கொண்டாரோ! ஓகோகோ! பழைய சௌக்கார் புதியவரைத் தம்முடைய அம்மான் என்றல்லவா குறிப்பிட்டார். அப்படியானல், பழைய சௌக்காரும் இதில் கலந்து வேலை செய்திருக்கிருர்'' என்று கூறி ஆர்ப்பரித்தனர்.

அப்போது அந்தக் கும்பலில் இருந்து திடீரென்று முன்னல் வந்த பழைய சௌக்கார் ஆநந்தபாஷ்பம் சொரிந்த கண்களோடு அபாரமான நன்றி யறிதலால் தழுதழுத்த குரலில், 'இந்த மகானை நான் என் அம்மான் என்று சொன்னது போதாது! இவர்தான் எனக்கு மறுபடி உயிர் கொடுத்த பிரத்தியக்ஷ தெய்வமாகிய என் அப்பன்! இவருக்கு நான் இந்த உலகையே கைம்மாறு செய்வதானலும், அது சரியான ஈடாகாது'' என்று கூறித் தமது கையில் ஆயத்தமாகக் கொணர்ந்திருந்த இரண்டு வைர ஆரங்களை திகம்பர சாமியார், குமாரசாமி பிள்ளை ஆகியோருடைய கழுத்தில் போட, அவரோடு வந்திருந்த சிலர் தாம் கொணர்ந்திருந்த கற்கண்டை அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கினர்.

அன்றிரவு திகம்பர சாமியார் கொள்ளைக்காரர்களைப் பிடித்துவிடப் போகிருர் என்பது சௌக்காருக்கு ஏற்கனவே தெரியுமாதலால், அவர் சில மோட்டார்

வண்டிகளில் மேளக்காரர்கள், பாண்டு வாத்தியக்காரர்கள், காந்த விளக்குக்காரர்கள் முதலியோரை அழைத்து வந்திருந்தாராதலால், திகம்பர சாமியாரும், குமாரசாமி பிள்ளையும் மோட்டார் வண்டியில் உட்கார வைக்கப்பட்டனர்; வாத்தியங்கள் முழங்க, போலீஸார் அனைவரும் அணிவகுத்து முன்னால் செல்ல, கைதிகள் கைவிலங்குகளுடன் இடையில் போக, அந்த ஊர்வலம் நான்கு ராஜ வீதிகளின் வழியாகச் சென்று, கைதிகளை சிறையிலடைத்து விட்டு, விருந்தினரிருவரையும், பழைய சௌக்காருடைய பங்களாவிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது.

அங்கு சௌக்கார் தமது 25 லக்ஷம் ரூபாய் பெறுமான சொத்துக்கள் திகம்பர சாமியாரால் மீட்கப்பட்ட வைபவக் கொண்டாட்டத்தை மிக விமரிசையாக இன்னமும் நடத்திக்கொண்டிருக்கிறார்.

பொங்கும மங்களம் எங்கும் தங்குக!!!

UNIVERSITY LIB... 557 MADRAS
LIBRARY, MADURAI
1324
EXTENSION LIBRARY